janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 அக்டோபர் 02 - அக்டோபர் 08 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 26




## மித்திர பேதம் பேசும் தின ஏடு!



நல்ல நண்பர்களைக் கண்டு பொறாமைப்படும் நபர் – இருவருக்கிடையே மித்திர பேதம் மேற்கொண்டு, நண்பர்களிடத்தில் மோதலை >>>

ப 02

## இந்துக்களின் இகழ்ச்சியே மனு ஸ்மிருதி சூழ்ச்சி...



இந்துக்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு அற்ப மகிழ்ச்சியில் திளைக்கும் கூட்டம் சனாதன தர்மம், மனு ஸ்மிருதி இவைகள் >>>

ப 05

## கோர்ப்பசேவ் மேற்குலகின் மீட்பர்



கோர்ப்பசேவ் அமைதி நாயகரா அல்லது அவல நாயகரா என்ற பொருளில், பாட்டாளி படிப்பு வட்டம் சனியன்று (10.9.2022) கூட்டம் நடத்தியது. >>>

ப 08

### அக். 2 தேசத் தந்தை காந்தி பிறந்தநாள்

# தமிழகம் முழுவதும் சமூக நல்லிணக்க மனிதச் சங்கிலி



**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:**

## சிபிஐ, சிபிஐ[எம்], விசிக அறைகூவல்!



அண்மைக் காலமாக தமிழகத்தில் வெறுப்பு அரசியலை விதைத்து வன்முறைகளைத் தூண்டி பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான சங்பரிவார் அமைப்புகள் திட்டமிட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

தற்போது கோவையை மையப்படுத்தி இந்த முயற்சிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக ஆங்காங்கே பெட்ரோல் குண்டு வீச்சுகளும் நடைபெற்று வருகின்றன. இவற்றிற்கு காரணமான அனைவரையும் காவல்துறை விரைந்து கைது செய்து சிறைப்படுத்த வேண்டும்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில், நச்சு அரசியலுக்கு இடமளிக்க வேண்டாமென தமிழக மக்களை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் தமிழகத்தின் அமைதியையும், நல்லிணக்கத்தையும் பாதுகாக்க மாநில அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். இதனை யாம் வரவேற்கிறோம்.

அத்துடன் மதரீதியில் மக்களைப் பிளவுபடுத்தும் சங்பரிவார்களின் முயற்சிகளைப் புறக்கணிப்பதோடு அவற்றை முறியடிக்க முன்வர வேண்டுமென்றும், எவ்வித ஆத்திரமூட்டலுக்கும் இரையாகி விடக்கூடாது என்றும் பொது மக்களை கேட்டுக் கொள்கிறோம்.

தேசத் தந்தை மகாத்மா காந்தியின் பிறந்த நாளை தேர்வு செய்து தமிழகத்தில் 50 இடங்களில் அணிவகுப்பு நடத்தப் போவதாக ஆர்.எஸ்.எஸ். அறிவித்திருக்கிறது. காந்தியடிகளை படுகொலை செய்த குற்றச்சாட்டுக்கு ஆளான ஆர்.எஸ்.எஸ். இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவது அரசியல் உள்நோக்கம் கொண்டதாகும். மேலும் அவர்கள் அணிவகுப்பு நடத்துவதற்கு அனுமதியளிக்கும்படி தமிழக காவல்துறைக்கு உயர்நீதிமன்றம் வழிகாட்டுதலைத் தந்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

இந்நிலையில், சங்பரிவார்களின் இந்த மக்கள் விரோதப் போக்கைக் கண்டிக்கிற வகையிலும், தமிழகத்தில் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கிற வகையிலும் அக்டோபர் 2 அன்று மாலை 4 மணியளவில் தமிழகம் முழுவதும் "சமூக நல்லிணக்க மனிதச் சங்கிலி" நடைபெறவுள்ளது.

இந்த மனிதச் சங்கிலியில் அனைத்துத் தரப்பு, மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் பங்கேற்குமாறு வேண்டுகோள் விடுக்கிறோம்.

மக்கள் ஒற்றுமை, மதச்சார்பின்மை, மத நல்லிணக்கம், சமூக அமைதி, மாநில வளர்ச்சி ஆகியவற்றை காப்பாற்றும் முயற்சியின் ஒரு நடவடிக்கையே இது. இதற்கு தமிழக மக்கள் தங்கள் முழு ஆதரவையும் நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

# ஆர்.எஸ்.எஸ். அமைப்பை ஏன் தடை செய்யவில்லை

## லாலு பிரசாத் கேள்வி

அண்மையில் பீகாரில் பா.ஜ.க. உடனான கூட்டணியை முறித்துக் கொண்ட முதலமைச்சர் நிதிஷின் ஜே.டி.யூ., லாலுவின் ஆர்.ஜே.டி, காங்கிரஸ், இடதுசாரிகள் கூட்டணி அமைத்து ஆட்சி அமைத்துள்ளது. முதல்வர் நிதிஷ்குமாரும், துணை முதல்வர் தேஜஸ்வியும் டெல்லி சென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, மார்க்சிஸ்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எச்சூரி, காங்கிரஸ் தலைவர் சோனியா உள்ளிட்ட அனைவரையும் சந்தித்து விட்டு திரும்பினர்.

இது டெல்லியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பா.ஜ.க.வுக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சிக்கு இது முதல் படியாக அமைந்தது. இதையொட்டி உடல்நலக்குறைவால் அவதிப்படும் முன்னாள் முதல்வர் லாலுவும், நிதிஷ்குமாரும் இணைந்து டெல்லி சென்று சோனியாவை சந்தித்துப் பேசினர். தேசிய அரசியலில் இது ஒரு முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.



வரும் 2024 ஆம் ஆண்டும் நடைபெற இருக்கும் மக்களவை தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்த எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டுவதற்கான முக்கியப் புள்ளியாக இது கருதப்படுகிறது. செய்தியாளர்களிடம் பேசி லாலு பிரசாத் யாதவ் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பை மத்திய அரசு தடை செய்துள்ளது. இந்து மத வெறியை பரப்புகிற ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை ஏன் மத்திய அரசு தடை செய்யவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

பல்வேறு மாநில அரசுகளும் அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியாவை தடை செய்ததாக மத்திய அரசு சொன்னாலும் நாடு முழுவதும் அதன் அலுவலகங்களில் தேசிய புலனாய்வு ஏஜென்சியின் மூலம் அதிகாரிகள் சோதனை நடத்தி 300க்கும் மேற்பட்ட அதன் நிர்வாகிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு பி.எஸ்.ஐ. அமைப்பை தடை செய்ய மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. இந்த நிலையில்தான் லாலு பிராசத் யாதவ் இந்து மதவெறி அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.ஏன் தடை செய்யப்படவில்லை என்ற முக்கியமான கேள்வியை எழுப்பியுள்ளார்.

**கட்சிக் கடிதம்**




# மித்திர பேதம் பேசும் தின ஏடு!

**பேரன்புமிக்க தோழர்களே!**

**நல்ல நண்பர்களைக் கண்டு பொறாமைப்படும் நபர் – இருவருக்கிடையே மித்திர பேதம் மேற்கொண்டு, நண்பர்களிடத்தில் மோதலை உருவாக்கி அதன் மூலம் தனக்கு ஏதும் கிடைக்காதா? என்ற அற்ப புத்தி படைத்த நபர்களின் செயல்பாட்டை அறிவோம்.**

நாட்டில் நடைபெற்று வரும் அரசியல் சம்பவங்களை அறிவோம்! குறிப்பாக ஒன்றிய அரசின் செயல்பாடுகள், மேற்கொள்ளும் நடவடிக்கைகள், தனக்கு கிடைத்துள்ள அதிகாரத்தைக் கொண்டு மக்களுக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்றுதல், ஏழை எளிய மக்களுக்கு எதிராக, தொழிலாளர்களுக்கு எதிராக, விவசாயிகளுக்கு எதிராக, விவசாயத் தொழிலாளர்களுக்கு எதிராக செயல்பட்டு வரும் ஒன்றிய அரசு, சட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது.

மாநில உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டு வருகிறது.

மாநில அரசுகள் குறிப்பாக பாஜக ஆட்சியில் இல்லாத அல்லது பாஜகவின் கூட்டணியில் அங்கம் பெறாத எதிர்க்கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களில் ஆளுநர்களைக் கொண்டு, போட்டி அரசு நடத்துகின்றது.

சட்டப் பேரவைகளில் நிறைவேற்றப்படுகின்ற மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போடுகின்றார். சட்டப்பேரவை அவ மதிக்கப்படுகின்றது.

மக்கள் போராடிப் பெற்ற உரிமைகள் – சலுகைகள் மோடியின் ஆட்சியில் பறிக்கப்படுகின்றன.

மக்களுக்கான ஆட்சியாக இல்லாமல் குறிப்பிட்ட நபர்களின் நலன் காக்கும் ஆட்சியாக நடைபெற்று வருகின்றது.

வெள்ளையர்களின் வரி விதிப்பைக் கண்டித்து அன்று நாட்டு மக்கள் போராடினார்கள்.

இன்று மோடியின் ஆட்சியில் மக்கள் பயன்படுத்துகின்ற அத்தியாவசியப் பண்டங்கள் உட்பட அனைத்து பொருட்களுக்கும் ஜிஎஸ்டி வரி விதிக்கப்பட்டு மேலும் உயர்த்தப்படுகிறது.

அரசியலமைப்புச் சட்டம் அலட்சியப் படுத்தப் படுகின்றது– அரசியலமைப்புச் சட்டம் உருவாகியுள்ள அமைப்புகள் சீர்குலைக்கப்படுகின்றன.

எவர் தலையீடும் இன்றி சுதந்திரமாக செயல் படக்கூடிய அமைப்புகள் ஒன்றிய அரசின் கட்டளைக்கு காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பல்வேறு மதங்களைக் கொண்ட நாட்டில், மத வேறுபாடுகளின்றி, நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வரும் மக்களை, தங்களின் குறுகிய அரசியல் நோக்கம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, மதத்தின் பெயரால் மக்களை பிளவுபடுத்தி, மகத்தான மதச்சார்பின்மை கொள்கையை ஆழ குழிதோண்டி புதைத்து வருகின்றது.

நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர். சொந்த நாட்டில் அனாதைகளைப் போன்று, அகதிகளைப் போன்று வாழ வேண்டிய நிர்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு கேள்விக் குறியாகியுள்ளது.

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்ளாத மோடி அரசு, குழப்பத்தை உருவாக்கி, மக்களிடையே மத மோதல்களை உருவாக்கி, பிளவில் ஆதாயம் தேடுகின்ற அற்பத்தனமான ஆட்சியாளர்களை நாடு இதுவரை கண்டதில்லை.

எந்த ஒரு அரசும் மக்களின் ஒற்றுமை குறித்தே கவலைப்படும். ஆனால் மோடி அரசு இதற்கு மாறாக வினோத அரசாக உள்ளது.

அகில இந்திய அளவிலான கட்சிகள், மாநிலக் கட்சிகள் உள்ள நாட்டில் தங்களது கட்சி மட்டுமே இருக்க வேண்டும், தங்களது ஆட்சி மட்டுமே ஒன்றியத்திலும், மாநிலங்களிலும் ஆட்சி நடத்திட வேண்டுமென்று மோடியின் கட்சி விரும்புகிறது என்பது மட்டுமல்ல, தனக்குள்ள ஒன்றிய ஆட்சி பலத்தைக் கொண்டும், பண பலத்தைக் கொண்டும் நிறைவேற்றியும் வருகின்றது.

பிற கட்சித் தலைவர்களை, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தையில் பொருட்களை விலை கொடுத்து வாங்குவது போன்று, அரசியல் கட்சிகளையும் – அதன் தலைவர்களையும் விலை கொடுத்து வாங்கி எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தி, பிளவுபடுத்தி வருகின்றனர்.

பிற கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்தும், பதவி ஆசை காட்டியும், பண ஆசை காட்டியும், தங்களது கட்சியில் சேர்த்து, ஆட்சி கவிழ்ப்பு நாடகத்தை அரங்கேற்றி வருகின்றார்கள்.

ஜனநாயக படுகொலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஜனநாயக முறையில் அதிகாரத்திற்கு வந்தவர்கள், இன்று ஜனநாயகத்திற்கு எதிராக செயல்பட்டு வருகின்றார்கள். ஜனநாயகம் என்ற ஏணியைப் பயன்படுத்தி உச்சத்திற்கு வந்தவர்கள் இன்று ஏறி வந்த ஏணியை எட்டி உதைக்கிறார்கள்.

இத்தகையை அரங்கேற்றங்களை மேற்கொண்டிருப்பது, எதேச்சையானதல்ல. திட்டமிட்டே செயல்படுத்தப்படுகின்றது.

பாஜக ஆட்சி என்பது ஆர்எஸ்எஸ் அமைப்பின் அரசியல் பிரிவாக செயல்பட்டு வருகின்றது. ஆர்.எஸ்.எஸ்.ஸின் கரமாக பாஜக செயல்பட்டு வருகின்றது.

இவைகள் உட்பட மேலும் பல செய்திகள் குறிப்பாக, பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகள், தலித் மக்கள், பழங்குடி மக்கள் பாதிக்கப்பட்டு வருவது குறித்தும், தேர்தல் சீர்திருத்தம் குறித்தும், விஜயவாடா மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ள அரசியல் வரைவு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை சென்றவார கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தோம்.

நமது கட்சியின் அகில இந்திய 24வது மாநாட்டில் நாம் முன்வைக்கப்படவுள்ள வரைவு அரசி யல் தீர்மானம் என்பது நமது கட்சியின் உயர் அமைப்பான தேசியக் குழு கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாகும்.

தேசியக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் ரகசியமானதல்ல.

நாட்டு மக்கள் அனைவருக்குமானது. நாட்டு மக்கள் அனைவரின் நலம் சார்ந்தது. மக்களின் மீது அக்கறையுள்ள தீர்மானம்.

நமது தீர்மானத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தி உள்ளோம்.

ஆங்கிலத்தில் மட்டுமல்லாது, அனைத்து மாநில மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள நூலை அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பியுள்ளோம் – ஊடகங்களுக்கும் அனுப்பி உள்ளோம்.

வரைவு அரசியல் தீர்மானம் குறித்து தங்களது கருத்துக்களை யார் வேண்டுமானாலும் கூறலாம், அவ்வாறு கூறப்பட்டுள்ள கருத்துக்களை வரவேற்கின்றோம். எவ்வித தங்கு தடையும் இல்லை.

இவைகள் குறித்து எல்லாம் சென்ற வார கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தோம்.

இத்தகைய மிக உயர்ந்த ஜனநாயக மான்பை அனைவரும் வரவேற்பார்கள் என்று கருதுகின்றோம்.

தினமலர் ஏடு எத்தகைய அமைப்பிற்கு, அரசியல் கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டு வருகின்றது என்பது குறித்து அனைவரும் அறிந்ததே!

**தினமலர் ஏடு பாஜகவிற்கு அல்லது அக்கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலையாருக்கு தனது விசுவாச வாலை ஆட்டுவது ஒன்றும் புதிதல்ல.**

வரைவு அரசியல் தீர்மானம் அண்ணாமலைக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்பது குறித்து சென்ற கடிதத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

அரசியல் தீர்மானம் குறித்து அண்ணாமலையிடம் இருந்து எவ்வித கருத்தும் வெளியாகவில்லை.

ஆனால், அவருக்காக வக்காலத்து வாங்கி வரைவு அரசியல் தீர்மானத்தில் உள்ள ஒரு சில பகுதியை மட்டும் தினமலர் ஏடு வெளியிட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, திமுகவின் கிளையாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயல்படுகிறது என்ற ஆகப்பெரிய கண்டுபிடிப்பை செய்துள்ளது.

அச்செய்தியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மிக மென்மையான போக்கை கையாளுகிறது, இத னால் தொண்டர்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்று தனது

தொடர்ச்சி 6ம் பக்கம் >>



# நூற்றாண்டு காணும் என்.டி.வானமாமலை

- வழக்கறிஞர் அருணாச்சலம்

**"என்.டி.வானமாமலையும் நானும் மிகச்சிறந்த நண்பர்கள். நான் கடந்து வந்த பாதையில் வானமாமலை மிகச் சிறந்த நண்பர்" என்றுநட்பின் உச்சத்தை சுட்டிக்காட்டி தொடங்குகிறார் மாண்புமிகு மக்கள் நீதிபதி திரு வி.ஆர்.கிருஷ்ணய்யர். "வானமாமலை என்கிற உயர்வான ஆளுமையை வழக்கறிஞர் தொழிலுக்காகவோ அல்லது ஏராளமான பணம் உருவாக்கும் கருவியாகவோ அடக்கிவிட முடியாது" என்று அழுத்தமாக கூறுகிறார்.**

"சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும். என்.டி. வானமாமலை அவர்களுக்கு நிலை மையை விளக்கி ஒரு கடிதம் எழுதி கொடுத்து அனுப்பி னேன். கொஞ்ச நாள் கழித்து என்.டி.வி. அவர்களிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. பிரித்துப் பார்த்தேன். சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஆறு தோழர்களுக்கும் விடுதலை அளித்து தீர்ப்பளித்த உயர் நீதிமன்ற ஆணையின் நகல் இருந்தது. நன்றியாக என். டி.வி.க்கு ஒரு அஞ்சல் அட்டையில் எழுதினேன். அந்த வழக்கை நடத்தியதற்காக நான் அவருக்கு அளித்த கட்டணங்கள் இதுதான்."

இவ்வாறுதான் "மனிதத்தின் கதை" "கரைசேர்க்கும் உணர்ந்திருப்பாய்" என்ற என்.டி.வானமாமலை பற்றி நான் எழுதிய புத்தகத்தின் முன்னுரையில், சாகித்திய அகாடமி எழுத்தாளர் பொன்னீலன் என்.டி.வி. பற்றி குறிப்பிடுகிறார்.

உயர்நீதிமன்றத்தின் அன்றைய தலைமை நீதிபதி ஏ.பி.ஷா அவர்கள் அனைத்து நீதிபதிகள் அடங்கிய குழு அமர்வில் ஆற்றிய இரங்கல் உரையில், "சுதந்திரத்திற்கு பின் கம்யூனிஸ்ட் கட்சி ஐந்து ஆண்டுகள் மிக மோசமான அடக்கு முறைகளுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த நெருக்கடியான நேரத்தில் போலீஸ் அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டு தவித்த அவரது மாவட்ட கட்சித் தோழர்களுக்கு தன்னு டைய முழு ஒத்துழைப்பை நல்கி போரா டினார். அவரது தொடக்ககால வழக்கறிஞர் தொழிலின் அதிகமான நேரங்கள் கிரிமினல் வழக்குகளில் முடக்கப்பட்டு, கட்சித் தோழர் களைக் காப்பாற்றுவதற்காக வழக்குகள் நடத்துவதிலேயே செலவழிக்கப்பட்டது"

"கடைசியாக தன்னுடைய கருப்பு அங்கியை கொக்கியில் மாட்டும் வரை ஆர்.நல்லகண்ணு மீது அரசு ஜோடித்த அவதூறு வழக்கே என்.டி.வி. ஆஜரான கடைசி வழக்காகும். சென்னை உயர்நீதி மன்றத்தில் கிரிமினல் வழக்குகள் நடத்து வதில், ஈடுஇணையற்றவராக விளங் கினார்..."

சட்டக் கல்லூரி படிக்கும்போதே கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக சேர்ந்து தொடர்ந்து கட்சி வழக்குகளையும், ஏனைய கிரிமினல் வழக்குகளையும் ஆற்றலுடன், திறமை யுடன் 60 ஆண்டுகளுக்கு மேல் நடத்தி, இளம் வழக்கறிஞர் களுக்கெல்லாம் ஒரு பாலமாக விளங்கியவர் மூத்த வழக்கறிஞர் என்.டி.வானமாமலை.

நாங்குனேறி, திருவெட்கடாச்சாரி வானமாமலை என்ற என்.டி.வி. 1922 செப்டம்பர் 22ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்து, அவர் வாழ்க்கைப் போராட்டங்களின் மூலம் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தவர். அவருக்கு நூறு வயது பூர்த்தியாகி செப்டம்பர் 23, 2022 தொடங்கி அவருடைய நூற்றாண்டைக் கொண்டாடுவதற்கு நாம் பெறும் பேறு பெற்றிருக்கிறோம்.

என்.டி.வி.யின் இந்த நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் நீதிமன்றங்களிலும், நீதிமன்றங்களின் வழக்கறிஞர் சங்கங் களிலும், அவர் கட்டி வளர்த்த இந்திய – சோவியத் நட்புறவு இயக்கங்களிலும் ஐ.ஏ.எல். என்று குறுக அழைக்கப்படும் உலக வழக்கறிஞர் சங்கத்தோடு இணைக்கப்பட்ட, இந்திய வழக்கறிஞர் சங்கத்திற்கும், நீதியரசர் திரு. கிருஷ்ணய்யர் அவர்களுக்கும், தங்களது தோள்களில் தூக்கி சுமந்த இந்திய வழக்கறிஞர் சங்கத்திலும் என்.டி.வானமாமலை மக்கள் சட்ட குழுமத்திலும் வெகு விமர்சையாக இந்த வருடம் முழுவதும் கொண்டாடப்பட இருக்கிறது. இந்த முதலாளித்துவ ஜனநாயக நாட்டில் மூலதனங்களை விதைத்து அறுவடை செய்து கொண்டிருக்கிற நேரத்தில், அத்தகைய தொழில்முறை, சட்ட வரையறைகளுக்கு உட் பட்டதுதான் என்று வியாக்கியானம் செய்யக்கூடும். அத்தகைய மந்தை ஓட்டத்தில் நடை பயணம் மேற்கொள்வதற்கு தயங் கியவராக மட்டுமல்லாமல் மறுத்து நின்றவர் என்.டி.வி. அதையும் கடந்து எதிர்த் திசையில் பயணப்பட்டவர் என்று தான் குறிப்பிட வேண்டும். இந்த வகையில், தான் தொடர்கின்ற அறிவுசார் பணி களில் ஒரு மக்கள் பணியாளனாக ஒரு புரட்சிகர வழக்கறி ஞராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர் தான் என்.டி. வானமாமலை. அவர் நமக்கு ஒரு சமூக வழக்கறிஞராகவும், போராட்ட குணம் நிறைந்த சமூக மனிதனா கவும் காட்சி யளிக்கின்றார்.

1985ல் தமிழ்நாடு ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டு நடவடிக்கை குழு அரசுக்கு எதிராக மிகப் பெரும் போராட்டத்தை துவங்கினர். அரசாங்கமும் இவர் களுடைய பிரச்சனைகளுக்கு செவி மடுக்கவில்லை. போராட்டம் முடிவிற்கு வந்தபாடில்லை.

ஒரு மாதத்திற்குள் பரபரப்பாக தற்காலிக வேலை நீக்கம், நிரந்தரப் பணி நீக்கம் என்று நூற்றுக்கணக்கான பணியாளர்கள் பாதிப்பிற்கு உட்படுத்தப்பட்டனர். என்.டி.வி. அவர்கள் எந்த களைப்போ, சலிப்போ இல்லாமல் பணியாளர்களுக்கு எதிராக அரசால் பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவிற்கு எதி ராகவும் வழக்குகளைத் தொடுத் தார். எந்த வழக்கறிஞர் களத்தில் இறங்கி இருக்கிறார் என்பதையும், எந்த நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது என்ற உண்மையையும் அரசாங்கம் உன்னிப்பாக கவனித்தது. அப்போது முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான் ஆட்சி பொறுப் பில் இருந்தார்.

எம்.ஜி.ஆர். அவர்களுக்கு 1967–70 களில் நடிகர் எம்.ஆர். ராதா, எம்.ஜி.ஆர். துப்பாக்கிச் வழக்கில் என்.டி.வி. அவர்கள் குறுக்கு விசாரணையின் போது 'அவரது கட்சிக்காரரின் வழக்கை கிஞ்சித்தும் விட்டுக்கொடுக்காமல், அதே வேளை யில் தன்னை எவ்வளவு மரியாதையுடன் நடத்தினார்' என்ற என்.டி.வி.யின் பண்பாடு சார்ந்த குணாம்சங்களும் மனிதநேயமும் நன்றாகவே தெரியும். எனவே 'இந்த வழக் குகள் பேச்சுவார்த்தையில் தான் நடந்து முடியும்' என்ற என்.டி.வி.யின் தீர்க்கதரிசனம் வெற்றி பெற்றது என்ற வகையில் அரசு பேச்சுவார்த்தைக்கு வந்தது. வழக்குகளும் வெற்றிகரமாக முடித்து வைக்கப்பட்டன.

இந்த போராட்டமும், பேச்சுவார்த்தையும் வெற்றி பெற்றவுடன் அந்த அமைப்பின் 13 முன்னணித் தலைவர்கள் என்.டி.வி. ஈடுபட்ட மாபெரும் பணிக்கு பீஸ் கொடுக்கவேண்டும் என்று அவர் வீட்டிற்குச் சென்றார்கள்.

**அரசு எந்திரத்திடமிருந்து உங்களைக் காப்பாற்றுவது தான் என் கட்சிக் கடன். எனவே, நான் பீஸ் வாங்குவதில்லை என்று அன்போடு மறுத்தார். தோழர்களின் முகம் வாடிப் போகக்கூடாது என்பதற்காக தட்டில் இருந்த ஒரு ஆப்பிளை மட்டும் எடுத்து அதை 14 ஆக நறுக்கி ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு துண்டு கொடுத்து தானும் ஒன்று எடுத்துக் கொண்டார்.**

"மாணவர்களுக்கு சிறப்பாக படிப்பு சொல்லிக் கொடுக்க யாரும் முன்வர மாட்டேன் என்கிறார்கள். நீங்கள் அதைச் செய் யுங்கள்" அதுவே எனக்கு கொடுக்க கூடிய அதிகபட்ச பீஸ் என்று உறுதி மொழியையும் வாங்கிவிட்டு அனுப்பிவைத்தார்.

நெல்லை மாவட்ட தோழர்கள் அனைவரும் என்.டி.வி. யிடம் அளவுகடந்த பாசமும் நேசமும் கொண்டிருக்கிறார்கள். காரணம் 1947 காலகட்டத்தில் கட்சிக்கு வந்த நெருக்கடிகளை எதிர் கொள்வதில் என்.டி.வி.யின் பங்கு அளப்பரியதாக இருந்தது மட்டுமல்லாமல், திருநெல்வேலி மாவட்ட கம்யூனிஸ்ட் சதி வழக்குகளை என்.டி.வி. முழுமையாக வாதம் செய்து வழக்கை நடத்தினார்.


1935–36 களுக்கு பிறகு என்.டி.வி.யின் சிந்தனைப் போக்கு களில் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கியவர்களில் முக்கி யமானவரும், நெல்லை சதி வழக்கில் 55ஆவது நபராக குற்றம்சாட்டப்பட்டவருமான தோழர் இரா.நல்லகண்ணு விடமிருந்து ஏராளமான தகவல்களை கேட்டும் வியந்தும் போயிருக்கிறேன். ஒரு வழக்கறிஞராக கண்ணுறும்போது அந்த வழக்கு எடுத்துக்கொண்ட உழைப்பும், அதில் இட்டப் பணியும் என்னை புல்லரிக்க வைக்கிறது.

அந்த வழக்கு சம்பந்தமாக ஆழ்ந்து படிக்கிற ஒவ்வொ ருவருக்கும் என்னை விட ஆச்சரியமான உணர்வுகள் எழக்கூடும். இந்த வழக்கில் வழக்கறிஞராக பணியாற்றிய என்.டி.வி. அவர்களும், பாளை சண்முகம் அவர்களும் கூட கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மேற்படி வழக்கறிஞர்களில் இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த ஏறத்தாழ ஒரு மாத கால கட்டத்தில் சிறையின் அறைகளை வழக்கறிஞர் அலுவலகங்களாகவும், தத்துவ வகுப்பறைகளாகவும் மாற்றியது சிறை அதிகாரிகளை எரிச்சலுக்கு உட்படுத்தியது. சிறைகக்குள்ளும் தோழர் களோடு போராட்டங்களில் ஈடுபட்டனர். வழக்கு பற்றிய பல தரவுகளை கேட்டறியும் களமாக அந்த பொன்னான நாட் களைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

இந்த வழக்கில் பல விவாதங்கள் நடைபெற்றாலும் அரசுத் தரப்பில் இந்த வழக்கை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டவர் வேறு யாரும் இல்லை. என்.டி.வி.க்கு குருவாக இருந்த வழக்கறிஞர், தொழிலும் பால பாடம் கற்றுக் கொடுத்த பாலாஜி அவர்கள்தான். இவர்களுக்கு இடையே அவ்வப்போது நீதிமன்றத்தில் பல செல்லச் சண்டைகளும் நடந்தது. அந்த வழக்கின் தீர்ப்பில் மாண்புமிகு நீதிபதி வி.சுப்பிரமணியம் அவர்கள் என்.டி.வி. பற்றி குறிப்பிட்டது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று பக்கங்களில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று.

"இங்கே குற்றங்கள் என்னவோ நரகத்தின் எண்ணெய் சட்டியின் தீக்குழம்பில் இருந்து பிறந்தாலும், விசாரணை மிகவும் அமைதியான, அதே நேரம் கண்ணியம் நிறைந்த முறையிலேயே நடைபெற்றது. அரசு சார்பில் வாதாடிய பிரத்தியேக அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்காக வழக்காடிய வழக்கறிஞர்களுடைய உன்னதமான திறமையையும், மரியாதை நிறைந்த பண்புமே இத்தகைய சூழலை உருவாக்கின. இம்மியளவுகூட மனிதப் பண்புகளை மறுத்து நிகழக்கூடிய ஒரு கேள்வி கூட சாட்சிகளிடம் அவர்கள் கேட்கவில்லை. தேவைக்கு அதிகமாக மாக ஒரு வார்த்தை கூட பேசப்படவில்லை.

என்.டி.வி. அவர்கள் இந்திய சோவியத் கலாச்சார வாழ்விலும் மிகப் பெரிய பங்காற்றினார். எவ்வளவோ



சிக்கலான வழக்குகளை நடத்துகிற மிகப் பெரும் ஆளுமை கொண்டவராக இருந்த போதிலும், இந்திய சோவியத் நட்புறவுக்கு அவர் ஆற்றிய பங்கு தன்னுடைய மற்றொரு கரத்தின் செயல்பாடுகள் போன்றே வெளிப்பட்டுக்கொண்டிருந்தது.

ஹிட்லரின் அட்டூழியங்களுக்குப் பிறகு இரண்டாம் உலகப்போர் முடிந்த நிலையில் இந்தியாவிற்கு ஒரு உற்ற நண்பனாகவும், தோழனாகவும் பரிணமித்தது சோவியத் யூனியன். அந்த சோவியத் ஒன்றியத்துடன் நட்பு சார்ந்த உறவும், கலாச்சார உறவுமுறைகளை மேம்படுத்தும் எண்ணத்துடன், சோவியத் நண்பர்கள் சங்கம் என்ற ஒன்றை இந்தியாவில் துவங்குகிறார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்த சங்கத்தின் தேவை நன்றாக உணரப்பட்டு, அதன் வளர்ச்சி பன்மடங்கு பெருகியது. 1952ல் இதை 'இஸ்கஸ்' (இந்திய – சோவியத் கலாசாரக் கழகம்) என்று பெயர் சூட்டி அழைத்தார்கள். டி.பாலிகா, சரோஜினி நாயுடு, விஜயலட்சுமி பண்டிட் போன்றவர்கள் இஸ்கஸ் அமைப்பிற்கு ஆதரவு கொடுத்தார்கள். கலாச்சார, பண்பாட்டு, இலக்கிய மற்றும் மொழி சார்ந்த பயன்கள் இந்தியாவிற்கும் – சோவியத் நாட்டிற்கும் நடந்த வண்ணமிருந்தன. தொழில்நுட்பம், ஆராய்ச்சி, வர்த்தகம் போன்ற பல துறைகளின் வளர்ச்சிக்கும் சோவியத் யூனியன் இந்தியாவிற்கு கைகொடுத்தது. இந்தியாவும் சோவியத் ஒன்றியத்திற்கு பரஸ்பரம் கலாச்சார பண்பாட்டு நிகழ்வுகளை நடத்தின. தோழர் மோகன் குமாரமங்கலம் அவர்கள் மனைவி கல்யாணி குமாரமங்கலம் போன்றவர்கள் இஸ்கஸ் அமைப்பை பெரிய அளவில் வளர்த்தெடுத்தார்கள். இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு குறிப்பிட்ட நிகழ்வை சுட்டிக்காட்ட வேண்டும். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் ரஷ்யாவுக்கு சென்று வந்த பிறகு, சென்னை மெரினா கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. இந்த கூட்டத்தில் 10 ஆயிரம் பேர் பங்கெடுத்துக் கொண்டார்கள் என்றால் இந்த இயக்கத்தின் வளர்ச்சியை நாம் புரிந்துகொள்ளமுடியும்.

1970 ஆம் ஆண்டு இஸ்கஸ் அமைப்பின் மாநில பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். 1970 முதல் 1998 வரை இஸ்கஸ் அமைப்பிற்கு என்.டி.வி. ஆற்றிய பணி தனி புத்தகம் எழுதும் படியான பொருண்மை நிறைந்தது. அத்தகைய செயற்கரிய செயல்களை செய்து இயக்கத்தை கட்டிக் காத்தார் என்.டி.வி. கலாச்சார கழகத்தில் பணியாற்றிய காலகட்டத்தில் ஒரு கையிலே வழக்கு கட்டுகளையும், மற்றொரு கையியே இஸ்கஸ் கோப்புகளையும் சுமந்துகொண்ட என்.டி.வி. எப்போதும் ஓடிக்கொண்டே இருப்பார்.

என்.டி.வி.யின் இளவல்கள் பலர் உயர்நீதிமன்ற நீதிபதி களாக பெரும் பணியாற்றி இருக்கிறார்கள். அவர்களும் மற்ற இளவல்களும் என்.டி.வி.யை ஆசான் என்றும், குரு என்றும் குறிப்பிடுகிறார்கள்.

என்.டி.வி. ஒவ்வொருவரையும் எவ்வாறு நடத்துவார் என்பது பற்றி பக்கங்கள் நிறைய நிறைய பேட்டி அளித்திருக்கிறார்கள். என்றாலும் ஒரு தகவல் மட்டும் இந்த சிறிய கட்டுரையில் இடம் பெற வேண்டும் என்பது ஆவலாக இருக்கிறது.

இளவல்களை சட்ட நுணுக்கங்களை பயிற்றுவிக்கும் முகத்தான் என்.டி.வி. ஞாயிற்றுக்கிழமை மாநாடு என்று ஒன்றை நடத்துவார். இந்தக் கூட்டத்தில் அந்த வாரத்தில் வெளியான உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புகள் அலசி ஆராயப்படும். இளவல்களிடம் கருத்துகள் கேட்டு இறுதியாக தன்னுடைய விளக்கத்தை சொல்லி முடித்து வைப்பார். அத்தகைய தீர்ப்புகள் வழக்கு குறிப்பு புத்தகத்தில் வரிசை கிரமாக குறித்து எடுக்கப்படும். பொருத்தமான வழக்குகளுக்கு பயன்படுத்தப்படும். இவ்வாறு தொழில் ரகசியங்களைக் கூட இளவல்கள் ஒவ்வொருவருடைய தொழில் வளர்ச்சிக்கும், அது சென்றுசேர வேண்டும் என்று மனதார விரும்பியவர். இவ்வாறு என்.டி.வி.யின் சமூகப் பணியும், வழக்கறிஞர் பணியும், கட்சிப் பணியும் கடலென கொட்டிக் கிடக்கின்றன. ஒரு சனாதன குடும்பத்தில் பிறந்து, ஒரு கம்யூனிஸ்டாக வாழ்ந்து மறைந்த தோழர் வழக்கறிஞர் என்.டி.வானமாமலை அவர்களின் வாழ்க்கைப் பயணம் அளப்பரிய பாடங்களை வழக்கறிஞர்களுக்கும், மக்களுக்கும், மாணவர்களுக்கும் சுமந்து நிற்கிறது. அவற்றை தோண்டி எடுத்து அவர் நூற்றாண்டில் சமூகப் பணியாக கடத்துவது அனைவரின் கடமையாக இருக்கிறது.

தொடர்புக்கு: **80560 38856**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 26

## வாருங்கள், கரம் கோர்ப்போம்!

அக்டோபர் 2, தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாள். இந்திய விடுதலைப் போராட்டத்தை ஒருங்கிணைத்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வாழ்நாளெல்லாம் போர் புரிந்த மகான்.

வன்முறையை வழிமுறையாக ஏற்க மாட்டோம் என சூளுரைத்து, அகிம்சையின் முன்னே வெள்ளையனை அடிபணிய வைத்த மாமனிதன்! தனது பலவீனங்களை கூட மறைக்காமல் சுயசரிதை எழுதி, உண்மையை மட்டுமே பேசிய உன்னத மனிதன்!

விடுதலை பெற்று ஐந்தரை மாதத்துக்குள், கூப்பிய கரங்களுக்குள் துப்பாக்கியை மறைத்து சுட்டுக்கொன்ற கோட்சே யார்? ஆர்எஸ்எஸ் தானே! தாமதமாகக் கொன்றதில் தான் வருத்தம் என வாய்க்கொழுப்பு சேலையில் வழிய இப்போதும் பேட்டி கொடுக்கிறார்களே!

அந்த அஹிம்சை சத்தியவான் பிறந்த நாளில், வன்முறையும் பொய்யும் மட்டுமே ஆயுதமாய் கொண்ட ஆர்எஸ்எஸ் என்ன காரணத்துக்காக பேரணி நடத்துகிறது?

சொந்தச் சகோதரர்களை மதமாய், சாதியாய்ப் பிரித்து மோதவிட்டு, இவர்கள் ரத்தம் குடித்த கதை இந்திய வரலாறு நெடுக நிறைந்து கிடக்கிறது.

தமிழ்நாட்டில் இனி அதிரடி அரசியல் தான் என்றும், நாங்கள் கண்ணசைத்தால் தமிழ்நாடு தாங்காது என்றும் அறிக்கைகள் வந்த பின்பு, அகிம்சா மூர்த்தியின் பிறந்த நாளில், இம்சை அரசர்களின் பேரணி தற்செயலானது அல்ல!

யாதும் ஊரே யாவரும் கேளிர் என உலகத்துக்கே உரைத்த தமிழர் மண்ணில், ரத்த ஒத்திகை நடத்தப்படுவது நல்லதல்ல. எனவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை அக்டோபர் 2ம் தேதியன்று தமிழ்நாடு முழுவதும் "சமூக நல்லிணக்க மனித சங்கிலி" நடத்த முன்வருமாறு தமிழக மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளன. இதைக் கேட்டதுமே ஆத்திரத்தில் பொங்கி வழிகிறார் பாஜக அண்ணாமலை. 20,000 புத்தகம், 2 லட்சம் வழக்கு என நாளெல்லாம் கூசாமல் பொய் சொல்லும் துராத்மா!

காவி துண்டால் மூக்கைத் துடைத்து கொண்டு, பத்திரிக்கையாளர்களுக்கு தந்த பேட்டியில் இவர் சொல்லி இருக்கிறார்

ஆர் எஸ் எஸ் உலகமெங்கும் பரவியதாம்! ஆஸ்திரேலியாவில் இயக்கம் நடத்துகிறார்களாம்! இந்தக் கட்சிகளை விட ஆயிரம் மடங்கு ஆர்எஸ்எஸ் தொண்டர்கள் பணியாற்றுகிறார்களாம்! 1925ல் தொடங்கியதாம்!

மனித சங்கிலிக்கு அழைப்பு விடுத்திருப்பவை லெட்டர் பேடு கட்சிகளாம். ஆர் எஸ் எஸ் பற்றி தெரியாதாம். கும்முடிபூண்டியையே தாண்டியதில்லையாம். திருமாவளவனுக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் இந்தியாவைப் பார்த்து வர இவர் ரயில் டிக்கெட் எடுத்து கொடுக்கிறாராம்.

விடுதலையின் போது, எல்லையில் மதவெறியர்கள் கொத்துக்கொத்தாய் மனிதர்களை கொலை செய்து திரிந்தனர். ரயில்களை ஓட்ட ஆள் இல்லை. தம் உயிரையும் பொருட்படுத்தாமல், தமிழ்நாட்டில் இருந்து சென்று, ஒரு மாதத்திற்கு மேல் உணவு தண்ணீர் கூட சரியாக கிடைக்காத நிலையில், ரயில்களை ஓட்டி அமைதி ஏற்படுத்திய கம்யூனிஸ்டுகளுக்கா ரயில் டிக்கெட் எடுத்துக் கொடுக்கிறாய்?

பல்வேறு நாடுகளில் லட்சக்கணக்கில் உயிர்த் தியாகம் செய்து, வேரோடு பறித்தாலும் மீண்டும் மீண்டும் முளைத்து எழுகிற கம்யூனிஸ்டுகளிடம் உலகத்தை அறிமுகப்படுத்த யாருக்குத் தகுதி இருக்கிறது?

எல்லா கட்சிகளும் ஒரு நாட்டுக்குள் தான். ஆனால் இப்போதும் உலகில் பல்வேறு நாடுகளில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகளிடம் கதை அளக்கலாமா!

1925ல் பிறந்த ஆர்எஸ்எஸ் 1947ல் விடுதலை வரும்வரை, லட்சோப லட்சம் இந்திய மக்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது, உமது ஆயிரக்கணக்கான தொண்டர்கள் எவன் காலை சுத்தம் செய்து கொண்டு இருந்தார்கள்?

அந்தமான் சிறை சென்று, ஆறு முறை வெள்ளையனிடம் மண்டியிட்டு மன்னிப்பு கேட்டு விடுதலையாகி, மாதம் 60 ரூபாய் ஊதியம் வாங்கிக் கொண்டிருந்தவரை. விடுதலைப் போராட்ட வீரன் என்று விளம்பரப்படுத்த வெட்கமாக இல்லை?

தன்னாட்டு விடுதலைக்காக மட்டுமல்ல, அடுத்த நாட்டு விடுதலைக்காகவும் கூட போராடுகிற கம்யூனிஸ்டுகளிடம், ஆஸ்திரேலியாவை காட்டுவதற்கு என்ன அகந்தை. சொந்த நாட்டு விடுதலையலயே காட்டிக் கொடுத்தவர்கள், எந்த நாட்டு விடுதலைக்காக, எங்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள்!

"அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்"

குள்ள நரிகள் ஊளையிட்டு விட்டுப்போகட்டும்! மரணத்தின் தூதுவர்கள் விதைக்கும் கலவர விதைகள் இந்த மண்ணில் முளைக்காது எனக் காட்டுவோம்!

வந்தோர்க்கும் வாழ்வளித்த தமிழகமே, உன் சொந்த மண்ணில் அன்பும் அறனும் பங்கமின்றி செழிக்க தெருவுக்கு வா! அண்ணன் தம்பிகளாய் அனைவரும் வாழ, சமூக நல்லிணக்கம் காக்க, அக்டோபர் 2ல் ஊர் ஊராய்க் கரம் காப்போம்! மனிதச் சங்கிலியாய் இணைவோம்!



- டாக்டர் ஜி .ஆர். இரவீந்திரநாத்




## கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பு, தடுப்பூசியை இலவசமாக வழங்குக!

**தமிழ்நாடு அரசு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ள காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் வரவேற்கத்தக்கது. தமிழக குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடும், இரத்த சோகையும் அதிகமாக உள்ள நிலையில் தமிழக அரசின் திட்டம் மிகவும் பயனுள்ளதாக அமையும்.**

மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையின் போது தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கட்டணத்தை, மருத்துவக் கல்வி இயக்குநரகத்திலேயே செலுத்திட வேண்டும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது வரவேற்புக் குரியது. அதை தனியார் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து ஆண்டு மாணவர்களுக்கும் விரிவு படுத்தி, இந்த ஆண்டு முதலே நடைமுறைப்படுத்திட வேண்டும். இதன் மூலம் தனியார் மருத்துவக் கல்லூரிகள் நடத்தும் கட்டணக் கொள்ளையை தடுத்திட முடியும்.

இந்தியாவில் ஒவ்வொரு 8 நிமிடத்திற்கும் ஒரு பெண் கர்ப்பப்பை வாய் புற்று நோயால் இறக்கிறார்.

இந்தியாவில், ஒவ்வோர் ஆண்டும் 1.25 லட்சம் பெண்கள் கருப்பை வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள், 75,000 பேர் உயிரிழக்கிறார்கள். கர்ப்பப்பை வாய் புற்றுநோயை அந் நோயை தடுப்பதற்கான எச்.பி.வி தடுப்பூசியை வழங்குவதின் மூலம் பெருமளவில் தடுத்திட முடியும் என பல்வேறு நாடுகளின் அனுபவங்கள் உறுதி செய்கின்றன.

பல்வேறு நாடுகளில் இந்த எச்.பி.வி தடுப்பூசி பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்தியாவிலும் தனியார் மருத்துவமனைகளில் இத் தடுப்பூசி வழங்கப்படுகிறது.

அரசு இதுவரை இத் தடுப்பூசியை இலவசமாக வழங்கிட வில்லை.

தற்பொழுது இந்தியாவில் உள்ள ஒரு நிறுவனம் கூட, இத் தடுப்பூசியை உற்பத்தி செய்து வரும் நிலையில், இத் தடுப்பூசியை ஒன்றிய அரசு, 11 வயது முதல் 15 வயது உள்ள பெண் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

**கர்ப்பப்பை வாய் புற்று நோய் 95 விழுக்காடு, இனப் பெருக்க உறுப்புகளில் ஏற்படும் ஹியூமன் பேப்பிலோமா வைரஸ் (Human Papilloma Virus) தொற்றால் தான் ஏற்படுகிறது. இத்தொற்று ஏற்படாமல், எச்.பி.வி தடுப்பூசி கிட்டத்தட்ட 100 விழுக்காடு தடுக்கிறது. இதன் காரணமாக இத்தொற்றால் ஏற்படும் 95 விழுக் காடு கர்ப்பப்பை வாய் புற்று நோயை வராமல் தடுத்திட முடியும். இந்தியாவில் 15 வயதுக்கு மேற்பட்ட 48.35 கோடி பெண்கள், கருப்பை வாய் புற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயத்தில் உள்ளனர். எனவே, ஒன்றிய அரசு பெண்களின் நலன் கருதி எச்.பி.வி தடுப்பூசியை இலவசமாக வழங்கிட வேண்டும்.**

அரசு மருத்துவர்கள் காலமுறை ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வை நீண்டகாலமாக கோரி வருகிறார்கள். ஊதியப் பட்டை (Pay band4) நான்கை, பணியில் சேர்ந்த 12 வது ஆண்டின் முடிவில் வழங்க வேண்டும். முது நிலை மருத்துவம் படித்த மருத்துவர்களுக்கு தனியான படியை வழங்கிட தனி உத்தரவை வழங்கிட வேண்டும்.

நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய மருத்துவர் பணியிடங்களை உரு வாக்கி, அதிக அளவில் மருத்துவர்களை நியமிக்க வேண்டும்.

அரசு றிபிசி மருத்துவர் களின் வேலை நேரத்தை அதிகரித்ததை ரத்து செய்ய வேண்டும்.

உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மருத்துவர்கள் போராடி வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கைகளை உடனடியாக தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்.

கோவிட் காலத்தில் பணியமர்த்தப்பட்ட செவிலியர்களுக்கான 6 மாத கால ஊதிய பாக்கியை உடனடியாக வழங்கிட வேண்டும்.

ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் அனைத்து செவிலியர்களுக்கும், மருத்துவப் பணியாளர்களுக்கும், பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும்.

கோவிட் காலத்தில் பணியமர்த்தப்பட்ட, எம்.ஆர்.பி தேர்வில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் கடந்த மார்ச் இறுதியில் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு செய்து நிரந்தர அடிப்படையில் மீண்டும் பணி வழங்கிட வேண்டும்.

கோவிட் காலத்தில் பணி அமர்த்தப்பட்டு பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்ட மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து மருத்துவப் பணியாளர்களுக்கும் மீண்டும் பணி வழங்கிட வேண்டும்.

15 ஆண்டுகளாக தினக் கூலி அடிப்படையில் பணிபுரியும், நடமாடும் கிளினிக் ஓட்டுநர்களுக்கு, சென்னை உயர்நீதிமன்ற ஆணையை மதித்து பணி நிரந்தரம் வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

கேரளாவில் வெறிநாய்கடியால் ஏற்படும் வெறிநோய் இறப்புகள் கவலை அளிக்கிறது. தமிழகத்திலும் கடந்த 8 மாதங்களில் 18 பேர் வெறி நோயால் இறந்துள்ளனர். தமிழக அரசும் கவனத்தோடு செயல்பட வேண்டும். தெருநாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திட வேண்டும். அனைத்து நாய்களுக்கும் வெறிநோய் தடுப்பூசி வழங்கிட வேண்டும்.

செப்டம்பர் மாதத்திற்குப் பிறகும் கொரோனா தடுப்பூசியை மத்திய மாநில அரசுகள் இலவசமாக வழங்கிட வேண்டும்.

தமிழகத்தில் வேகமாக பரவி வரும் ஃபுளூகாய்ச்சலை தடுக்கவும், அக்காய்ச்சல் தடுப்பிற்கான தடுப்பூசிகளை வழங்கவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுப்பதோடு, அரசு மருத்துவமனைகளில் நிலவும் மருந்துகள் தட்டுப்பாட்டை போக்கிடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

தொடர்புக்கு: 9940664343

## பல்லாவரத்தில் சாலையை கடக்க வசதி ஏற்படுத்தி தர கோரிக்கை

பல்லாவரம் சந்தை ரோடு தொடங்கி குன்றத்தூர் சாலை வரை, ஜிஎஸ்டி சாலையின் குறுக்கே, போக்குவரத்து நெரிசலை தடுக்க நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.80.74 லட்சம் செலவில் மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. பாலம் பயன்பாட்டுக்கு வந்து 2 ஆண்டுகளாகியும் ஜிஎஸ்டி சாலையில் வரும் வாகனங்களை பல்லாவரம் சந்தை ரோடு மற்றும் குன்றத்தூர் சாலைகளுக்குள் செல்வதற்கான ஏற்பாடுகளை போக்குவரத்து போலீஸாரும் நெடுஞ் சாலைத் துறையும் செய்யவில்லை. மேலும், சாலைகள் சந்திப்புகளில் சிக்னல்களும் அமைக்கப்படவில்லை. அதேநேரம், பல்லாவரம் இந்திரா காந்தி சாலையிலிருந்து ஜிஎஸ்டி சாலையை கடந்து தாம்பரம் செல்லவும், ஜிஎஸ்டி சாலையிலிருந்து இந்திரா காந்தி சாலைக்குள் நுழையும் இடத்திலும், பல்லாவரம் தபால் நிலையம் முன் பேருந்து நிறுத்தம் செல்வதற்கான சாலையை கடக்கும் இடத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளது.

இதனால் பொது மக்களும், மாணவ மாணவியரும் சாலையை கடக்க முடியாமல் சந்தை சாலை ஜிஎஸ்டி சாலை மற்றும் திருநீர்மலை பிரதான சாலைகளுக்கு 1 முதல் 1.5 கி.மீ. தூரம் சுற்றிச்செல்ல வேண்டியிருக்கிறது. இது ஒருபுறமிருக்க பல்லாவரம் கண்டோன்மென்ட் ரங்கநாதன் தெரு மற்றும் ரயில்வே ஸ்டேஷன் சாலைகளை இணைக்கும் சுரங்கப்பாதை பயன்படுத்த முடியாத அளவுக்கு பாழடைந்து கிடக்கிறது. இதனால் கண்டோன்மென்ட் நடைபாதையையும் இந்திரா காந்தி சாலையில் வாகன எண்ணிக்கை குறைந்து பல்லாவரம் பழைய சந்தை பகுதிகளில் விற்பனையின்றி வணிகர்கள் பாதிக்கப்பட் டுள்ளனர். அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் வணிகர்கள், மக்களை திரட்டி போராட்டம் நடத்தப்படும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பல்லாவரம் பகுதி செயலாளர் பூபாலன் கூறியுள்ளார்.

# இந்துக்களின் இகழ்ச்சியே மனு ஸ்மிருதி சூழ்ச்சி...



ஆர்.கிருஷ்ணமூர்த்தி
[ஆர்.கே.]



**இந்துக்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு அற்ப மகிழ்ச்சியில் திளைக்கும் கூட்டம் சனாதன தர்மம், மனு ஸ்மிருதி இவைகள் தங்களைப் பற்றி என்ன கூறுகிறது; தங்களை எந்த இடத்தில் வைத்திருக்கிறது என்கிற உண்மையை சற்றும் அறியாமல் மயங்கி மகிழ்கிறது என்பதுதான் வேதனை. சனாதன தர்மம், மனு ஸ்மிருதி இரண்டையும் ஏதும் அறியாமல், ஏதும் கேட்காமல் அப்படியே அது இந்துக்களுக்கான உயர்நிலை சாஸ்திரம் என்று மக்களை மயக்கி நம்ப வைத்திருப்பது தான் ஆர்.எஸ். எஸ். சங் பரிவாரங்களின் சூழ்ச்சி.**

எனவே இப்போது பரந்து பேசப்படும் சனாதன தர்மம், மனு ஸ்மிருதி இவற்றை முழுமையாக இல்லாவிட்டாலும் ஒரு பகுதி பற்றி ஊறறியச் செய்ய வேண்டிய அவசியமும் கட்டாயமும் ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மனுஸ்மிருதி பற்றி, அதன் உள்ளடக்கத்தைப் பற்றி அதில் கூறியுள்ளபடி அப்படியே எடுத்து மக்கள் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கம் தான் இந்த கட்டுரை.

இந்துக்கள் இந்துக்கள் என்று ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரங்கள் மூச்சுக்கு முன்னூறு தடவை சொல்லும் அந்த இந்துக்கள் பற்றி மனு ஸ்மிருதி/ சனாதன தர்மம் என்னதான் சொல்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம், கட்டாயம் இப்போது வந்து விட்டது.

சனாதன மனுதர்ம மயக்கம் நமக்குள்ளும் இருக்கிறது என்பதை அறியாமலேயே இருக்கப் போகிறோமா?

மனுஸ்மிருதியை அப்படியே ஏற்றுக் கொள்ளப் படவேண்டிய வேதங்களுக்கு எல்லாம் மேலான ஒன்று என்ற ஒற்றை வரி நம்பிக்கையில் மூழ்கி நிற்கப் போகிறோமா? இல்லை மனுஸ்மிருதி உள்ளடக்கத்தில் பெருமை பேசும் இந்துக்கள் பற்றி என்ன தான் சொல்லியிருக்கிறது என்பதையாவது தெரிந்து கொள்ளப் போகிறோமா?

சனாதன தர்மம் மனு ஸ்மிருதி இந்துக்களைப் பற்றி எவ்வளவு இழிவாக வர்ண அடுக்கு முறையில் வரையறுத்திருக்கிறது என் பதை அறியாமல் இருப்பது கூட தவறல்ல; ஆனால் அறி யாத ஒன்றை அப்படியே ஏற்றுக் கொண்டு மகிழ்வது தான் கேடினும்கேடு.

சங்க இலக்கிய வேத காலத்தில் அதாவது வைணவம் இருந்த காலத்தில் வேலைப் பிரிவினை உண்டு. சாதிப் பிரிவுகள் எதுவும் கிடையாது. இந்துமதம் அப்போது இருந்ததற்கான ஆதாரம் ஏதுமில்லை.

**மனுஸ்மிருதி வேத காலத்திற்குப் பிந்தியது:** ஆனால் பின் உருவாக்கப்பட்ட மனுஸ்மிருதி அகிலம் எப்படி உருவானது என்பது பற்றியும், வர்ண அடுக்கு முறைகள் பற்றியும் சொல்கிறது. இங்கே தான் நமது கேள்வி. சனாதன தர்மத்தில் மனுஸ்மிருதி உண்டு தானே! அப்படியானால் சனாதன தர்மம் என்றால் என்ன? அதில் மனுஸ்மிருதி சொல்லுகிற அகிலம் உருவான கதைக்கோ, வர்ண அடுக்கு முறைகளுக்கோ என்ன ஆதாரம்? இதுவே எழும் கேள்வி. இதற்கு இந்துக்களின் ரட்சகர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளும் ஆர்.எஸ். எஸ். உட்பட எவரிடமும் பதில் இல்லை. அவர்களின் ஒரே பதில் இதுதான். முன்னோரால் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே அது உண்மையாகத் தான் இருக்க வேண்டும் ; எனவே மறுப்பின்றி ஏற்கிறோம்! அது காட்டும் வழியில் நிற்கிறோம்! ஏனெனில் அது சனாதன தர்மம். அப்படியானால் சனாதன தர்மம் என்று சொல்லப்படுவது எந்த வகையான தர்மம்? கேட்கலாமல்லவா?

தெரியாத ஒன்றைச் சொல்லி , அது இந்து மத வேதம், மனித குல விதி என ஏற்கச் செய்வதும், ஏதும் அறியாது அப்படியே மதி கெட்டு இந்துக்கள் எனப்படும் மக்கள் ஏற்பதும் ஏதோ சாதாரண நிகழ்வல்ல. காலம் காலமாக செய்யப்பட்ட சதி, சூழ்ச்சியும் கூட.

சனாதன, மனு தர்மம் அறிந்து கொண்டு அவற்றை நம்புகி றேன், ஏற்கிறேன் என்பது வேறு; காலம் காலமாகச் சொல்லப் படு கிறது; ஆகவே அதை நம்பி ஏற்கிறேன் என்பது வேறு. இப்படி ஏதும் அறியாது இந்து தர்மம் என சொல்லப்படுவதை ஏற்கும் மனநிலையில் உள்ள மக்களைத் தன் வயப்படுத்திக் கொண்டு மதமயமாக்குவது என்பதுதான் சங்கிகள் செய்து வரும் வேலை. அதோடு இந்து மத சனாதன தர்மம் என்ற போர்வையில் ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரங்கள் செய்து கொண்டிருக்கும் மிகப் பெரிய மாரீச மாயாஜாலமே இது.

**மனுஸ்மிருதி:** மனுஸ்மிருதி 1200 ஆண்டுகளுக்கு முன் ஸ்யாம்பூ முனிவர் என்பவரால் எழுதப்பட்டதாக சொல்லப்படுகிறது. 2685 பாடல்கள். 12 அத்தியாயங்கள்.

இதனை 1794 ம் ஆண்டு கல்கத்தா நீதிமன்ற நீதிபதி வில்லியம் ஜோன்ஸ் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கிறார். தமிழில் திருலோக சீதாராமன் மொழி பெயர்த்துள்ளார். இந்த மனுஸ்மிருதியை விமர்சிக்கிறவர்கள் எல்லாம் ஏனோ தானோ என்று விமர்சிக்க வில்லை. மனுஸ்மிருதியை நன்கு படித்து விட்டு விமர்சனங்களை பக்கம், அத்தியாயம் வாரியாகக் குறிப்புகளுடன் சொல்லியே விமர்சிக்கிறார்கள். விமர்சனம் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் விமர்சிக்கிறவர்கள் சொல்வது போல் மனுஸ்மிரு தியில் ஏதும் இல்லை என்று மறுத்து அடித்துச் சொல்லலாமே! அப்படி கூறி ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரங்கள் மறுப்பதே இல்லை. காரணம் அவர்களுக்கும் மனு ஸ்மிருதியில் என்ன இருக்கிறது என்கிற உண்மை தெளிவாகவே புரியும். அதேசமயம் அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

**சனாதன மனு தர்மம் என்பது கேள்விகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அதை விமர்சனம் செய்ப வர்களும் சனாதன தர்மத்தை இழிவாகப் பேசுபவர்களும் இந்து மத விரோதிகள் என்று கண்மூடித்தனமாக சொல்கிறார்கள். இப்படிச் சொல்லி மத உணர்வுகளைத் தூண்டி விட்டு அதில் குளிர் காயும் வேலையை சங்கிகள் மிகச் சரியாகவே செய்து வருகிறார்கள்.**

**இந்துக்கள் :** இந்துக்கள் யார் என்பது மனு ஸ்மிருதியில் வர்ண அடுக்கு முறைகள் மூலம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பிரம்மா நெற்றியில் இருந்து பிறந்தவர்கள் பிராமணர்கள். தோளில் இருந்து பிறந்தவர்கள் சத்ரியர்கள். தொடையில் இருந்து பிறந்தவர்கள் வைஸ்யர்கள். இப்படி எந்த வகையிலும் பிறக்காதவர்கள் பஞ்சமர்கள் மற்றும் சண்டாளர்கள் என்கிறது மனுசாஸ்திரம். இது அனைத்து இந்துக்களிடமும் சொல்லப் பட்டிருக்கிறதா? இந்துக்கள் இதை ஏற்றுக்கொள்கிறார்களா? என்பதே நமது கேள்வி. பௌத்தம் கோலோச்சிய காலத்தில் ஆரியம் எதிர்க்ப் பட்டது. ஆடு மாடுகளைக் கொன்று உண்ணும் வழக்கத்தை பௌத்தம் எதிர்த்தது.

இதற்கு பிந்தைய காலத்தில்தான் எதிர்ப்பு காரணமாக ஆரியர்கள் பசுவைத் தெய்வமாகக் கினர். இது ஒரு தந்திரமான ஏற்பாடு. அதோடு நிற்காமல் தங்களைப் பெரியவர்களாகக் காட்டிக் கொள்ள ஒரு உத்தி செய்தார்கள். அந்த உத்தியே சனாதன மனுஸ்மிருதி என்கிற படைப்பு. இப்போதாவது இந்துக்கள் வர்ண அடுக்கு முறை தங்களை எவ்வளவு கேவலப் படுத்துகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**மனுஸ்மிருதி ! மனித சதி !:** மனு ஸ்மிருதி சொல்லுகிற சூத்திரர்கள் யார்? அடுத்து பஞ்சமர்கள், சண்டாளர்கள் என்ப வர்கள் யார்? அவர்களெல்லாம் இந்துக்கள் இல்லையா? அவர் களும் இந்துக்கள் தானே! அப்படியானால் மனுசாஸ்திரம் ஏன் இவர்களின் பிறப்பையே அவ்வளவு இழிவு படுத்திப் பேசுகிறது. மனுதர்மம் தான் சனாதன இந்து தர்மம் என்று சங்பரிவாரங்கள் சொல்வது உண்மையானால் அது அனைத்து இந்துக்களையும் ஒன்றாகத்தானே பார்க்க வேண்டும்.

அப்படி இல்லை என்கிற போது மனுசாஸ்திரம் விமர்சிக்கப் படுவதில் என்ன தவறு? மனு ஸ்மிருதியில் சூத்திரர்களின் பிறப்பு தாழ்வாகப் பேசப்படுகிறபோது, அவர்கள் ஏன் இந்துக்களாக இருக்க வேண்டும் என்கிற கேள்வி மிகமிகச் சரியானது தானே!

சூத்திரர்கள் மட்டும் இன்றி க்ஷத்ரிய, வைசிய வர்ணம் சார்ந்தவர்களுக்கும் இதே தாழ் நிலை தான்.

இவர்களுக்கே இந்த கதி என்றால் வர்ணத்திற்கு அப்பால் உள்ள சண்டாளர்கள், பஞ்சமர்கள் பற்றி மனு சாஸ்திரம் என்ன சொல்லியிருக்கும் என்பதை மனதளவில் கூட யூகித்துப் பார்க்க முடியாது தானே.

இது யாரோ எழுதி வைத்தவைகள்தானே என இல்லாமல் அன்றைய காலத்தில் நடப்பு சட்ட விதிகளாகவும் இவை இருந்திருக்கிறது. ஆட்சி நீதி பரிபாலனம் யாவும் மனு சாஸ்திர வழிகாட்டலின்படியே நடைபெற்றிருக்கிறது.

இந்த ஆட்சிக் காலம்தான் மனுநீதி ஆட்சி என்று பெருமையாகப் பேசப் பட்டிருக்கிறது.

**தொடரும் சூழ்ச்சி.. :** இந்தியாவுக்கு வியாபாரம் செய்ய வந்த கிழக்கிந்திய கம்பெனிக்காரர்கள் நாளடைவில் இந்தியாவின் பல பகுதிகளைப் பிடித்தனர். பிடித்த பிறகு வெள்ளையர்கள் செய்த முதல் வேலை இந்து மனு ஸ்மிருதியை மொழிப் பெயர்ப்பு செய்ததுதான். 1794 ல் வில்லியம் ஜோன்ஸ் என்ற நீதிபதியால் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட மனு ஸ்மிருதி நூல் ‘‘இந்து சட்டம்‘‘ எனக்கூறப் பட்டது. இந்தக் கொடிய இந்து சட்டத்தை மாற்றி எழுத அன்று அரும்பாடு பட்டவர் அண்ணல் அம்பேத்கர். இது கண்டு பொறுக்காத ஆர்.எஸ்.எஸ். கும்பல் 1949 வாக்கில் அவரை எதிர்த்து கலகம் செய்தது. இறுதியாக 1955 56ல் மனு சட்டம் ஒழிந்து மனித குல சட்டமாயிற்று இந்து சட்டம். இப்போது ஆர்.எஸ்.எஸ். சங்கிகள் கூறுகின்றனர் மீண்டும் மனு சாஸ்திர சட்டத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்று.

அதோடு வெறொரு செய்தியும் பரப்பப் படுகிறது. அது என்னவென்றால் ஒரு புதிய அரசியல் சாசன அமைப்புச் சட்டத்தை சனாதன சாஸ்திர வடிவில் கொண்டு வர முயற்சித்துக் கொண்டிருப்பதாக தகவல். சனாதன மனு ஸ்மிருதியின் உண்மைக் கூறுகளை வெளிக்கொணரும்

பலரையும் , அதுபோல் பிற மதத்தினரையும் இந்துக்களுக்கு எதிரிகளாகச் சித்தரிக்கும் மோசடி வேலையை ஆர்.எஸ்.எஸ். சங்கிகள் துவங்கி விட்டனர். அதன் மூலம் மதவெறியைத் தூண்டி விட்டு பாமர மக்களை ஏமாற்றும் அபாயகரமான வேலையை ஆர்.எஸ்.எஸ். சங்பரிவாரங்கள் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இதனைச் சரியாக எதிர் கொண்டு சனாதன மனு ஸ்மிருதி சாகசங்களை வெளிப்படுத்தி மக்களை மதவெறி மயக்கத்திலிருந்து வெளிக் கொண்டு வர வேண்டும். இந்துக்களுக்கும் பெண்களுக்கும் உண்மையான எதிரிகள் மதவாத பாசிச இந்துத்துவா சக்திகள்தான் என்பதை நாம் உணரவேண்டும்... நம்மைச் சுற்றி உள்ளவர்களை உணர வைக்கவேண்டும்.

நாம் ஆன்மீகத்திற்கோ மதத்திற்கோ எதிரிகள் அல்ல. ஆன்மீக வேஷதாரிகளுக்கு நிச்சயம் நாம் எதிரிகள். சனாதன மதவாத சாதிமத வெறியர்களுக்கும் நாம் எதிரிகள். கோடிக் கணக்கான மக்கள் நாள் தோறும் வயிற்றுப் பிழைப்பிற்கே வழியின்றி தவிக்கிறபோது, கோடிக்கணக்கான இளைஞர்கள் வேலையின்றித் திரிகிறபோது மக்களைத் துன்பங்களிலிருந்து மடை திருப்பும் வேலையைப் பாசிச சங்கிகள் கூட்டம் விடாது தொடர்ந்து செய்துவருகிறது.

சாதி மதப் பிளவுகளை மக்களிடையே ஏற்படுத்தி பாசிச ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள ஆர்.எஸ்.எஸ். கூட்டம் எந்த வித மாபாதக வேலையையும் செய்திடத் தயங்காது என்பதை நாம் அறிவோம்.


பன்முகத்தன்மை, மதச்சார்பின்மை, மாறுபட்ட கலாச்சாரம், மொழிப்பற்று போன்றவைகள் எல்லாம் பாசிச சக்திகளிடமிருந்து காக்கப் பட வேண்டும். இவை முழக்கத்தாலோ நாம் ஆசைப்படுவதாலோ நடக்காது. மாறாக சனாதன தர்மம், மனு ஸ்மிருதி, மனு சாஸ்திரம் இவைகளின் பெயரால் ஆர்.எஸ்.எஸ். கும்பல் நடத்துகிற அட்டூழியங்கள் இவைகளை அழித்து ஒழிப்பதன் மூலமே .காத்திட முடியும்.

அதோடு மனு ஸ்மிருதியை மடியச் செய்ய வேண்டும். சனாதனம் மீண்டும் தலை தூக்காது கவிழ்க்கப் படவேண்டும்.

இதுதான் ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரங்களின் ஆயுதம் என்பதை அறிந்து விட்ட நிலையில் அவைகளச் சுக்கு நூறாக்க வேண்டும். அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் இந்துக்களைக் காப்பாற்றப் போகிறதா?

இல்லை இந்துக்களை வர்ண பிரிவு அடிப்படையில் இழிநிலையில் வைத்து அதுவே இந்து சட்டம் என்று சொல்கிற இந்துத்வா இந்துக்களைக் காப்பாற்றப் போகிறதா? நாம் மக்களிடம் தெளிவு படுத்த வேண்டும்.

தொடர்புக்கு: **94449 56694**



- ஏ.இ.பாலுச்சாமி

# ஹலோ! அண்ணாமலையா?



**(பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை க்கும் & மறைந்து போன அவரது தாத்தாவிற்கு மிடையே உரையாடல்)**

தாத்தா போனில் பேசுகிறார்... நான் தான் தாத்தா பேசுகிறேன். அறிவியல் தொழில்நுட்பப் புரட்சியால் பரலோகத்திற்கும் அனைத்து வசதிகளும் வந்து விட்டன. அதனால்தான் போனில் உன்னிடம் பேசுகிறேன்.

தொலைக்காட்சி, வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் மூலம், நீ தமிழ்நாட்டில் பாஜகவின் மாநிலத் தலைவராக ஆனதிலிருந்து, அகில இந்தியத் தலைவர் நட்டாவுடன் நீ காரைக்குடியில் பேசியது வரை நிகழ்ச்சிகள் அனைத்தையும் இங்கு கவனித்து வருகிறேன்.

நீ தமிழகத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டது அறிந்து மகிழ்ந்தேன். பாஜகவில் எல்லாமே நியமனப் பதவிகள் தானே. பாஜக ஒரு போலி சாமியார் மடமான ஆர்.எஸ்.எஸ்.ஸின் அரசியல் கட்சி தானே. அந்த மடத்திலேயே தலைவர்கள் முற்படுத்தப்பட்ட பிரிவினரிலிருந்து நியமனம் தான் செய்யப்படுகிறார்கள். அதன் அரசியல் கட்சியான பாஜகவில் ஜனநாயகத் தேர்தல் மூலம் தலைவர்கள் தேர்வு நடைபெறும் என்று எதிர்பார்ப்பவன் எப்படி இருப்பான்?

நட்டா, அமித்ஷா, நிதின்கட்கரி போன்றவர்களும் தேசியத் தலைவர்களாக நியமனம்தான் செய்யப்பட்டார்கள். பரவாயில்லை. ஐபிஎஸ் காவல்துறை அதிகாரியாக இருந்து நேரடியாக பாஜக தலைவராகி விட்டாய் மகிழ்ச்சி. எனினும் ஒரு நெருடல் எனக்கு. ஆர்எஸ்எஸ் கொள்கைகளை மனதில் வைத்து, கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும்போது எப்படித்தான் அரசுப் பணியாற்றினாயோ? காதலனை மனதில் வைத்து தாலி கட்டிய கணவருடன் வாழ்க்கை நடத்தும் ஒரு பெண் மாதிரி, உன் வாழ்க்கை. பாராட்டுகிறேன் உன் துணிச்சலை.

தமிழ்நாட்டில் உன்னை படு கேவலமாக விமர்சிக்கிறார்கள். அரைவேக்காடு அண்ணாமலை, அரசியல் தெரியாத அண்ணாமலை என்கிறார்கள். 20,000 புத்தகம் படித்தேன் என்று புருடா வேறு விடுகிறாய். எனக்கு கவலை தான். ஆனால் நீ செய்வதும் அப்படித்தானே உள்ளது. உருப்படியான மக்கள் பிரச்சினைகள் எதையும் பேசாமல், உதவாக்கரையான, ஒன்றுமில்லாதது பற்றியே பேசி வருகிறாய்; செய்து வருகிறாய். ஓரிரண்டை கூறுகிறேன்.

திமுக பதவியேற்ற ஒரு சில நாட்களில் சென்னையில் பெரும் மழை வெள்ளம் வந்தது. போர்க்கால நடவடிக்கைகளில் அரசு செயல்பட்டு மக்களை காப்பாற்றியது. ஆனால் நீயோ கணுக்கால் அளவு தண்ணீர் உள்ள இடத்தில் ஒரு படகில் ஏறி போட்டோ எடுக்கிறாய். அருகில் சின்னஞ் சிறுவர்கள் அதே தண்ணீரில் இறங்கி விளையாடிக் கொண்டிருந்தார்கள். இவ்வளவு மலிவான விளம்பரம் உனக்கு தேவையா?

கர்நாடகாவில் பெய்த மழையால் தண்ணீர் தேங்கி, பெங்களூருவில் ஐ.டி. கம்பெனி பணியாளர்கள் பல நாட்கள் டிராக்டரில் அலுவலகம் சென்றதை நீ ஏன் மறந்து விட்டாய்?

தஞ்சாவூர் கிறிஸ்துவ பள்ளி மாணவி ஒருவர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார். உடனே ஓடோடிச் சென்று நீ மதமாற்றம் செய்ய முயற்சி, பள்ளியை இழுத்து மூடு என்று ஆர்ப்பாட்டம் செய்கிறாய்! உன் கட்சியின் தலைவர்கள் பலர் கிறிஸ்தவ கல்வி நிலையங்களில்தான் படித்து பட்டம் பெற்றவர்கள் என்பதை மறந்து விட்டாய். அவர்களை எல்லாம் அப்பள்ளிகள் மதமாற்றம் செய்யவில்லை.

இந்தியாவில் இஸ்லாமியர், ஆங்கிலேயர் ஆண்டபொழுது ஒரு சில இடங்களில் மத மாற்றம் நடந்தது என்பது மறுப்பதற்கு இல்லை. இன்றுள்ள முஸ்லிம்கள் அரேபிய நாடுகளிலிருந்து வந்தவர்கள் இல்லை. சனாதன வர்ணாசிரம கொள்கை கொடுமையால், இங்குள்ள இந்து மதத்தினர் இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களுக்கு மாறியுள்ளனர். அவர்கள் நமது சகோதரர்கள். உன் கட்சியும் கார்வாப்சி (இந்து மதத்திற்கு மீண்டும் திரும்புங்கள்) என்றுதான் கூறுகிறது. ஆனால் பாஜக – ஆர்எஸ்எஸ் காரர்கள் முஸ்லிம், தலித்துகளை, கிறிஸ்தவர்களை குறிவைத்து கொலை செய்கிறார்களே ஏன்?

நீ தமிழ்நாட்டில் லஞ்ச ஊழல் பற்றி விடாது பேட்டி கொடுக்கிறாய். தமிழக முதல்வர் ஸ்டாலின் தொழிலதிபர்களை தமிழ் நாட்டில் தொழில் தொடங்க அழைக்க துபாய் சென்றார். ஸ்டாலின் துபாய்க்கு 500 கோடி ரூபாயுடன் சென்று, துபாய் வங்கியில் போட்டார் என்று புகார் செய்தாய். ஒன்றிய அரசில் உன் கட்சி தான் உள்ளது. நீ கூறுவது உண்மையாயின், சத்தமில்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே. ஏன் செய்யவில்லை? நீ பொய் சொல்ல வரைமுறையே இல்லையா?

பாஜக ஆளும் மாநிலங்களில் லஞ்சம், ஊழல் தலைவிரித்து ஆடுகிறது. உதாரணத்திற்கு ஒன்று கூறுகிறேன். நீ காவல் துறை அதிகாரியாக பணியாற்றிய கர்நாடகாவில் பாஜகவின் முன்னாள் முதல்வர் எடியூரப்பா மீது லஞ்ச வழக்கு சமீபத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெங்களூரு வீடு கட்டும் திட்டத்தில் 12.5 கோடி ரூபாய், எடியூரப்பா, இவரின் மகன், மருமகன் மற்றும் உறவினர்கள் லஞ்சம் வாங்கியுள்ளனர். (இது சம்பந்தபட்ட ஒப்பந்ததாரர் எடப்பாடி பழனிச்சாமியின் சம்பந்ததாரர்) எடியூரப்பா மற்றும் சிலர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. லஞ்சப் புகார்கள் உள்ள எடியூரப்பா பார்லிமென்ட் கமிட்டிக்கு மோடியால் தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ளார். நீ தமிழக ஊழல் பற்றி பொய்யாக பேட்டி கொடுக்கலாமா?

இன்னும் சிலவற்றைக் கூறுகிறேன். கர்நாடகாவில் ராஜ்யசபா பதவிக்கு ரூ.100 கோடி லஞ்சம் கேட்டதாக 4 பாஜக தலைவர்கள் சிபிஐ அமைப்பால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மூத்த அமைச்சர் ஈஸ்வரப்பா ஒப்பந்ததாரரிடம் 40 சதவீத கமிஷன் கேட்டுள்ளார். கமிஷனைக் கொடுத்த ஒப்பந்ததாரருக்கு வேலைக்கான பணத்தை கொடுக்க இழுத்தடித்ததால், தனது சாவுக்கு ஈஸ்வரப்பா தான் காரணம் என கடிதம் எழுதி வைத்துவிட்டு ஒப்பந்ததாரர் தற்கொலை செய்து கொண்டார். அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய முதல்வர் பசவராஜ் பொம்மை ரூ.1000 கோடி பிட்காயின் மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளார். மேகாலயா பாஜக தலைவர் தனது சொகுசு மாளிகையில் விபச்சார தொழிலில் ஈடுபட்டுள்ளார். ஐந்து இளம் பெண்களும், மது பான பாட்டில்கள், ஆணுறைகள் அம்மாளிகையில் கைப்பற்றப் பட்டுள்ளன. வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர் அம் மாநிலத்தின் பாஜகவின் மாநில துணைத் தலைவர். இவர் மீது ஏற்கனவே 200 கிரிமினல் வழக்குகள் விசாரணையில் உள்ளன. கோவாவில் ஒன்றிய பெண் அமைச்சர் ஸ்ருமதி ராணி யின், 18 வயது மகள் உரிய லைசென்ஸ் இல்லாமல், இறந்த ஒருவரின் பெயரால், பார் நடத்தியுள்ளார். காங்கிரஸ் கட்சியினர் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியதால் பார் மூடப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் முருக பீடத்தின் தலைவர் சிவமூர்த்தி. அம்மடத்திலிருந்த மைனர் பெண்களை கற்பழித்ததாக பாதிக்கப்பட்ட பெண்கள் கொடுத்த புகாரின் மீது சிவமூர்த்தி கைது செய்யப்பட்டுள்ளார். கைதை எதிர்த்து பாஜகவினர் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

குஜராத்தில் 2002 மதக் கலவரத்தின்போது கலவரம், தீவைப்பு, கொலைகளை நடத்தியதோடு கருவுற்ற நிலையில் இருந்த பில்கிஸ் பானுவை பாஜகவினர் பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். பானுவின் கணவர் மற்றும் 3 வயது குழந்தையை கொன்றுள்ளனர். வன்புணர்வு செய்துள்ளனர். கயவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இன்று குஜராத் அரசு அவர்களுக்கு விடுதலை வழங்கியுள்ளது. பதினோரு காமக்கொடியவர்கள் விடுதலையான அன்று சிறைச்சாலை வாசலில் பாஜக – ஆர்எஸ்எஸ் காரர்கள் அவர்களுக்கு மாலை அணிவித்து வணங்கி வரவேற்றுள்ளனர். உனது தலைவர் மோடியோ பேட்டி பச்சோவ் (பெண்கள் வாழ்க) என்று முழக்கம் இடுகிறார்.

உத்தரகாண்ட் பாஜக தலைவராகவும், அமைச்சராகவும் இருப்பவரின் மகன், 19 வயது இளம் பெண்ணை, அப்பாவிற்கு சொந்தமான ரெஸ்ட் ஹவுசில் வைத்து கற்பழித்து, அப்பெண்ணை கொலை செய்து, கால்வாயில் வீசியுள்ளான். பொதுமக்கள் நீதி கேட்டு போராடுகிறார்கள்.

டெல்லி பாஜக நிலையோ மிக கேவலமாக உள்ளது. சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக உள்ளது. எல்.கே.அத்வானி கரசேவை நடத்தியபோது, இராமரை வழிபடத்தான், கோவிலை கட்டத்தான் என்றார்கள். பாபர் மசூதி பாதுகாக்கப்படும் என உச்சநீதிமன்றத்தில் உறுதிமொழி வழங்கினார்கள். நடந்தது என்ன? பாபர் மசூதி இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியது. 1947 க்கு முன்னால் நடந்த மத வழிபாட்டுத் தலங்கள் குறித்து இனி எந்தத் தாவாவும் எழுப்பக் கூடாது என்பது நீதிமன்றத்தின் உத்தரவு. ஆனால் வாரணாசி, கியான்வாப்சி மசூதிக்குள் சிவலிங்கம் உள்ளதாக பிரச்சினையை இன்று கிளப்புகிறது பாஜக. அடுத்து, காசி, மதுராவில் உள்ள மசூதிகளில் லிங்கம் இருப்பதாகக் கூறி இடிக்கக் கூறுகிறார்கள் சங்கிகள்.

**75வது விடுதலை நாளை இந்தியா முழுவதும் தேசியக் கொடியேற்றி கொண்டாடுங்கள் என்கிறார் மோடி. பாஜகவின் தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் அலுவலகத்தில் மிக நீண்ட காலம் வரை தேசியக் கொடியை ஏற்றியதே இல்லை. அவர் களுக்கு சுவஸ்திக் கொடி தான் முக்கியம்.**

மோடி தனது எட்டு ஆண்டுகால ஆட்சியில் இந்தியாவிற்கு தலைகுனிவை ஏற்படுத்தும் வகையில் நடந்ததே இல்லை என சூளுரைத்தார். ஆனால், பாஜகவின் ஊடகப் பேச்சாளர் நுபுர் சர்மா நபிகள் குறித்து தரக்குறைவாக விமர்சனம் செய்தவுடன் அரபு நாடுகள் கொந்தளித்தன. 50 அரபு நாடுகளிடம் இந்திய தூதர்களை விட்டு மன்னிப்பு கேட்கச் சொன்னார் மோடி. எல்லைப் பிரச்சனையில் சீனா 2020ல் நமது எல்லையை ஆக்கிரமித்தது. படைகளை வாபஸ் வாங்கவோ, குறைக்கவோ மறுத்து வருகிறது. ஆனால், இந்தியா, சீனாவிடம் கேள்வி கேட்க முடியாமல் திணறுகிறது.

அண்ணாமலை! இன்னும் எவ்வளவோ இருக்கிறது உன்னிடம் கூற. வீரமாக கட்சி நடத்துகிறேன் என்று சொல்லி தேசியக் கொடி பறந்த நிதியமைச்சர் காரில் செருப்பை வீசச் செய்த கேவலத்தை இந்நாடு மன்னிக்காது. மற்ற தலைவர்களுக்கு கவர்னர் பதவியாவது கிடைத்தது. உனக்கு ராமர் கோவிலில் மணி அடிக்கும் பொறுப்பாவது கிடைக்குமா? கவலையோடு முடிக்கிறேன். ஆடு மேய்க்கும் பிழைப்பைப் பார்! இதற்கு அது மேல்!

தொடர்புக்கு: 73389 20584

>> 02ம் பக்கத் தொடர்ச்சி

விருப்பத்தை வெளியிட்டுள் ளது.

திமுகவிற்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மான உறவை, மார்க்சிஸ்ட் கட்சிக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குமான உறவை தனது மித்திர பேதத்தால் சிண்டு மூட்டி, தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள தினமலர் முயன்றுள்ளது.

தினமலர் ஏடு தன்னை நடுநிலை ஏடு என்று வேறு சொல்லிக் கொள்கிறது.

ஏடு, பத்திரிக்கை தர்மத்தை பின்பற்ற வேண்டும் – அதர்ம வேலையில் ஈடுபட வேண்டாம்.

தனது மித்திர பேதத்தின் மூலம் வகுப்பு வாதத்திற்கு எதிரான யுத்தத்தை சீர்குலைத்து விடமுடியாது.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற அரசியல் அணி தொடரும் – பலப்படும். மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி என்பது வெறும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை கொண்டது அல்ல.

எண்ணிக்கையா? இலட்சியமா? என எழுப்பப்படும் வினாவிற்கான விடை என்பது இலட்சியமே! என்பதனை தினமலர் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.


தனது மித்திர பேதத்தால் வகுப்புவாதத்தை – வகுப்புவாத சக்திகளை தமிழகத்தில் காலூன்ற செய்கின்ற முயற்சிகள் – கனவுகள் ஒரு போதும் பலிக்காது என்பதனை தினமலர் உணரட்டும்.

பல்வேறு வார்த்தைகளைக் காட்டி, நாட்டு மக்களை ஏமாற்றி, தங்களது நயவஞ்சகச் செயல்கள் மூலம், தங்களின் இருப்பை தக்கவைத்துக் கொள்ள முயலும், முயன்றுவரும் ஆர்எஸ்எஸ் அதன் கரமானபாஜக என்பதனை நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

விடியலுக்கான காலத்திற்கு காத்திருக்கின்றார்கள். அத்தகைய விடியல் 2024–ல் வெளிப்படும். புதிய விடியல் பிறக்கும். அத்தகைய நல்ல விடியல் பிறக்கக் கூடாது என்பதே தினமலர் ஏட்டின் கவலை. தனது கவலையை வெளிப்படுத்தும் விதமாக மித்திர பேத செயலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள தினமலர் ஏட்டிற்கும், மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள்.

நாம் நமது பணிகளை மேற்கொள்வோம்– சனாதனத்திற்கு எதிரான போர் தொடரும்– முற்றாக முடிகின்ற வரையில் தொடரும்– தொடர்ந்து கொண்டே இருக்கும்!

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**



**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



## சங்கே முழங்கு!

# முதலாளித்துவ கொள்கையை முறியடிப்போம்! தேசம் காப்போம்!

**- கே.முருகன்**

[2022 செப்டம்பர் 15 ஆம் தேதி போஸ்கோ ஜிண்டால் கம்பெனி எதிர்ப்பு போராட்டக்குழு சார்பில் வெளியிடப்பட்ட பத்திரிக்கை செய்தியை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள கட்டுரை]

உலகம் முழுவதும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவான கொள்கையை முதலாளித்துவ நாடுகளும், முதலாளித்துவ கொள்கை வழியிலான அரசுகளும் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றன. இதனால், சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கப்பட்டு, சாதாரண ஏழை, எளிய மக்கள் பெரும் துயரத்திற்கு ஆளாகி வருகின்றனர். பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளையும், அதனால் ஏழை மக்கள் பாதிக்கப்படுவதையும் தடுக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை பலமுறை விவாதித்து தீர்மானம் நிறைவேற்றி வழிகாட்டி உள்ளதைப் பொருட்படுத்தாமல், முதலாளித்துவ நாடுகளும், முதலாளித்துவ கொள்கை திசைவழியிலான அரசுகளும், உழைக்கும் மக்களின் உயிரை விலை பேசி வருகின்றன. அதன் ஒரு பகுதியாக 1991 ஆம் ஆண்டில் இந்தியாவில் கொண்டு வரப்பட்ட தனியார்மயம், தாராளமயம், உலகமயம்(லிறிநி) கொள்கையால் நாட்டில் இயற்கையாக நமக்கு கிடைக்கப்பெற்ற நீர் வளம், வனவளம் மற்றும் நிலவளம் ஒன்றிய அரசு மற்றும் பல மாநில அரசுகளால் சீரழிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியே ஒடிசா மாநிலம் பாராதிப் பகுதியில் தின்கியா கிராமத்தில் கொண்டுவரப்பட்ட போஸ்கோ ஜின்டால் கார்ப்பரேட் இரும்பு ஆலை ஒன்றிய மாநில அரசுகளின் தாக்குதல் ஆகும். ஒடிசா தின்கியா கிராம மக்கள் மீதான அடக்குமுறையை நிறுத்தவும் மக்களின் மனித உரிமை மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க உடனடி தலையீடு செய்து நடவடிக்கை எடுக்க குடியரசு தலைவருக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் மனித உரிமை செயல்பாட்டாளர்கள் உள்ளிட்ட சுமார் 70 பிரபலங்கள் வேண்டுகோள் விடுத்து மனு அளித்துள்ளனர்.


2005 ஆம் ஆண்டு ஒன்றிய ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டனி அரசின் ஆதவோடு ஒடிசாவில் நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜூ ஜனதாதள அரசு தென் கொரியாவின் இரும்பு தொழிற்சாலை போஸ்கோவை தின்கியா கிராமத்தில் அமைப்பதற்கு அனுமதி அளித்தது. கிராம மக்களின் விருப்பத்திற்கு எதிராக 100 ஆண்டுகள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் கிராம மக்களின் விளைநிலங்களை அரசின் காவல்துறை உதவியோடு, கம்பெனி குண்டர்ளோடும் சேர்ந்து கொண்டு வலுகட்டாயமாக கையகப்படுத்தியது. கிராம மக்கள் போஸ்கோ எதிர்ப்பு போராட்டக்குழு அமைத்து, அமைதி வழியில் வலுவான போராட்டத்தை நடத்தினர். மிரண்டுபோன மாநில அரசு தனது சொந்த மக்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறி 200 க்கும் மேலான வழக்குகளைப் போட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது. வழக்குகள் இன்றும் நிலுவையில் உள்ளன. 2005 ஆம் ஆண்டு போராடிய கிராம மக்களுக்கு எதிராக அரசு இயந்திரமும், கம்பெனி குண்டர்களும் சேர்ந்து செய்த சதியால் கிராம மக்கள் 5 பேர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

8 வருட தொடர் போராட்டம் காரணமாக போஸ்கோ கம்பெனி வெளியேறியது. மக்கள் நிம்மதியோடு வாழலாம் என்று நினைத்த அந்த நேரத்தில், நவீன் பட்நாயக் அரசு ஒன்றிய பாஜக அரசின் ஆதரவோடு 2019 ஆம் ஆண்டு அதே தின்கியா கிராமத்தில் ஜின்டால் இரும்பு ஆலை தொடங்குவதற்கு அனுமதித்தது.

அந்த ஆலையால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை புறக்கணித்து ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் தடையில்லா சாண்றிதழ் அளித்தது. 2019 ல் போஸ்கோஜின்டால் விரோத போராட்டக்குழு அமைத்து கிராம வளங்கள், சுற்றுச்சூழல் மற்றும் கிராம மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க மக்களின் போராட்டம் தொடர்ந்தது. அரசு, மக்களின் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு மாறாக அவர்கள் மீது கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. 2020ஆம் ஆண்டிலிருந்து 60 க்கும் மேற்பட்ட கிராம மக்கள், போராடியவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறையில் உள்ளனர். ஒரு சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டு வெளியில் வந்தனர். கிராம மக்களின் நெற்பயிர்கள், வெற்றிலை கொடிகள், மீன் குட்டைகள் உட்பட அனைத்தும் அரசு இயந்திரம், கம்பெனியின் குண்டர்களால் நாசமானது. ஆனாலும், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், வாழ்வாதாரம் பாதுகாக்கப்படவும் தொடர்ந்து மக்கள் போராடுகின்றனர். பாசிச பா.ஜ.க ஆதரவோடு, நவீன் பட்நாயக் அரசும் காவல்துறையும் சேர்ந்து கொண்டு, 2022 ஜனவரி 14ஆம் தேதி உலகத்தில் இதுவரை நடைபெறாத மிகவும் மோசமான தாக்குதலை கிராம மக்கள் மீது நடத்தியது. அந்தத் தாக்குதல் காட்சி சமூக வலைதளம் மற்றும் செய்தி ஊடகங்களில் வெளியானது; பார்ப்பவர்களின் மனதை வேதனையில் பதறச் செய்தது. ஜின்டால் போஸ்கோ எதிர்ப்பு போராட்டக்குழுத் தலைவர் தேபேன்திர சுவான் மற்றும் போராட்டக்காரர்கள் இன்று வரை சிறையில் உள்ளனர். மக்களின் விவசாய வாழ்வாரத்தை அழிக்கும் பாசிச பாஜக ஆட்சியின் மிருகத்தனம் கிராம மக்களின் நிலங்களைக் கையகப்படுத்தி வருகிறது. இதனை எதிர்த்து போராடி வரும் கிராம மக்களை முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் என்றும் பாராமல், அவர்கள் மீது கடுமையான அடக்குமுறை மற்றும் தாக்குதல் தொடர்ந்து வருகிறது.

ஒடிசாவின் பாராதீப் பகுதியில் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் சுற்றுச்சூழல் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, வாழ்வாதாரம் இழந்து இயற்கை பேரழிவால் பலர் உயிர் இழந்துள்ளனர். இந்நிலையில், தற்போதைய ஜின்டால் இரும்பாலை கிராமங்களில் பாதிப்பை மேலும் அதிகரிக்கும். இத்தகைய சூழலில், தாங்கள் உடனடியாகத் தலையிட்டு கிராம மக்களின் நிலம், வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட ஒன்றிய அரசு மாநில அரசையும் வலியுறுத்த வேண்டும் என்று சமூக அக்கறை கொண்ட செயல்பாட்டாளர்கள் வலியுறுத்தி உள்ளார்கள்.

தொடர்புக்கு : 7603930397



# 'சே' மனிதருள் மாமனிதராக



**- செங்கை சேகுவேராதாஸ்**

**சே என்றால் புரட்சி**
சே என்றால் போராளி
சே என்றால் பொதுவுடமை என

பொதுவாக அறியப்பட்ட எர்னெஸ்டோ குவேரா டி லா சென்னா சூன் 14, 1928 - அர்ஜென்டீனாவை பிறப்பிடமாகக் கொண்ட எர்னெஸ்டோகுவேரா லின்ஞ், சிசிலியா டெ ல சென்னா தம்பதியர்களுக்கு முதல் மகனாக பிறக்கின்றார்.

**மாணவ பருவம்:** இவர் ஒரு சிறந்த "ரக்பி" விளையாட்டு வீரர். ஆடுகளத்தில் பின்னிருந்து ஆடும் தடுப்பாட்டக்காரனின் நிலையிலேயே பெரும்பாலும் விளையாடுவார்.

**வாசிப்பு பருவம்:** குவேராவின் வீட்டில் 3000 நூல்களுக்கு மேல் இருந்தன. நூல்களை வாசிப்பதில் அவருக்கு இருந்த ஆர்வத்துக்கு இது ஒரு காரணம் எனலாம். இவற்றுள், கார்ல் மார்க்ஸ், போல்க்னர், வேர்னே போன்றவர்கள் எழுதிய நூல்களில் அவருக்குச் சிறப்பான ஆர்வம் இருந்தது. இவை தவிர ஜவஹர்லால் நேரு, லெனின் போன்றவர்களது நூல்களையும், பிரான்ஸ், ஏங்கெல்ஸ், வெல்ஸ், புரொஸ்ட் ஆகியோருடைய நூல்களையும் அவர் விரும்பி வாசித்தார். அவருக்கு இலத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களான குயி ரோகா, அலெக்ரியா, இக்காசா, டாரியோ, ஆஸ்டூரியாஸ் போன்றோருடைய ஆக்கங்களின் பால் ஈடுபாடு ஏற்பட்டது.

**மருத்துவ சேவை:** 1948 ஆம் ஆண்டில் மருத்துவம் படிப்பதற்காக சேகுவேரா, புவனஸ் அயர்ஸ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். ஆனால் 1951 ஆம் ஆண்டில் படிப்பில் இருந்து ஓராண்டு விடுப்பு எடுத்துக்கொண்டு, அவரது நண்பரான ஆல்பர்ட்டோ கிரெனாடோவுடன் சேர்ந்து கொண்டு, மோட்டார் ஈருளியில் தென்னமெரிக்கா முழுதும் பயணம் செய்தார். தென் அமெரிக்கா முழுக்கத் தொழுநோய் பீடித்திருந்த காலம். அது குறித்து ஆய்வு செய்யவும், அதற்குத் தங்களால் எதுவும் மருந்து கண்டுபிடிக்க முடியுமா என்ற தேடலுமே அந்தப் பயணத்துக்கான ஆரம்பம்.

சேவின் வாழ்வை முழுவதுமாக புரட்டிப் போட்ட பயணம் அது. இதுவரையும் அவரின் மேல் புரட்சியின் எந்த சிறுநிழலும் விழுந்திருக்கவில்லை. தென் அமெரிக்கக் கண்டம் முழுவதும் மக்களின் ஏழ்மை, பிணி, அறியாமை, அடக்குமுறை, வாக்குரிமை பறிப்பு, வர்க்க வேறுபாடுகளுக்குக் காரணமாக அமெரிக்காவும், அவர்களது சி.ஐ.ஏ. உளவு நிறுவனமும் செயல்படுவதை அறிந்தார்.

**லத்தீன் அமெரிக்க நாடுகளில் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அனைத்துக்கும் வாஷிங்டனும் அதன் முதலாளித்துவமும் மட்டுமே காரணம் எனக் கண்டறிந்தார். இந்த பிரச்சனைகளுக்கு தீர்வாக மார்க்சியம் அவர் சிந்தனையில் தோன்றியது.**

1952, ஜூலை மாதம் 'சே' முழுவதுமாக மாறியிருந்தார். இலத்தீன் அமெரிக்காவைத் தனித்தனி நாடுகளாகப் பார்க்காமல், ஒட்டு மொத்தமான கண்டம் தழுவிய விடுதலைப் போர் முறை தேவைப்படும் ஒரே பகுதியாகப் பார்த்தார்.

1953 ஜூலையில் மீண்டும் பயணமொன்றைத் தொடங்கிய சேகுவேரா, இம்முறை பொலீவியா, பெரு, ஈக்குவடோர், பனாமா, கொஸ்தாரிக்கா, நிக்கராகுவா, ஹொண்டூராஸ், எல் சல்வடோர் ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

குவாத்தாமாலா நகரில், ஹில்டா கடேயா அக்கொஸ்தா என்னும் பெண்ணின் பழக்கம் கிடைத்தது. இவரையே பிற்காலத்தில் சே திருமணம் புரிந்தார் இவர் பெரு நாட்டைச் சேர்ந்த ஒரு பொருளியலாளரும், இடதுசாரிச் சார்புள்ள அமெரிக்க மக்கள் புரட்சிகர கூட்டமைப்பு என்னும் இயக்கத்தின் உறுப்பினரும் ஆவார். இவர் ஆர்பென்சின் அரசாங்கத்தின் பல உயரதிகாரிகளைச் சேகுவேராவுக்கு அறிமுகப்படுத்தினார். அத்துடன் பிடல் காஸ்ட்ரோவுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களும், கியூபாவைவிட்டு வெளியேறி வாழ்ந்துவந்தவர்களுமான தொடர்புகளும் சே குவேராவுக்குக் கிடைத்தன. இக்காலகட்டங்களில் கம்யூனிஸ்ட்களிடம் நெருங்கிப் பழகிய 'சே', மார்க்ஸிய லெனினியப் பாதை தான் தனது பாதை என்பதை உணர்ந்தார். அது குறித்த ஆய்வுகளையும் அவர் மேற்கொண்டார்.

**கியூபா புரட்சி:** 1953ம் ஆண்டு இதே நாள் கியூபாவில் கொடுங்கோல் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த பாடிஸ்டா தலைமையிலான அரசைத் தூக்கி எறிவதற்காக புரட்சிக்குத் தேவையான ஆயுதங்களைப் பெறுவதற்காக பிடல் அவரது சகோதரர் ரால் காஸ்ட்ரோ உள்ளிட்ட 120 வீரர்கள் சாண்டி யாகோ கியூபாவில் அமைந்திருந்த மொன்காடா இராணுவத் தளத்தை தாக்குவதற்கு திட்டம் தீட்டினர். அப்போது 'சே'வுக்கு வயது 27. காஸ்ட்ரோவுக்கு 32. காஸ்ட்ரோவுக்காவது கியூபா தன் சொந்த நாடு. போராடிய வேண்டிய அவசியம் இயல்பானது. ஆனால் 'சே'வுக்கு அப்படி அல்ல. தனக்கு முற்றிலும் தொடர்பற்ற மற்றொரு தேசத்தில், அம்மக்களின் விடுதலைக்காகத் தன் உயிரைப் பணயம் வைத்து ஆயுதம் எடுப்பதென்பது, உலக வரலாற்றில் எப்போதும் எங்கும் நிகழ்ந்திராத ஒன்று. இதனால்தான் 'சே' மனிதருள் மாமனிதராக அடையாளம் காணப்பட்டார்.

கொரில்லாப் படைக்குக் கமாண்டராக அறிவிக்கப்பட்ட 'சே' கடுமை யான ஆஸ்துமா துன்புறுத் தியபோதிலும், அடர் வனங்களிலும் மலைகளிலும் சளைக்காமல் வீரர்களுக்குத் தெம்பூட்டியபடி படையை வழி நடத்தினார். 1959, பிப்ரவரி 16ல் கியூபாவின் பிரதமராக காஸ்ட்ரோ பதவியேற்றவுடன் குவேராவை ஒரு கியூபன் என்று அறிவித்தபிறகு அந்த வருடம் அக்டோபர் மாதம் தேசிய வங்கியின் அதிபராகவும் ஃபிடல் காஸ்ட்ரோவால் நியமிக்கப்பட்டார். விவசாயத் துறையில் தேசியத் தலைவராக நியமிக்கப்பட்டார் 'சே'.

தேசிய வங்கியின் தலைவராக கியூபா ரூபாய் நோட்டுகளில் 'சே' என கையெ ழுத்திடும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றார். பின் 1961ம் ஆண்டு தேசிய வங்கியின் பதவியைத் துறந்து தொழிற்துறை அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார். இருந்தாலும் 'சே' தன்னை ஒரு சாதாரணக் குடிமகனாகவே அடையாளம் காட்டிக் கொண்டார்.

விவசாயக் கூலிகளுடன் சேர்ந்து கரும்பு வெட்டுவதும், தொழிற் சாலைகளில் இதர பணியாளர்களுடன் சேர்ந்து மூட்டை சுமப்பதுமாகவே வாழ்ந்தார் 'சே'

இந்நிலையில் காங்கோவின் அரசியல் சூழல், அவரை மிகவும் பாதித்தது. மக்கள் புரட்சிக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

காஸ்ட்ரோவை விட்டு பிரிவதற்கு முன் சே எழுதிய கடிதத்தை ஒரு பொதுக் கூட்டத்தில் காஸ்ட்ரோ படித்தார். அதில் என்னை கியூபாவின் புரட்சியுடன் தொடர்புபடுத்திய கடமை முடிந்துவிட்டது. அந்தக் கடமையை நான் செவ்வனே முடித்து விட்டேன். உங்களிடமும், மற்ற போராளிகளிடமும், என்னுடைய மக்கள் ஆகிவிட்ட கீயூபன் மக்களிடமும் நான் விடை பெறுகிறேன் என்று எழுதியிருந்தார்.

1966ம் ஆண்டின் கடைசிகளில் கொரில்லாப் போரை வழி நடத்தும் பொருட்டு உருகுவே நாட்டு போலி பாஸ்போர்ட்டுடன் பொலிவியா நாட்டுக்குள் நுழைந்தார்.

பொலிவியாவின் ஏழ்மையும் அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைகளும் எந்நேரமும் அங்கு புரட்சி வெடிக்க சாதகமாக இருந்தது. பொலிவியா ஐந்து பிற நாடுகளுடன் தன் எல்லையை பகிர்ந்து கொண்டிருந்தது . பொலிவியாவில் கொரில்லாப் போராட்டம் வெற்றி பெறுமேயானால் அதை மற்ற ஐந்து நாடுகளுக்கும் பரவச் செய்துவிடலாம் என்று குவேரா நினைத்தது.

1967 அக்டோபர் 8 தென் அமெரிக்கச் சரித்திரத்தில் ஓர் இருண்ட தினம். யூரோ கணவாயை ஆறு கெரில்லா வீரர்களுடன் 'சே' கடந்து செல்கிறார். வழியில் தென்பட்ட ஆடு மேய்க்கும் குண்டுப் பெண்ணின் மேல் பரிதாபப்பட்டு ஐம்பது பெஸோக்களைப் பரிசாகத் தருகிறார். அந்தக் குண்டுப் பெண் பொலிவிய ராணுவத்துக்கு 'சே'வின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக்கிறாள். பொலிவிய ராணுவத்தால் சே சுட்டு பிடிக்கப்படுகிறார்.

'சே'வைச் சுட்டுக் கொல்வது என முடிவெடுக்கப்படுகிறது. கைகள் கட்டப்பட்ட நிலையில், 'சே'வை பள்ளிக்கூடத்தின் மற்றொரு தனியிடத்துக்கு மரியோ அழைத்துச் செல்கிறார். ''முட்டி போட்டு உயிர் வாழ்வதைவிட நின்று கொண்டே சாவது எவ்வளவோ மேல்!'' என்பார் 'சே'. ஆனால், மரியோ அவரை ஒரு கோழையைப் போலக் கொல்லத் தயாராகிறார்.

(நான் இறந்த பிறகு எனது துப்பாக்கியை தோழர்கள் எடுத்துக்கொள்ளவர்கள் அதிலிருந்து தோட்டாக்கள் சீறிப் பாயும்)

தன்னை நிற்க வைத்துச் சுடுமாறு 'சே' கேட்க, அதை அலட்சியப்படுத்துகிறார். ''கோழையே, சுடு! நீ சுடுவது 'சே'வை அல்ல ஒரு சாதாரண மனிதனைத்தான்!'' இதயம் கிழிக்கும் விழிகள் மின்ன, உலகம் புகழும் மனிதன் சொன்ன கடைசி வாசகம் இதுதான்!

சேவை நெஞ்சில் நிறுத்துவோம்! புது யுகம் படைப்போம்!

*சேகுவேரா நினைவு தின கட்டுரை*

தொடர்புக்கு: 81448 09010

# கோர்ப்பசேவ் மே

## - உள்நாட்டில் தே



- வகிதா

**கோர்ப்பசேவ் அமைதி நாயகரா அல்லது அவல நாயகரா என்ற பொருளில், பாட்டாளி படிப்பு வட்டம் சனியன்று (10.9.2022) கூட்டம் நடத்தியது. கோர்ப்பசேவ் காலத்தில்தான் ஒன்றாக இருந்த சோவியத் ஒன்றியம் பல நாடுகளாக பிரிந்து போனது. சமதர்ம கொள்கையிலிருந்து தடம் புரண்டு, சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறியது.**

இணைய வழியில் நடந்த இந்தக் கூட்டத்தில் ஏஐடியுசியின் தேசியச் செயலாளரான வகிதா, சோவியத் ஒன்றியத்தின் நெருக்கடி, கோர்பசேவ் செய்ததும், செய்யத் தவறியதும் குறித்துப் பேசினார்.

“கோர்ப்பசேவ் இல்லையென்றாலும் சோவியத் ஒன்றியம் அதன் நெருக்கடிகளால் தானாகவே சிதைந்திருக்கும் என நான் முன்பு நினைத்திருந்தேன். ஆனால் இப்போது அவ்வாறு நினைக்கவில்லை. கோர்ப்பசேவை வரலாறு கடுமையாக, வருந்தத்தக்க ஒருவராக பார்க்கும்“ என குவின்ஸ்லாந்து பல்கலைகழகத்தில் பணியாற்றும், ஐரோப்பிய நவீன வரலாற்று ஆசிரியரான அலெக்சாண்டர் டிட்டோ கூறுகிறார்.

1985 ம் ஆண்டு, சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளராக, கட்சியால் நியமிக்கப்பட்டவர்தான் கோர்ப்பசேவ். அதற்கு முன்பாக கட்சியின் பல பொறுப்புகளிலும் இருந்திருக்கிறார். அவருக்கு முன்பாக கட்சியின் பொறுப்புகளில் யூரி ஆண்ட்ரபோவ், கான்ஸ்டன்டின் ஷரபோவ் என்பவர்கள் பொறுப்பில் இருந்த 1982 1985 காலத்தில் பொருளாதார பின்னடைவு இருந்தது. தொழிற்சாலைகளில் உற்பத்தித்திறன் குறைந்திருந்தது. ஆலைகளை கட்சி மூலம் நிர்வகிப்பது நடந்தது. எனவே இதனை மாற்றும் விதத்தில் சில சீர்திருத்தங்கள் அப்போது மேற்கொள்ளப்பட்டு வந்தன. சிறு தொழில்களை தனிநபர்கள் செய்வதை ஊக்குவிக்கும் விதத்தில் கொள்கைகள் வகுக்கப்பட்டன.

1987 ல், சோவியத் கட்சியின் 27 வது மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் கோர்ப்பசேவ் கட்சியின் பொதுச் செயலாளராகவும், நாட்டின் நிர்வாகியுமாக ஆனார். இவர் பொறுப்புக்கு வருவதை மேற்குலக நாடுகள் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.

**பெரிஸ்த்ரோய்கா:** 1987 ல் கட்சி மாநாட்டிற்குப் பிறகு பெரிஸ்த்ரோய்கா (சீர்திருத்தம்) வை கோர்ப்பசேவ் அறிமுகப் படுத்தினார். சோவியத் ஒன்றியத்தில் 1972 வரை லெனின் அமலாக்கி இருந்த புதிய பொருளாதார கொள்கை நடை முறையில் இருந்தது. மையப்படுத்தப்பட்ட பொருளா தாரம்தான் அதன் ஆதாரமாக இருந்தது. இதனை கோர்ப்பசேவ் மாற்றினார். சந்தைப் பொருளாதாரமாக, அதாவது முதலாளித்துவ பொருளாதாரமாக மாற்ற முனைந்தார். அவ்வாறு செய்ய வேண்டாம் என அவரது ஆலோசகர்கள் கொடுத்த அறிவுரையை அவர் கேட்கவில்லை.

சோவியத் பொருளாதாரம் 1970 வரை, உலகில் அமெரிக்காவிற்கு அடுத்த நிலையில் சிறந்து விளங்கி இருந்தது. 1971 ல் அமெரிக்க அதிபர் நிக்சன், கையிருப்பில் இருக்கும் தங்கத்திற்கு ஏற்ப **(Gold Standard)** நாணயங்களை கணக்கிடும் முறையை மாற்றி, டாலர்களின் மதிப்பை செயற்கையாக உயர்த்திக்கொண்டார். இதனால், ரஷ்ய நாணயமான ரூபிளின் மதிப்பு பாதிப்புக்கு உள்ளானது. 1973 ல் பெட்ரோலியம் ஏற்றுமதி செய்த ஐந்து நாடுகளும் **(OPEC)** விலையை உயர்த்திவிட்டதால் சோவியத் பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளானது.

இந்த நிலையில் கோர்ப்பசேவ் காலத்தில் உணவு முறைக்கு ரேஷன் முறையில் வழங்கப்பட்டது. அதற்கு முன்பாக உலகப் போர் நடந்த ஸ்டாலின் காலத்தில்தான் ரேஷன்முறையில் உணவு வழங்கப்பட்டது. இந்த நிலையில் கோர்ப்பசேவ் கறுப்பு பணத்தை ஒழிப்பது என்பதற்காக 50 ரூபிள், 100 ரூபிள்களை மதிப்பிழப்பு செய்தார்.1000 ரூபிள்கள் மட்டுமே புழக்கத்தில் இருந்தன. வங்கிக் கணக்குகளை முடக்கினார். இதில் மக்கள் கடுமையான பாதிப்பு அடைந்தார்கள். மது விற்பனையில் அரசுக்கு நல்ல வருவாய் வந்து கொண்டு இருந்தது. ஸ்டாலின் ஆட்சி காலத்தில் மது தடையை நீக்கினார். அதன் மூலம் கிடைத்த வருவாய் மீண்டும் கோர்ப சேவ் காலத்தில் நிறுத்தப்பட்டதால் வீழ்ச்சி அடைந்தது. இவ்வாறாக கோர்ப்பசேவ் கொண்டு வந்த பெரிஸ்த்ரோய்கா மக்களை பாதிப்புக்கு உள்ளாக்கியது.



**கிளாஸ்நாஸ்ட்:** பிறகு பகிரங்கத்தன்மை என்ற பெயரில் கிளாஸ்ட்நாஸ்ட் ஐ அவர் கொண்டு வந்தார். தன்னை நிலை நிறுத்த கோர்ப்பசேவ் அதனை பயன்படுத்திக்கொண்டார்

# போதைப் பொருட்

# நுழைவாயில



- ந. சேகரன்

**இந்தியாவுக்கே வழிகாட்டும் மாநிலம் குஜராத் என்றும் குஜராத் வளர்ச்சி மாடலுக்கு காரணம் மோடி என்றெல்லாம் தொடர்ச்சியாக கதைவிட்டுக்கொண்டிருக்கும் பேர்வழிகள்தான் பாஜக கூட்டத்தினர்.**

குஜராத் வளர்ச்சி மாடல் என்ன எனபது அண்மைக் காலங்களில் சாயம் வெளுத்து, குஜராத்தின் உண்மை முகம் தற்போது அம்பலமாகி வருகிறது..

சட்டவிரோதச் செயல்கள், வங்கிக் கடன் மோசடி மன்னன்கள், ஆபரேஷன் தாமரை, தனியார்மயம் என எதை எடுத்தாலும் ”குஜராத்” என்ற பெயர் அடிபடாமல் இருப்பதில்லை. தற்போது ஒரு படி மேலே சென்று, இந்தியாவையே திடுக்கிட வைக்கும் அதிர்ச்சி அளிக்கும் செய்திகளின் மூலமாக குஜராத் விளங்கி வருகிறது.

ஆம். இந்திய நாட்டிற்கு பேராபத்தை விளைவிக்கும் போதை பொருட்கள் கடத்தலுக்கு பிரதான நுழைவு வாயிலாக திகழ்வது ”குஜராத்” மாநிலம் என்பதும் இதன் மையமாக விளங்கும் தனியார் துறைமுகமான முந்த்ரா துறை முகமாகும். இந்த துறைமுகம் யார் கையில் உள்ளது என்று பார்த்தால் , தற்போது ஆசியாவின் நம்பர் 1 மற்றும உலகப் பணக்காரர் வரிசையில் நம்பர் 3 ஆக இருக்கும் அதானியேதான்.

இவர் பிரதமர் மோடியின் மிக நெருங்கிய நண்பர் என்பதும் சொல்லத் தேவையில்லை.

சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்த அதானி 1980 களில் ஜவுளி, வைர வியாபாரத்தில் ஈடுபட்டாலும், அதானி என்டர் பிரைசஸ் என்ற நிறுவனம் மூலம் இந்தியாவிற்கு தெரிய வந்ததும் மோடி குஜராத் முதலைமைச்சராக இருந்த காலத்தில்தான். அதற்கு நன்றிக்கடனாக, 2014 பிரதமராக வருவதற்கு முன் மோடியின் தேர்தல் பிரச்சாரத்திற்காக விமானங்களை கொடுதது உதவியவர்தான் இந்த அதானி என்பதும் தெரிந்ததே.

மோடியார் பிரதமரானபின் அதானியின் வளர்ச்சி ராக்கேட் வேகத்தில் சென்றது. குஜராத் மாநிலத்தின் வணிகம் வர்த்தகம் என்பது அதானி என்ற ஆகப்பெரும் கார்ப்பரெட்டின் நியாயமற்ற அபரிமித வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டதாய் உள்ளது. இதற்கெல்லாம் பின்புலமாய் இருப்பது பிரதமர் மோடியார்தான்.

1995 இல் குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்தை நிர்வகிக்கும் ஒப்பந்தத்தை எடுத்த அதானி கையில் தான் இப்போது முற்றிலும் இவர் கைவசம் அதானியார் தனது மூலதனத்தை பெருக்க கொள்ளை லாபம் அடிக்கும் சட்ட விரோதமாக செயல்களிலும் ஈடுபட்டதின் விளைவே, நாட்டின் இளைஞர்களை போதை மயக்கத்தில் ஆழ்த்தும் போதை பொருட்களை கடத்தும் பிரதான நுழைவாயிலாக அதானியின் முந்த்ரா துறைமுகம் கடந்த பல ஆண்டுகளாக சட்டவிரோதமாக ஈடுபட்டு வருகிறது.

இந்த உண்மையை அதானியின் முந்த்ரா துறைமுகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் கடத்தல் வரலாறு தெளிவாக உணர்த்துகிறது.

பாஜக அரசு மத்தியில் பொறுப்பேற்ற பிறகு தனியார்மயம் என்ற ஆபத்தான கருவியைக் கையாண்டதின் விளைவே போதைப் பொருட்களின் கடத்தல் தனியார் துறைமுகங்கள் வாயிலாக அதிகரித்துள்ளது.. போதைப் பொருட்களின் உற்பத்தி மூல இடமாக விளங் கும் ஆப்கான் நாட்டிலிருந்து ஈரான் வழியே போதைப் பொருட்கள் இந்தியாவுக்கு குஜராத்தின் துறைமுகங்கள் வழியே இந்தியாவுக்குள் நுழைகின்றன.

ஒரு சில கடத்தல் மட்டுமே சோதனை அடிப்படையில் பிடிபடுகிறதே தவிர, பெரும்பான்மையான கடத்தல்கள் வேண்டுமென்ற தப்பிக்க விடப்படுகினறன.

மேலும் ஒன்றிய அரசின் அமைப்புகள் நேரடியாக முறைப்படி கண்காணிப்பதும் இல்லை. குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த அதானிக்கு சொந்தமாக உள்ள துறைமுகஙகள் ஞ்ீ முனையஙகள் பட்டியல்.

**அதானியின் கைவசம் உள்ள துறைமுகங்கள் முனையங்கள் பட்டியல்:**

(1) முந்த்ரா துறைமுகம், (2) டாஜே துறைமுகம், (3) மர்மகோவா முனையம், (4)காட்டுப்பள்ளி துறைமுகம், (5) விசாகப்பட்டினம் முனையம், (6) கிருஷ்ணாப்பட்டினம் துறைமுகம், (7) டுனா முனையம், (8) ஹசீரா துறைமுகம், (9) விழிஞ்சம் துறைமுகம், (10) எண்ணூர் முனையம், (11) தம்ரா துறைமுகம்

**போதைப் பொருட்களின் மையமாக குஜராத்**

போதைப்பொருட்கள் கடத்தல் தொழிலின் மையப்புள்ளியாக மாறியிருக்கிறது குஜராத். இவற்றில் குஜராத்தில் உள்ள அதானிக்கு சொந்தமாக உள்ள முந்த்ரா துறைமுகத்திலிருந்துதான் கடத்தல் பொருட்கள் நாடு முழுவதும் உள்ளே நுழைகின்றன. கீழ்க்கண்ட கடத்தல் சம்பவங்கள் வாயிலாக குஜராத்தின் உண்மை முகம் அம்பலமாகி உள்ளது.

**அண்மையில் பிடிபட்ட கடத்தல் பொருட்கள் பட்டியல்**

கடந்த ஜுலை மாதத்தில் அதானியின் முந்த்ரா துறைமுகத்திலிருந்து ரூ.375.6 கோடி மதிப்பிலான 75.3 கிலோ ஹெராயின் போதைப்பொருட்கள் பிடிபட்டுள்ளன.

முன்னதாக மே மாதத்தில் ஜவுளி சரக்குப் பெட்டகம் என்ற பெயரில் அதானியின் முந்த்ரா துறைமுகத்திற்கு வந்த கன்டெய்னரைச் சோதித்துப் பார்த்தால் அவை அனைத்தும் போதைப் பொருள் மூட்டைகளே..




குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் உள்ள காண்ட்லா துறைமுகத்திற்கு அருகிலுள்ள கொள்கலன் நிலையத்தில், நடத்தப்பட்ட சோதனையின் போது ரூ 1300 கோடி மதிப்பிலான 260 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது.

இதே போல் ஈரானிலிருந்து குஜராத் மாநிலம் சௌராஷ்டிரா பகுதியில் உள்ள பிபாவாவ் துறைமுகத்திற்கு வந்த கப்பல் கன்டெய்னலில் இருந்து ரூ 450 கோடி மதிப்பிலான 90 கிலோ ஹெராயின் கைப்பற்றப்பட்டது.

அதற்கடுத்து, குஜராத்தின் அங்களேஸ்வர் பகுதியில் ரூ 1026 கோடி மதிப்பிலான தடைசெய்ப்பட்ட மெஃபிடரான் என்ற போதைப் பொருள் தயாரிக்கப்பட்டு வந்துள்ளதை பொது மக்கள் தலையீட்டின் பேரில்தான் குஜராத் காவல் துறை கண்டுபிடித்துள்ளது. அங்கிருந்து 513 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த செப்டம்பர் மாதம் மட்டும், ஆப்கானிஸ்தானில் இருந்து கப்பலில் கடத்திவரப்பட்ட ரூ 21,000 கோடி மதிப்பிலான ஹெராயின் போதைப் பொருள்களும், ஈரானில் இருந்து கடத்தி வரப்பட்ட ரூ.550 கோடி மதிப்புள்ள கோகைன் போதை பொருட்களளும் கைப்பற்றப்பட்ட இடம் அதானியின்

# ற்குலகின் மீட்பர்

## ாற்றுப் போனவர்

என்று கூறப்படுகிறது. அவர் கொண்டு வந்த சீர்திருத்தங்கள், கட்சியின் மத்தியக்குழுவில் இருந்த வயதானவர்களாலும், கட்சியின் முந்தைய கொள்கைகளை வலியுறுத்தியவர்களாலும் எதிர்க்கப்பட்டது. இதனை எதிர்கொள்ள மக்கள் சபை யின் பேராயம் **(Congress of Peoples Deputies)** என்ற அமைப்பை உருவாக்கினார். இது உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களைக் கொண்டிருந்தது. இதனை கட்சியை விட அதிகாரம் மிக்கதாக கோர்ப்பசேவ் மாற்றினார்.

**வெளிநாட்டுக் கொள்கை:** ரஷ்யப் புரட்சிக்குப்பிறகு 1922 ல் லெனின் புதிய வெளியுறவுக் கொள்கையை உருவாக்கி இருந்தார். அது அமைதி, கூட்டுறவு, ஒத்துழைப்பு என்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஏகாதிபத்திய நாடுகள் நடத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்தது. ஆசிய நாடுகளின் விடு தலைக்கு உந்துசக்தியாக இருந்தது. துருக்கியின் ஒட்டாமன் பேரரசை எதிர்த்து, சோவியத் ஆதரவோடு முஸ்தபா கமால் ஆட்சி அமைத்தார். இன்னமும் துருக்கியில் முற்போக்கு சக்திகள், கம்யூனிச கட்சிகள் அங்கு இருக்கின்றன. எகிப்து அதிபர் நாசர், அமெரிக்கா, பிரான்ஸ் நாடுகளின் எதிர்ப்பையும் மீறி சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கியதற்கு சோவியத் ஆதரவு கொடுத்தது. இந்தியாவுக்கு சோவியத் ஒன்றியம் அளித்து வந்த ஆதரவையும் நாம் அறிவோம். ஆனால்

**கோர்ப்பசேவ் இந்த நெடிய பாரம்பரியமான வெளிநாட்டுக் கொள்கையிலிருந்து விலகினார். மூன்றாம் உலக நாடுகளுக்கு கொடுத்து வந்த ஆதரவை விலக்கினார். ரீகனுடன் ஆயுதக் கட்டுப்பாடு ஒப்பந்தம் செய்துகொண்டார். இதைதான் மேற்குலக நாடுகளும் விரும்பின. சிம்ம சொப்பனமாக விளங்கிய சோவியத் ஒன்றியம், எளிதாக கையாளக்கூடிய ஒன்றாக மாறியது.**

ஏற்கனவே சோவியத் ஒன்றியம், தன் நாட்டு ஜிடிபியில் பாதுகாப்பிற்காக 25 சத நிதி ஒதுக்கீடு செய்து வந்தது. எங்கோ இருக்கும் நாடுகளுக்காக நாம் ஏன் கஷ்டப்பட வேண்டும் என மக்கள் நினைக்க ஆரம்பித்தார்கள். இதனை மார்க்சிய அடிப்படையில் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மேற்குலக நாடுகளில் இருந்து அங்கு நுழைந்த ஊடகங்கள் பெருமளவில் பிரச்சாரம் செய்து மக்களை கிளப்பி விட்டனர். இதற்கு கோர்ப்பசேவ் உருவாக்கி இருந்த கிளாஸ்ட்நாஸ்ட் காரணமாக இருந்தது. புரட்சிக்குப் பிறகு 1917 முதல் 1922 வரை பிரான்ஸ், ஜெர்மானி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளையும், அதே காலக்கட்டத்தில் உள்நாட்டு எதிர்ப்புரட்சி சக்திகளையும் எதிர்த்து வென்றது சோவியத் ஒன்றியம். ஆட்சிப்பொறுப்புக்கு வந்த உடனேயே 'என்னுடைய முதன்மையான எதிரி கம்யூனிஸ்ட்டுதான்' என்று பகிரங்கமாக கூறினான் ஹிட்லர். அத்தகைய ஹிட்லரை இரண்டாம் உலகப்போரில் தோற்கடித்தது சோவியத் ஒன்றியம். இத்தகைய நெடிய பாரம்பரியத்தை மக்கள் மறந்தார்கள்.

**எல்ட்சின்:** கோர்ப்பசேவ்1985 ல் பொறுப்புக்கு வந்தவுடன், எல்ஸ்ட்சினை மாஸ்கோ நகரக் கட்சிப் பொறுப்புக்கு கொண்டு வந்தார். எல்ஸ்ட்சினை கோர்ப்பசேவ் நம்பினார். எல்ஸ்ட்சினை ஏற்றுக்கொள்ள சோவியத் ஒன்றியத்தின் மத்தியக் குழு விரும்பவில்லை. மாஸ்கோ நகரக் குழுவிலிருந்து 1986ல் எல்ஸ்ட்சினை நீக்கினார்கள். எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் என்ற வகையில், மக்கள் சபையின் பேராயத்திற்கு **(Congress of People's Deputies)** அவர் வருகிறார்.

இந்த நிலையில் 1991 ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்தை குறைக்க ஒரு கருத்துக் கணிப்பு நடத்தினார். அதோடு சோவியத் தலைவரை மக்களே நேரடியாக தேர்ந்தெடுக் கலாமா? என்ற கருத்துக் கணிப்பையும், கோர்ப்பசேவ் நடத் தினார். அப்படி அதிகாரத்திற்கு வந்தவர்தான் போரிஸ் எல்ட்சின். இதனை எதிர்த்து 1991 ஆகஸ்டில் ரஷ்யாவின் உளவு அமைப்பான கேஜிபி, காவல்துறை, இராணுவம், கம்யூனிஸ்டு கட்சி ஆகியன இணைந்து ஒரு கலகத்தை **(Coup)** நடத்தினர். அது தோல்வியில் முடிந்தது. அதன் பிறகு நடந்த கருத்துக் கணிப்பில் மீண்டும் போரிஸ் எல்ட் சின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு அவர் கோர்ப்பசேவை வீட்டுக் காவலில் வைத்தார். 1991 ஆம் ஆண்டு, சோவியத் ஒன்றியம் பல நாடுகளாக பிரிந்தது. இதைத்தான் எல்ட்சினும் விரும்பினார். போரிஸ் எல்ட்சின் ஒரு சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்து, அதன் சொத்துகளை பறிமுதல் செய்தார். கோர்ப்பசேவ் இறப்பிற்கு அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து நாடுகள் புகழஞ்சலி செலுத்தின.

அமெரிக்காவின் ரொனால்டு ரீகன், இங்கிலாந்து பிரதமர் மார்கரெட் தாட்சர், கத்தோலிக்க கிறித்தவ மதத் தலை வரான போப் ஆண்டவர் ஜான் மிமி ஆகியோர் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கு முக்கியமானவர்கள் ஆவார்கள். போலந்து நாட்டிற்கு நான்கு முறை சென்றார் போப் ஆண்டவர். 'கடவுள் உங்களை காப்பாற்றட்டும்' என்று அவர் சொன்னதே அந்த மக்களை உசுப்பிவிட போதுமானதாக இருந்தது.

பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகள் 300 ஆண்டு களுக்கு முன்பாகவே நிலபிரபுத்துவத்திலிருந்து முதலாளித்து வத்திற்கு சென்றுவிட்டது. சோவியத் ஒன்றியத்தில் மிக தாமதமாகத்தான் முதலாளித்துவம் உருவானது. அதுவும் நகரங்களில்தான் உருவானது. அது ஒரு சோவியத் மாதிரி பரிசோதனை என்று ரிச்சர்ட் உல்ஃப் என்ற மார்க்சிய அறிஞர் கூறுகிறார்.

இன்று பல இலத்தீன் அமெரிக்க நாடுகளும் சோசலிசத் திற்கு ஆதரவாக வாக்களித்து வருகின்றனர். 2017 ம் ஆண்டு, மாஸ்கோவில் நடந்த ருஷ்யப் புரட்சியின் நூற்றாண்டு விழாவில் நான் கலந்துகொண்டேன். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்த பலர், ஸ்டாலினை மிக உயர்வாக பேசியதை நான் கண்டேன். ஒருவேளை யூரி ஆண்ரபோவ் காலத்தில், கட்சி முன்னெடுத்த சீர்திருத்தங்கள் அதன் போக்கில் தொடர்ச்சியாக சென்றிருந்தால் சோவியத் ஒன்றியம் வீழ்ந்து இருக்காது; உரிய மாற்றங்களை அந்த மக்களே செய்திருப்பர். அல்லது கோர்ப்பசேவ் சொல்லிய பெரிஸ்த்ரோய்கா, கிளாஸ்ட்நாஸ்ட் வழியில் சென்று, சோவியத் ஒன்றியம் பிளவுபடாமல் இருந்திருந்தால் இன்று பல நாடுகள் சோசலிச பாதையை அடைந்திருக்கும். அமைதியான உலகம் எட்டப்பட்டிருக்கும்.

இறுதியாக ஒரு வரலாற்று ஆசிரியர் கூறியதைச் சொல்லி எனது உரையை முடிக்கிறேன் : "கோர்ப்பசேவ், சோவியத் ஒன்றியத்தை புரிந்து கொள்ள தவறிவிட்டார். ஆனால் நல்ல மனிதர். அவர் மேற்குலக நாடுகளின் மீட்பர். ஆனால் உள்நாட்டில் தோல்வி அடைந்தவர்"

இவ்வாறு வகிதா கூறி முடித்தார்.

# களின் பிரதான

## ாக குஜராத்

முந்த்ரா துறைமுகத்தில் தான். இப்படியாக நாட்டைத்திடுக்கிட வைக்கும் கடத்தல் செய் திகள் குஜராத்திலிருந்துதான் வருகின்றனள. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கடந்த 5 ஆண்டு களில் மட்டும் குஜராத் மாநிலத்தில் மட்டும 2.5 லட்சம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பிடிபட்டிருக்கினறன. இந்தத் தொகை குஜராத் மாநிலத்தின் பட்ஜெட் தொகையை விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்றிய அரசின் சிபிஐ, அமுலாக்கப் பிரிவு, மத்திய போதைப் பொருள் தடுப்பு ஏஜென்சிகள் கடத்தல் குறித்து சரிவர விசாரிப்பதும் இல்லை. தனியார் துறைமுக உரிமை யாளர்களும் விசாரிக்கப்பட வில்லை.

**குஜராத் மாநில அரசின் உள்துறை அமைச்சர் ஹர்ஜ் சங்க்வி என்பவரது தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 3 போதைப் பொருள் தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.**

பிரதமரின் சொந்த மாநிலமான குஜராத் மூலமாகவே போதைப் பொருட்கள் நாடு முழுவதும் உள்ளே வருகின்றன. இதற்கு மூல காரணம் துறைமுகங்களை தனியார் மயமாக் கியதும், தனியார் கார்ப்பரேட்டுகளை வேண்டுமென்ற கண்காணிக்கத் தவறுவதும்தான்.

குறிப்பாக அதானிவசம் உள்ள முந்தரா துறைமுகத்தில் தான் அடிக்கடி மாத இடைவெளியில் கடத்தல் போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன.. பலமுறை போதைப் பொருட்கள் கைப்பற்றபட்ட போதிலும் முந்த்ரா துறை முக உரிமையாளர் அதானிடம் இதுவரை விசாரணை ஏதும் நடத்தப்படவில்லை என்பதும் அவர் பிரதமரின் நெருங்கிய நண்பர் என்பதால் அதானி மீது நடவடிக்கை இல்லையா? என்ற கேள்விகளை எதிர்கட்சிகள் தொடுத்து வருகின்றன.

போதைப் பொருள் பயன்பாட்டால் நாட்டின் வருங்காலம் எதிர்காலம் என்ற சொல்லப்படும் இளைஞர் வாழ்க்கை கேள்விக்குறியாகி, பள்ளி மாணவர்கள் தொடங்கி ஐ.டி. பணியாளர்கள் வரை ஆண் பெண் பாராமல் இரவு கேளிக்கை விருந்துகளில் போதைப் பொருட் கள் பயன்படுத்தப்படுவது பாஜக ஆட்சிக் காலத்தில் மிக சர்வ சாதாரணமாகிவிட்டது.



கடந்த செப்டம்பர் 21 இல் மகாராஷ்டிரா மாநிலம் நவி மும்பை நவசேவா துறைமுகத்தில், ரூ.1725 கோடி மதிப்பி லான "ஹெராயின்" என்ற போதைப் பொருட்களை, டெல்லி காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. நவசேவா துறைமுகத்தில் வந்து இறங்கிய கன்டெய்னர்களை சோதனை செய்யப்பட்டது.ஒரு கன்டெய்னரில்22,000 கிலோ( 22 டன் ) எடையுள்ள அதிமதுர குச்சி வேர்களில் 345 கிலோ அளவுக்கு ஹெராயின் போதை பொருள் இருந்துள்ளது இதன் மதிப்பு ரூ.1725 கோடி என போலீசாரால் மதிப்பிட்டுள்ளது.

புலன் விசாரணையில் குஜராத் மாநிலத்தை மையமாகக் கொண்டுதான் வெளிநாட்டியிலிருந்து கடத்தப்படும் போதைப் பொருட்கள் குஜராத் மாநிலத்தில் உள்ள பல துறைமுகங்களில் வாயிலாக இந்தியா முழுமைக்குக் கள்ளச் சந்தையில் விற்பனையாகி வருகின்றன என்ற உண்மை, தற்போது பட்டவர்த்தனமாக அம்பலமாகி உள்ளது.

**முந்த்ரா துறைமுக உரிமையாளர் அதானி மீது நடவடிக்கை ஏன் இல்லை ?**

முந்த்ரா துறைமுகத்தில்தான் இந்தியாவில் இதுவரை இல்லாத வகையில் ஒரே நேரத்தில் போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது குறித்து தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ ) விசாரித்து உள்ளதாம். இந்த விசாரணையில் டெல்லியைச சேர்ந்த தொழிலதிபர் ஒருவர், ஆப்கான் பிரஜைகள் உள்ளிட்டோரை கைது செய்து விசாரித்து வரு கின்றனர. ஆனால் இதுவரை முந்த்ரா துறைமுகத்தில் எந்த விசாரணையும் நடைபெற வில்லை. துறைமுகதத்தின் உரிமையாளர் மீதும் அதாவது அதானி மீதும் வழக்கு பதிவு செய்யப்பட வில்லை.

நாடு முழுவதும் போதைப் பொருட்கள் சப்ளை இந்த முந்த்ரா துறைமுகத்திலிருந்துதான் என்ற வெட்ட வெளிச்சமாக தெரிந்தும் கூட அதானி மீது விசாரணை நடத்த ஒன்றிய அரசு முன்வரவில்லை. மாறாக அயல்நாடுகளில் அதானிக்கு தொழில் ஒப்பந்தம் வாங்கிக் கொடுப்பதில்தான் அக்கறை காட்டுகிறது நிதர்சனமாக உள்ளது.

**மோடி ஆட்சியில் அதிகரிக்கும் கடத்தல் பொருட்கள் விபரம்**

2017 ஆண்டில் 2551 கிலோ அபின் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில், 2021 இல் 4386 கிலோ பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதாவது 4 ஆண்டுகளில் 172 சதவீதம் அதிகரித்துள்ளது.

2017 இல் கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் 2021 இல் 7282 கிலோ பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த 4 ஆண்டுகளில் 300 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அதாவது இந்தியாவில் ஒவ்வொரு 70 நிமிடங்களுக்கு ஹெராயின் பறிமுதல் செய்யப்படும் நிகழ்வு தொடர்கின்றன. அதில் பெரும்பான்மை குஜராத்திலும் அடுத்து மும்பையிலும் பெங்களூரிலும் போதைப் பொருட்கள் புழக்கத்தில் உள்ளன.

இந்திய இளைஞர் - மாணவர் சமூகத்தை கெடுக்க வல்ல போதைப் பொருட்கள் தடுக்க தவறுவது மட்டுமல்ல அதன் நுழைவாயிலாக இருப்பது காந்தியடிகளின் பிறந்த மாநிலம் குஜராத் என்பதும் அதற்குக் காரணமாக தற்போதைய மோடி அரசின் தனியார்மயக் கொள்கை என்பதும் வெட்கக்கேடானது அவமானகரமானது. இந்திய நாட்டையும், குறிப்பாக இந்திய இளைஞர்களை போதைப் பொருட்கள் மயக்கத்திற்குட்படுத்தி கொள்ளை லாபம் அடிக்க துறைமுகங்கள் வாயிலாக போதைப் பொருள் கடத்தலுக்கு மறைமுக உடந்தையாயிருப்பது மோடியின் ஒன்றிய அரசுதான்.

நாட்டை ஆளும் மோடி ஆட்சி என்றுமே கார்ப்பரேட் நலன் களுக்காக இயங்கி வருகிறது. அதற்கு மக்கள் நலன் ஒரு பொருடல்ல. தங்கள் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளவும் அதற்கு மத பிரிவினை அரசியல் செய்ய துணையாய் இருப் பதும் அதானி அம்பானி போன்ற ஆகப்பெரும் கார்ப்ப ரேட்டுகளே. அதிலும் குறிப்பாக குஜராத் மாநிலம் என்றாலே வர்த்தகம் வர்த்தகசூதாட்டமான பங்குசந்தை வணிகம் இவற்றை மையமாக கொண்டு இயங்கும் மாநிலம். நாட்டை பாதுகாக்கும் ராணுவததில் குஜராத் தின் பங்களிப்பு என்ன என்பது கேள் விக்குறியே.

மாறாக கோடிக் கணக்கில் வங்கிக் கடன்கள் பெற்று மக்கள் பணத்தை கொள்ளை அடித்து வெளிநாடுகளுக்கு தப்பிய நீரவ் மோடி, ஐபிஎல் லலித் மோடி, மெகுல் சோக்சி, அமி மோடி,நீஷால் மோடி,ஜதின் மேத்தா, சேட்டன் சன்டெஸாரா, நிதின் சன்டெஸாரா ஆகியதேச விரோத பேர்வழிகளின் மாநிலம்தான் குஜராத்.

அண்மையில், குஜராத் மையமாக கொண்டு இயங்கிய ஏபிஜி ஷிப்யார்ட் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் ரிஷி காமேஷ் அகர்வால் என்ற நபர், வங்கிகளிடமிருந்து பெற்று திருப்ப செலுத்தாமல் ஏப்பம் விட்ட தொகை எவ்வளவு தெரியுமா? ரூ22,842 கோடி.

இப்படியாக இந்திய மக்களின் வரிப்பணங்களை வங்கிக் கடன் வழியே கொள்ளை அடித்த கும்பலின் பிறப்பிடங்களும் குஜராத்.

போதைப் பொருள் கள்ளச் சந்தைக்கு மூலமாக இருப்பதும் இதே குஜராத் தான். இதுதான் இந்தியாவுக்கே மாடலாம். வெட்கக்கேடு.அவமானகரம்.

இதற்கு காரணமாக உள்ள மோடியின் ன்றியஅரசை வரும் தேர்தல் மூலம் வீழ்த்துவதுதான் இந்திய தேசபக்தனின் கடமை என்பதை உணர்ந்தும் பிறரை உணர்த்த வைக்கவும் செயல்படுவோமாக.

தொடர்புக்கு **94431 20051**

# கோயில்கள் மதம் சார்ந்தவையா?

- எஸ்.கிருஷ்ணன்



**தஞ்சைப் பெரிய கோயில் கி.பி.1003லிருந்து 1010க்குள் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு ராஜராஜசோழனால் கட்டப்பட்டது. அதன் உயரம் 216 அடி ஆகும். இந்தக் கோயிலை கட்ட கோவிலைச் சுற்றிலும் 60 கி.மீ சுற்றளவில் எவ்வித மணலோ, கற்களோ இல்லை. ஆனால் 103 லட்சம் டன் கிரானைட் கல்லை மூவாயிரம் யானைகள் மூலம் கொண்டு வரப்பட்டு, ஒரு பிடி சிமெண்ட் பசையில்லாமல் கட்டப்பட்டுள்ளது.**

கோபுர உச்சியில் ஒரே கல்லால் செதுக்கப்பட்ட 81 டன் எடையுள்ள விமானம் உள்ளது. எவ்வித விஞ்ஞான முன்னேற்றம் இல்லாத காலத்தில் 81 டன் எடையுள்ள ஒரே கல்லை 216 அடி உயரத்தில் கொண்டு போய் வைத்துள்ளது விந்தையிலும் விந்தை. அதேபோல், கோவிலின் முன் உள்ள நந்தியும் ஒரே கல்லால் செதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோவிலின் கோபுரத்தில் அடியில் எவ்விதப் பள்ளமும் தோண்டாமல் தன் தரையில் கட்டப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் 6 பூகம்பங்களை தாங்கி அசையாமல் இருக்கும் தஞ்சைக் கோயிலின் 216 அடி உயரமுள்ள கோபுரம் எத்தனை ஆயிரம் மனித சக்தியை பயன்படுத்தி ஏழு ஆண்டுகளில் கட்டப்பட்டிருக்கும். இவையெல்லாம் சமூக வளர்ச்சியில், மனித மூளையும், உழைப்பும் ஒரு பலமான நிலப்பிரபுத்துவ அமைப்பின் அடித்தளமின்றி சாத்தியமற்ற ஒன்றாகும்.

அதிலுள்ள அன்றைய அறிவு செறிந்த விஞ்ஞானம். எந்தப் பல்கலையிலும் பேராசிரியராலும் எழுதப்பட்டு கற்பிக்கப்பட்டாத ஞானம். இதைப் போன்றே எண்ணற்ற கோயில்கள் தமிழ் நாடெங்கும் உள்ளன. தஞ்சை கோவிலைப் போன்று ஒரு பிடி சிமெண்ட் இல்லாமல் கட்டப்பட்டுள்ள கோவில்களும் தமிழகத்தில் ஏராளம் உண்டு.

கோயில் சிற்பங்கள் எதைப் பறைசாற்றுகின்றன. கோயில்கள் வழிபாட்டு முறைகள் எவ்வாறு தோன்றி வளர்ந்தன என்ற கேள்விக்கு விடை தேடவேண்டும்.

உலகப்பொதுமறை திருக்குறள், அறம், பொருள், இன்பம் என்ற வாழ்வியலை விவரிக்கிறது. திருக்குறளின் இரண்டாவது அதிகாரம் வான் சிறப்பு என்பது குறிப்பிடத்தக்கது. நீரின்றி அமையாது உலகு என்கிறது வள்ளுவம்.

மனிதன் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவற்றிலிருந்து விலக்கி, அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை ஆகியவற்றை தனி மனித இயல்பாக்கி வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் உயிரை வளர்த்து, உயர்த்தும் நெறிகளை கோயில்கள் மூலம் கல்லாதவர்க்கும் அன்றாடம் கற்பிக்கும் ஒரு மையமே கோயில்களாக தோன்றி வளர்ந்துள்ளன.

கல்விக்கூடங்கள், பண்பாட்டு மையங்கள் தோன்றாத காலத்தில், இவை அனைத்திற்கும் கோயில்களே மனிதர்கள் கூடிக் களிக்கும் இடமாக இருந்திருக்கின்றன. சமுதாய முன்னேற்றத்திற்கான திட்டக் கமிஷனாக கோயில்களே விளங்கியுள்ளன. இன்றும் கிராமங்கள் தோறும் கோயில்களே சமுதாய மையங்களாக உள்ளன. கோயில்கள் மூலம் பக்தி மட்டுமே வாழ்வு, பக்திக்காகவே கோயில்கள் தோன்றின என்று 6,7ம் நூற்றாண்டுகளில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் கூறவில்லை. அறவாழ்க்கையை மட்டுமே முன்னிறுத்துகின்றன. அறநெறி மற்றும் பக்தி நெறியில் ராமானுஜரும், விவேகானந்தரும், வள்ளலாரும் வாழ்ந்து காட்டினர். மானிடத்தை அன்பால் அறச்செயலால் பக்தியால் எவ்வித பாகுபாடில்லாமல் இணைக்க முயன்றனர்.

அதனால் தான் கோயில்களில் ஒப்புரவு மட்டுமே உயர்ந்த நெறியாகக் கடைபிடிக்கப்பட்டது. அதற்குப் பெயர்தான் ஆகமம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது பூஜை செய்கின்ற, வழிநடத்துகின்ற முறைகளின் தொகுப்பே ஆகமம் ஆகும். சைவமும், வைணவமும் வழிபாட்டை ஆகம நெறிகளாக தமிழிலே கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஆகம நெறிக்கும், வேதத்திற்கும் சம்மந்தம் கிடையாது. வேதப்பாடல்கள் தோன்றிய காலத்தில் கோயில்கள் என்ற நிறுவனமோ, ஆகம விதிகளோ கிடையாது. ஆகம விதிகளின் படிதான் இன்றளவும் கோவிலை வழிநடத்துகின்றனர். இந்து என்ற சொல்லுக்கும், அரசியல் சட்ட அங்கீகாரம் இருக்கிறதே தவிர, இந்து நெறி என்ற எவ்வித நடைமுறையும் கோவில்களில் பின்பற்றப்படுவது கிடையாது.

**அதனால் இந்துக் கோயில்கள் என்று கூறப்படுவது ஒரு அப்பட்டமான மக்களை ஏமாற்றும் ஒரு திரிபு வாதமாகும். இந்து என்ற சொல்லுக்கு சமய ரீதியாகவும், அங்கீகாரம் கிடையாது.**

அதனால் அண்மையில் சென்னை உயர்நீதிமன்ற "ஆகம விதிகளின்படி கோயில் நடைமுறைகள் வேண்டுமென்று தீர்ப்பளித்துள்ளது. அதில் சமய கோட்பாடு இல்லை.

மானுடத்தின் மகத்தான வெற்றிக்கு ஒப்புரவு நெறியைவிடச் சிறந்த வாழ்க்கை நெறி இல்லை.

இதையே வள்ளுவர்,

"புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற"

அதாவது விண்ணகத்திலும், மண்ணகத்திலும் ஒப்புரவை விட உயர்ந்த நெறி ஒன்றுமில்லை என்று பறைசாற்றுகிறார். ஒப்புரவிற்கான ஊற்றுக்கண் கோயில்களே ஆகும்.

இந்திய அரசியல் சட்டத்தின் யார் இந்து என்பதின் வரையறை:

யாரெல்லாம் கிறிஸ்தவம், இஸ்லாம், சீக்கியம், பார்சி, பௌத்தம், ஜைனம் போன்ற பிற மதங்களைச் சாரவில்லையோ அவர்களெல்லாம் இந்துக்கள் ஆவார்கள் என்று இந்திய அரசியல் சட்டம் வரையறை செய்கிறது.

அதையே மறைந்து போன காஞ்சிப் பெரியவர் எழுதிய "தெய்வத்தின் குரல்" என்ற புத்தகத்தில் "நல்லவேலையாக வெள்ளைக்காரன் வந்து நமக்கு இந்து என்று பொதுப் பெயர் வைத்தானோ, இல்லையோ, நாம் பிழைத்தோம்" என்று எழுதி உள்ளார்.

அப்படியென்றால், அந்தச் சொல் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தால் அதிகார மற்றும் அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதை காஞ்சிப் பெரியவர் பகிரங்கமாக ஒப்புக் கொள்கிறார்.

அதாவது இந்து என்ற சொல் இந்தியாவில் உள்ள வேதங்களிலோ, உபரிடதங்களிலோ, மகாபாரதம், இராமாயனம் போன்ற இதிகாசங்கள் மற்றும் பக்தி இலக்கியங்களிலோ இடம் பெறவில்லை. இதை இந்து மத பீடங்கள் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளன. மேலும் இந்து என்ற சொல் இந்தியாவில் உள்ள எந்த மொழிகளிலும் பண்டைக் காலத்தில் இடம் பெறவில்லை.

இந்தியாவின் விடுதலைக்கு முன்பு 534 குறுநில மன்னர்கள் தங்களுக்குள் வாரிசு மற்றும் அதிகாரசண்டை, சொத்துப் பங் கீடுக்காக ஏற்பட்ட சண்டையில் பல்வேறு இன மக்களால் அந்தப் பகுதியில் பின்பற்றப்பட்ட பழக்க வழக்கங்களை (Customs and Usage) கோட்பாடுகளாக்கி சட்டமாக தொகுக்க வேண்டிய கட்டாயம் ஆங்கிலேய அரசுக்கு ஏற்பட்டது.

அவ்வாறு கல்கத்தா பிரசிடென்சியில் பணியாற்றிய பிரிட்டிஷ் அதிகாரி சர் வில்லியம் ஜோன்ஸ் 1799ல் தன் கீழ் ஒரு குழு அமைத்து நாடு முழுவதுமுள்ள பல்வேறு சமஸ்தானங்களில் மக்களால் பின்பற்றி வரப்பட்ட கோட்பாடுகளைத் தொகுத்து அதற்கு (Hindu law) இந்துச் சட்டம் என பெயரிடப்பட்டது. அதன் பின்னர் அச்சட்டம் அந்தந்த பூகோளப் பிரிவின் அடிப்படையில் பிரிவினை செய்யப்பட்டு, அரசியல் அங்கீகாரம் பெற்றது.

பின்னர் நீதிபரிபாலனத்திலும், நீதிமன்றங்களில் இன்று வரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், நாடு விடுதலை அடைந்த போது தொகுக்கப்பட்ட அரசியல் சட்டத்தில் இந்துக்கள் யார்? என்பதும் வரையறுக்கப்பட்டது.

நம்முடைய நாட்டில் இந்து என்ற சொல்லை சிந்து நதிக்கரையில் வாழ்ந்த மக்கள் சிந்து சமவெளி நாகரீகத்தை முகலாய மன்னர்கள் தொடர்ந்து பிரிட்டிஷ்காரர்கள் Zindoo என்று பெயரிட்டு அழைத்தனர். அச்சொல்தான் காலப்போக்கில் இந்து என்று மருவி அழைக்கப்பட்டுள்ளது என்பது தான் வரலாறு.

ஆனால் இந்தியாவில் திராவிடம் – ஆரியம் என்று இரண்டு இனக்குழுக்கள் தான் வெவ்வேறு கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்களை கொண்ட மக்களாக வெவ்வேறு காலகட்டங்களில் பரிணமித்துள்ளன என்பது தான் வரலாற்று உண்மை. இது பற்றி பண்டிட் ஜவஹர்லால் நேரு தனது Discovery of India (இந்தியாவைக் கண்டேன்) என்ற நூலில் பல்வேறு வரலாற்றுச் சான்றுகளுடன் விவரித்து எழுதியுள்ளார்.

ஏனெனில் வாழ்க்கையில் நன்று எது? என்று தேர்ந்திடல் பகுத்தாராய்தல் வேண்டும். துன்பங் கலந்த வாழ்க்கையிலிருந்து மனிதன் வெறும் பக்தியால் விடுபடுவது கிடையாது. ஆனால் இன்று பக்தியால் தீர்வாகாமல், பயத்தால் கடவுள் வழிபாடு முன்னிறுத்தப்படுவது அதற்கு சமயம்தான் தீர்வு என்ற நிலையை அரசியல் ரீதியாக உருவாக்கப் படுகின்றது. அரசே மக்களிடம் பகுத்தறிவற்ற மூட நம்பிக்கைகளுக்கு தீனி போடும் சமயச் சார்போடு கூடிய அரசியல் முன்னிறுத்தப்படுகிறது.

திருக்கோயில்களில் வெறும் கடவுள் வழிபாட்டுத் தலமாக இல்லாமல், சமூக முன்னேற்றத்தின் அனைத்து திட்ட நடவடிக்கைக்கும், திட்டமிடுதலுக்கும் ஒரு பொது இடமாக சமூகத்தின் அனைத்துத் தரப்பினரிடம் பங்களிப்பு உழைப்புடன் உருவாக்கப்பட்டதன் விளைவுதான் கோயில்கள். ஒரு சமூகப் பிரிவினை இல்லாத பொது நலன் மட்டுமே கொண்ட சமுதாய மையங்களாகப் பாவிக்கப்பட்டன.

திருக்கோயிலைச் சார்ந்த அறக்கட்டளைகள், மன்னர்களின் மானிய நிலங்கள், மனிதர்களின் கொடைகள், அதனால் சமூக நன்மைக்காக செயலாக்கப்படும் நடைமுறை கோயில்கள் மீது காலங்காலமாக ஒரு அளவற்ற நம்பிக்கைகளை வளர்ந்தன.


அதனால் தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற மூதுரை பிறந்தது. அதாவது ஊரின் தேவைகளை ஊரார் ஒன்றி கூடிப்பேசி, தீர்மானித்து, செயல்படுத்த அதன் மூலம் ஒரு கூட்டு வாழ்க்கை , சமுதாய ஒழுங்கமைவை ஏற்படுத்தும் மையம் தான் கோயில்களாக இருந்துள்ளன.

கோயில்கள் ஒரு சமுதாய மையமாக இருந்தன. அதில் சமயம் என்ற சொல்லடை உணவு சமைத்தல், "பெண் சமைந்தாள்" சமைபல் என்ற சொற்களின் மூலம் கோயில்கள் மனிதனை பக்குவப்படுத்தும் மையங்களாக திகழ்ந்தன. அதில் எவ்வித வெற்றுக் கூச்சலும், வெளி வேடத்திற்கு வழிகாட்டும் மையங்களல்ல. கோயில்கள் ஒப்புரவு மையங்களே.

1970, 1980 களில் சங்கராச்சாரியார் கோவிலுக்குள் நுழையக் கூடாது என்று சைவர்கள் கிளர்ச்சி செய்தனர். சங்கர மடம் நடத்துகின்ற திருப்பாவை, திருவெம்பாவை மகரசங்கராந்தி ஆகியவற்றிற்கு வைணவர்களும் செல்லமாட்டார்கள். அதனால் தான் அதைக் கைவிட்டு, இந்து என்ற சொல்லை மட்டும் வைத்து ஏதேனும் ஒரு போலியான அரசியல் அதிகாரத்தை மறைமுகமாக திணித்தனர். இதைத் தங்கள் வசம் வைத்துக் கொண்டு, மக்களைக் குழப்பி, ஏமாற்றி கோயில்களை மதத்தின் அடையாளமாகச் சித்தரித்தனர். இந்திய ஆன்மீக நெறியை சீர்குலைத்து, வேத காலத்தில் தோன்றாத மதத்தை, அதிலுள்ள கோட்பாடுகளை திருக்கோவில் நடைமுறைகளாக்கி, அதன் மூலம் அரசியல் லாபம் தேடி வருகின்றனர். இந்த சமூக, அரசியல் நெருக்கடிகளிலிருந்து மக்களை காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் நம் மீது விழுந்துள்ளது என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

செல்: 94432 89949

## வீட்டு வரி உயர்வுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடும் ஆட்சேபனை



மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. நகர்மன்ற தலைவர் கீதா மைக்கல் ராஜ் தலைமை வகித்தார். துணைத் தலைவர் முத்துலெட்சுமி முன்னிலை வகித்தார்.

நகர் மன்றத்தில் வைக்கப்பட்ட 27 பொருள்களில் முதல் பொருள் வீட்டு வரி உயர்வுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர். அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

# ஆ.ராசா மீதான மதவெறி சக்திகளின் அச்சுறுத்தல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ஆ.ராசாவின் சமீபத்திய உரையை முன்வைத்து, பாரதீய ஜனதா கட்சியும், மதவெறி அமைப்புகளும் தமிழ்நாட்டில் வன்முறையை தூண்ட முயற்சிக்கின்றன.

மனுஸ்மிருதியில், சாதிய முறையை நியாயப்படுத்தியும், இந்தியாவின் பெரும்பகுதி மக்களை இழிவுபடுத்தியும் உள்ள வாசகங்களை எடுத்துக் கூறியும், இவை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் நோக்கங்களுக்கும், விதிகளுக்கும் எதிராக உள்ளதையும் ஆ.ராசா தன் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பாரதீய ஜனதா கட்சியும், மதவெறி அமைப்புகளும் ஆ.ராசா இந்து மதத்திற்கு எதிராக பேசியதாக திரித்துக் கூறி தமிழ்நாட்டில் கலவரத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர். இவர்களுக்கு கருத்துச் சுதந்திரத்தின் மீது எப்பொழுதுமே நம்பிக்கை இருந்ததில்லை. கருத்தை கருத்தால் எதிர்கொள்ள முடியாமல் வன்முறையை நாடுகின்றார்கள். இவர்களின் இத்தகைய நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கின்றது. மேலும் ஆ.ராசா உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



## ஆ.ராசாவின் உரையை முன்வைத்து

# மத அடிப்படைவாத சக்திகள் வன்முறையை தூண்ட முயற்சி

## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஆர்ப்பாட்டம்

திமுக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ஆ.ராசாவின் சமீபத்திய உரையை முன்வைத்து பாரதீய ஜனதா கட்சியும், சில மத அடிப்படைவாத சக்திகளும் தமிழ் நாட்டில் வன்முறையை தூண்ட முயற்சிக்கின்றனர். மனுஸ்மிருதியில் சாதிய முறையை நியாயப்படுத்தியும் ஒடுக்கப்பட்ட மக்களை இழிவுபடுத்தியும் உள்ள வாசகங்களைத்தான் ஆ.ராசா எடுத்துக் கூறினார். ஆனால், பாரதீய ஜனதா கட்சியும் இந்து மத அடிப்படைவாத அமைப்புகளும் ஆ.ராசா இந்து மதத்திற்கு எதிராக பேசியதாக தவறாக திரித்துக்கூறி தமிழ்நாட்டில் கலவரத்தை தூண்ட முயற்சிக்கிறார்கள். கருத்து சுதந்திரத்தின் குரல் வளையை நெரிக்க முயற்சிக்கிறார்கள். இத்தகைய ஜனநாயக விரோத சக்திகளை கண்டித்து செப்.24 அன்று சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின், வடசென்னை, மத்திய சென்னை, தென்சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்களின் சார்ப்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில பொது செயலாளர் மு.வீரபாண்டியன், கண்டன உரை நிகழ்த்தினார். மாநில செயலாளர்கள் கீ.சு. குமார், எஸ்.கே.சிவா, மாவட்ட செயலாளர்கள் ஜீ.சுப்ரமணி, ஆர்.எஸ்.மாதவன், காஞ்சி ராமச்சந் திரன் ஆகியோர் உரையாற்றினர். லி.உதயகுமார், டி.செண்பகம், ஆர்.எம்.சந்தோஷ், எம்.சி. தில்குமார், எஸ்.பாஸ்கர், அ.சுப்ரமணி மற்றும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். அருள் நன்றி கூறினார்.

# பாதாள சாக்கடை கிணறுகளை முறையாக பராமரிக்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆணையரிடம் மனு




பாதாள சாக்கடை கிணறுகளை புணரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்தை போர்க்கால அடிப்படையில் நடைமுறைப்படுத்த கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி தலைமையில் இன்று கும்பகோணம் மாநகராட்சி ஆணையரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர்கள் க.சுந்தர்ராஜன், ப.சாமிநாதன், ஆர்.மதன்குமார், ஆர்.கே.ரவி, மார்க்கெட்.எஸ்.ரவி, கே.நாராயணன் உள்ளிட்ட முன்னணி நிர்வாகிகள் பங்கேற்று கோரிக்கை மனு அளித்தனர்.

மனுவில் கூறியிருப்பதாவது...

கும்பகோணம் மாநகராட்சி பகுதிகளில் பல இடங்களில் பாதாள சாக்கடை கிணறுகள் நிரம்பி தெருக்களில் வழிந்து ஓடும் நிலை உள்ளது. இதனால் துர்நாற்றம் வீசுவதோடு நோய் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் அளிக்கும் புகார்களின் அடிப்படையில் தற்காலிகமாக தீர்வு காணப்படுகிறது.

கடந்த ஆட்சி காலத்தில் பாதாள சாக்கடை கிணறுகளை தனியார் நிறுவனம் மூலம் சீரமைப்பதற்காக லட்சக்கணக்கில் மக்கள் வரிப்பணம் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் பணிகள் முறையாக நடைபெறாத காரணத்தினால் தற்போதும் பிரச்சனைகள் தொடர்கிறது. கடந்த காலத்தில் நடைபெற்ற பணிகள் மற்றும் செலவினங்கள் குறித்தும் உரிய உயர்மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும். முறைகேடுகளில் ஈடுபட்ட அதிகாரிகள் மற்றும் தனியார் நிறுவனம் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதாள சாக்கடை கிணறுகள் உள்ள சாலைகளில் ஏற்படுத்தப்பட்ட மேடு பள்ளங்கள் தற்போது வரை சீரமைக்கபடவில்லை. பிரதான சாலைகளில் உள்ள மேன்ஹோல்கள் சாலையைவிட உயரமாக அமைக்கப்பட்டு இருப்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. வாகனத்தில் செல்வோர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கும்பகோணம் நகரில் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்டம் முற்றிலும் தோல்வியடைந்துள்ளது.

சில மாதங்களில் மழைக்காலம் தொடங்க உள்ள நிலையில் பாதாள சாக்கடை கிணறுகளை புணரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட் டத்தை போர்க்கால அடிப்படையில் நடைமுறை வேண்டும்.

பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவ னங்களிடம் வழங்காமல் மாநகராட்சி பணியாளர்கள் மூலம் நேரடியாக செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

# தோழர் பி.எஸ்.ஆர் அவர்களின் 61ம்ஆண்டு வீரவணக்க நாள் : அ.பாஸ்கர்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்ற வள்ளுவப் பெருந்தகையின் வார்த்தைகளை காட்டிலும் வேறென்ன உழவர் பெருமக்களுக்கு வாழ்த்து வேண்டும். ஆனால் புகழுக்குரிய இந்த மக்களின் வாழ்க்கை நிலை பெருமைப்பட தகுந்ததாக இல்லை அடிமை இந்தியாவிலும் இல்லை, சுதந்திர இந்தியாவிலும் இல்லை.

“உழுது விதைத்ததுறுப் பார்க்கு உணவில்லை” என்று பதிவு செய்தான் பாரதியின் வார்த்தைக்கு இணங்க ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் விவசாய தொழிலாளர்கள் விலங்குகளை விட கேவலமாக மதிக்கப்பட்டார்கள் தெருக்களில் நடக்க கூடாது, தோளில் துண்டு போடக்கூடாது, காலில் செருப்பு அணியக் கூடாது, பெண்கள் முழங்கலுக்கு மேல் சேலை கட்ட வேண்டும் என்ற நிலப் பிரபுக்கள், ஜமீன்தார்கள், மடாதிபதிகள்,ஆதிக்க வெறியர்களின் கோரத்தாண்டவத்தை அடக்கி நிறுத்தி “தோளில் துண்டு போடு, காலில் செருப்பு போடு, அடித்தால் திருப்பி அடி” என் அடிமை பட்ட மக்களை தட்டி எழுப்பி கைகளில் செங்கொடியை கொடுத்து நம்பிக்கையை ஏற்படுத்தி, சமூக விடுதலையை பெற்று தந்த மாமனிதர் தோழர் பி சீனிவாச ராவ் அவர்களின் 61 ஆம் ஆண்டு நினைவு நாளில் பி.எஸ்.ஆர் நினைவிடம் நோக்கி (திருத்துறைப்பூண்டி)

அணி திரள்வோம்... வீரவணக்கம் செய்வோம்....

வீர சபதம் ஏற்போம் ...

தோழர் பி.எஸ்.ஆர் அவர்களின் 61ம் ஆண்டு நினைவு நாளில் கம்யூனிஸ்ட்டுகள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புத்தகம்

தோழர் பி.எஸ்.ஆர் அவர்கள் 1947ல் ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை எட்டு மாதக் காலம் கம்யூனிஸ்ட் கட்சி அடக்கு முறையைச் சந்தித்த நேரத்தில், தலைமுறை வாழ்க்கையில் நிகழ்ந்த அனுபவங்களை அவரே இலக்கிய சுவையுடன் கட்சி தலைமைக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு தான் அந்த புத்தகம் “தலைமுறைவு வாழ்க்கையில் எனது அனுபவம் “படிப்பபோம் அனுபவத்தை பெறுவோம்...

மக்களின் விடியலுக்காக போராட முன்வருவோம்....

## 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

# தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம்

பத்திரிகையாளர்களின் 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் செப்.29 அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் இளசை எஸ்.கணேசன், பொதுச் செயலாளர் கா.குரு ஆகியோர் தலைமை வகித்தனர். மாநிலத் துணைத் தலைவர்கள் கே.ஜெகதீசன், டி.எம். தர்மராஜா, இணைச் செயலாளர்கள் வி.எம்.தமிழன் வடிவேல், ஏ.ஐஸ்வர்யன், எக்ஸ்.சார்லஸ், துணைத் தலைவர் என்.கே. மூர்த்தி, இணைச் செயலாளர்கள் வி.கோபாலகிருஷ்ணன், ஜி.நாகராஜ், பொருளாளர் ஏ.வி.கன்னையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோரிக்கைகள் வருமாறு: பத்திரிகையாளர்களை அரசியல் கட்சி தலைவர்களில் சிலர் தரக்குறைவாக மிரட்டும் தொணியில் பேசி வருவதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இவர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாணவி மர்ம மரணம் குறித்து புலன் விசாரணை செய்யும் பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஊடகங்கள் 22.08.22 உயர்நீதி மன்ற உத்தரவை காட்டி மிரட்டப்படுவதையும், கைது செய்வதையும் கண்டிக்கின்றோம்.

அரசியலமைப்புச் சட்டம் 19வது பிரிவு உறுதிப்படுத்தியுள்ள கருத்துச் சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும்.

ஒன்றிய அரசின் பத்திரிகையாளர் மசோதாவை தடுத்து நிறுத்த வேண்டும்.

மஜிதியா சம்பளக் குழு பரிந்துரைத்துள்ள அடிப்படையில் அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

செய்தி சேகரிக்க செல்லும் பத்திரிகை ஊடகவியளர்கள் தாக்கப்படுவதை தடுக்க பத்திரிகையாளர்களுக்கு அரசு தனிப்பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட வேண்டும்.

60வயதிற்கு மேற்பட்ட அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் தாமதமின்றி ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் சமர்ப்பிக்கப்படும் ஓய்வூதிய மனுக்கள் மீது காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும்.

வருங்கால வைப்பு நிதியில் (பிராவிடண்ட் பண்ட்) வழங்கப்படும் ஓய்வூதியம் குறைந்தபட்சம் ரூ. 9,000 குறையாமல் இருக்க வேண்டும்.

பணியில் இருக்கும் போது மரணமடையும் பத்திரிகையாளர்களுக்கு உரிய குடும்பநல நிதி காலதாமதமின்றி உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

பத்திரிகையாளர்களுக்கு குறைந்த தவணையில் அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும். அரசு பேரூந்தில் இலவசமாக பயணம் செய்யும் வகையில் பேருந்து அட்டை வழங்கப்பட வேண்டும். சுங்கச் சாவடியில் பணம் வசூலிப்பதில் பத்திரிகையாளர்களின் வாகனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். பத்திரிகையாளர் நல வாரியத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கப்படுவதுடன், நல வாரியத்தின் செயல்பாடுகள் வெளிப்படையாக விளக்கப்பட வேண்டும். நலவாரிய குழுவில் பத்திரிகையாளர் சங்கங்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப் பட வேண்டும்.

பத்திரிகை மற்றும் ஊடக நிறுவனங்களில் நடந்து வரும் திடீர் பணி நீக்கம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

சிறு பத்திரிகை உட்பட அனைத்து செய்தியாளர்கள், புகைப்பட கலைஞர்களுக்கு அடையாள அட்டை இலவச பஸ் பாஸ் வழங்கப்படவேண்டும்.

2019ஆம் ஆண்டு முதல் அரசு அட்டை புதியதாக விண்ணப்பித்த பத்திரிகையாளர்களுக்கு அரசு அட்டை முழுமையாக வழங்கப்பட வேண்டும். அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்.

2023 ஆண்டிற்கான பத்திரிகையாளர் அடையாள (AccreditionCard - Press Pass) என்ற இரட்டை முறை ஒழிக்கப்பட்டு ஒரே வகையான அடையாள அட்டை அனைவருக்கும் ஜனவரி மாதமே முழுமையாக வழங்கப்பட வேண்டும். மேலும், புதிய பத்திரிகைகளுக்கும் அரசு அங்கீகார அட்டை தரப்பட வேண்டும். அரசு விளம்பரங்கள் மற்றும் நூலக அனுமதி (ஆர்டர்) சிறு பத்திரிகைகளுக்கும் வழங்கப்பட வேண்டும். மானிய விலையில் அச்சு காகிதங்கள் வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

## இந்த வார தம்பிக்குறள்

### 89. வீழ்நாள் பாடமை

**வைகறைத் துயிலெழு வாஅன் உலகில்**
**கையார பணம்பெறு வான்.**

அதிகாலையில் உறக்கம் நீங்கி எழுந்து சுறுசுறுப்பாக, எவன் செயல்படுகிறானோ அவன் நிறைந்த வாழ்க்கைக்கான பொருளைப் பெறுவான். (வைகறைத் துயிலெழு – அவ்வையார்)

**வீழ்நாள் படாமைநன் றாற்றின் அஃதுலகில்**
**வாழும்நாள் நீட்டும் நினை.**

ஒவ்வொரு நாளையும் வீணாக்காமல் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்பவனின் வாழ்நாள் நீண்டுகொண்டே செல்லும். (நேரத்தை நன்கு கணக்கிட்டு செலவிடுக).



## தோழர் சி.எஸ்.சுப்பிரமணியம் நினைவு தினம்

மறைந்த தோழர்.சி.எஸ்.சுப்பிரமணியம் அவர்களின் நினைவு நாளையொட்டி,கோபியில் உள்ள ஈரோடு வடக்கு மாவட்ட கட்சி அலுவலகத்தில், அவரின் திருவுருவப்படத்திற்கு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில கட்டுப்பாட்டுக் குழுத்தலைவர் கே.சுப்பராயன், மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் எம்.இரவி, மாநிலக்குழு உறுப்பினர் டி.ஏ.மாதேஸ்வரன் ஆகியோர் மாலையிட்டு மரியாதை செலுத்தினர்.



## சமூக விரோதி எஸ்.எம்.ராஜாவை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வலியுறுத்தல்

நெசவு மற்றும் சலவை தொழிலுக்கும் தொழிலார்களுக்கும் தொடர்ந்து தொல்லை கொடுத்து வரும் ஒட்டுமொத்த சமூகத்தின் விரோதியான சக்கம்பட்டி ஜெ.ஜெ நகரில் வசித்து வரும் எஸ்.எம்.ராஜா என்பவரை உடனடியாக குண்டர் சட்டத்தில் கைது செய்ய வலியுறுத்தி பாதிக்கப்பட்ட தொழிலார்கள் பொதுமக்களோடு ஊர்வலமாக சென்று ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கி.பெருமாள், மாவட்டகுழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன், ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி, நகர செயலாளர் க.முனீஸ்வரன் மற்றும் பொதுமக்கள், தொழிலாளர்கள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்

## உறுப்பினர் அட்டை வழங்கும் விழா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மதுரை புறநகர் மாவட்டம் சத்தியமூர்த்தி கிளை சார்பாக, உறுப்பினர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் முத்துவேல், மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணன் சத்தியமூர்த்தி கிளைச் செயலாளர் வீராங்கன் மற்றும் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை மாவட்ட எஸ்.கே.எம். சார்பில்

## தெருமுனை பிரச்சாரக் கூட்டம்

மதுரை தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் கூட்டமைப்பு (ஷிரிவி) சார்பில், மாநிலம் முழுவதும் தெருமுனை பிரச்சார கூட்டத்தின் மதுரை மாவட்டத்தில் உள்ள கப்பலூர், திருப்பரங்குன்றம், சமயநல்லூர், ஒத்தக்கடை, வாடிப்பட்டி மற்றும் மேலூர் பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக விவசாயிகளின் 8 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி திருப்பரங்குன்றம் 16 கால் மண்டபம் அருகே, ஏ.ஐ.கே.எஸ் திருப்பரங்குன்றம் தாலுகா செயலர் மகாமுனி தலைமையில் நடைபெற்றது. விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தனம், ஏ.ஐ.கே.எஸ் மாவட்ட தலைவர் ரவிவர்மா, ஏ.ஐ.கே.எஸ் திருப்பரங்குன்றம் தலைவர் பிச்சை, புரட்சிகர இளைஞர் முன்னணி குமரன், சி.பி.ஐ மாவட்ட குழு உறுப்பினர் ஜெகநேசன், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் புறநகர் மாவட்டச் செயலாளர் நாகஜோதி, அ.இ.வி.மகாசபை மா.தலைவர் பகத்சிங், ஏ.ஐ.கே.எஸ் மாதர் சங்கம் நிவேதா, பகுஜன சமாஜ் கட்சி வி.ச.மா தலைவர் துரைப்பாண்டியன், அ.இ.வி.ச தாலுகா செயலாளர் ராதாகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் முத்துவேல் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

## ஆட்டோ ஓட்டுனர் சங்கப் பேரவை

தென்காசி மாவட்ட ஆட்டோ ஓட்டுனர் சங்கப் பேரவைக் கூட்டம் சிவகிரி கட்சி அலுவலகத்தில் செப். 25 அன்று ராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது ! மாவட்டச் செயலாளராக முனியாண்டி, மாவட்டத் தலைவராக ரத்தினசாமி, மாவட்டப் பொருளாளராக ராஜசேகர், துணைச் செயலாளராக ஜெகன், துணைத் தலைவராக சபரிராஜ் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் டி.சுப்பையா சிறப்புரையாற்றினார்.

## கைத்தறி விசைத்தறி ஏஐடியூசி பேரவை

தென்காசி மாவட்ட கைத்தறி விசைத்தறி ஏஐடியூசி பேரவை கூட்டம் புளியங்குடியில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளராக பி.வேலு, மாவட்டத் தலைவராக ஜி.முருகன், மாவட்ட பொருளாளராக மனு வேல்ராஜ், துணைத் தலைவராக எஸ்.ஆறுமுகம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மீனவ சங்கத் தலைவர் ஏ.பரமசிவம் பேரவையை வாழ்த்திப் பேசினார்.

# பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு கல்வி மாவட்டங்கள் தஞ்சாவூருடன் இணைப்பு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளரும், கருக்காடிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவருமான முத்து உத்திராபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தஞ்சை மாவட்டத்தில் பள்ளிகள் வளர்ச்சிக்கும், குறைபாடுகளை சரி செய்ய தேவையான ஏற்பாடுகளை உடனுக்குடன் செய்திட, தஞ்சாவூர் கல்வி மாவட்டமாக இருந்ததை, கடந்த 1968ல் இரண்டாகப் பிரித்து பட்டுக் கோட்டை கல்வி மாவட்டம் உருவாக்கப்பட்டு இரண்டு கல்வி மாவட்டங்களாக செயல்பட்டு வந்தன.

மேலும் கல்வி நலனை மேம்படுத்தவும், பள்ளிகளின் தரத்தை உயர்த்திடவும் 2008 ம் ஆண்டு கும்பகோணம் கல்வி மாவட்டமும், 2018 முதல் ஒரத்தநாடு கல்வி மாவட் டமும் உருவாக்கப்பட்டு சீரியமுறையில் செயல் பட்டு வந்தன. இந்நிலையில் கும்பகோணம் கல்வி மாவட்டத்தை தஞ்சாவூர் கல்வி மாவட்டத்துடனும், ஒரத்தநாடு கல்வி மாவட்டத்தை பட்டுக்கோட்டையுடனும் இணைக்கும் அரசாணை வெளியிடப்பட்டது. இது பள்ளி மற்றும் மாணவர்கள் நலன்களை பாதிக்கும் என்பதால் அந்த அரசாணையை கைவிட வலியுறுத்தி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மனு அளிக்கப்பட்டது. சமீபத்தில் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்திற்கு வந்த பள்ளி கல்வித்துறை அமைச்சர், கல்வி மாவட்டங்கள் இணைக்கப்பட மாட்டாது என்றும், தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, கும்பகோணம் கல்வி மாவட்டங்கள் தொடர்ந்து செயல்படும் என்றும் அறிவித்தார். அமைச்சர் அறிவிப்பிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை கல்வி மாவட்டங்கள் தஞ்சாவூர் கல்வி மாவட்டத்துடன் இணைப்பதாக அறிவிப்பு வந்துள்ளது பெரும் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் அளிக்கிறது. பட்டுக்கோட்டை கடைகோடியிலிருந்து தஞ்சாவூருக்கு வரும் ஆசிரியர்களுக்கு வந்து செல்லவே நேரம் சரியாகிவிடும். மற்ற வேலைகள் பாதிக்கப்படும். தஞ் சாவூரில் இருந்து ஒரத்தநாடு, பட்டுக்கோட்டையின் கடைக்கோடிக்கு ஆய்வுக்கு செல்லும் அதிகாரிகளும் அவசரத்திற்கு வர முடியாது. கடைகோடி கிராம மாணவர்களின் நலன்களும் பாதிக்கப்படும், பள்ளிகள் வளர்ச்சியும் பாதிக்கப்படும். ஏற்கனவே நல்ல முறையில் இயங்கி வந்த ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, கும்பகோணம், தஞ்சாவூர் கல்வி மாவட்டங்கள் தொடர்ந்து அமைச்சரின் அறிவிப்பிற்கு ஏற்ப தொடர்ந்து செயல்பட வேண்டும். ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை கல்வி மாவட்டங்களை தஞ் சாவூர் கல்வி மாவட்டத்துடன் இணைக்கும் முடிவினை கைவிட வேண்டும். ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை கல்வி மாவட்டங்கள் தொடர்ந்து சுதந்திரமாக இயங்க அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஏஐடியூசி சாலையோர வியாபார தொழிலாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்

சேலம் மாவட்ட ஏஐடியூசி சாலையோர வியாபார தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தெரு வியாபாரிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தை செப்.20 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சங்கத் தலைவர் ஏ.மோகன் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் எம்.முனுசாமி துவக்கி வைத்தார். பொதுச்செயலாளர் எம்.ஷாநவாஸ்கான், துணைத்தலைவர்கள் ஏ.முகமது இக்பால், கே.எம்.முகமது யூசூப், பொருளாளர் எம்.முகமது மீரா, செயலாளர்கள் ஆர்.வேல்முருகன், எம்.நந்தகுமார் ஆகியோர் கோரிக்கை உரையாற்றினர். மாவட்ட செயலாளர் டி.வி.கருணைதாஸ், மாவட்ட பொருளாளர் எஸ்.சம்பத் மற்றும் வியாபார தொழிலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## குமரி மாவட்டத்தில் குடிசைகளை இடிப்பதை தடுத்து நிறுத்திய இந்திய கம்யூனிஸ்டு கட்சி

குமரி மாவட்டத்தில் வடக்கு தாமரைக்குளம் பஞ்சாயத்தில் அண்ணா நகர் பகுதியில் அரசு நிலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் குடிசைகள் அமைத்து பல தலைமுறைகளாக வசித்து வருகின்றனர். இந்த குடிசைகளை இடிப்பதற்கு பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுத்து காவலர்களை குவித்து பொக்லைன் இயந்திரங்களோடு குடிசைகளை இடிப்பதற்கு தயாரான நிலையில், வடக்குதாமரைகுளம் சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் வி.அருணாச்சலம், சிபிஐ மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸை தொடர்பு கொண்டார். மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட அமைப்பாளர் செல்வராணி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு குடிசைகளை இடிப்பதை தடுத்து நிறுத்தினர்.

## பத்திரப்பதிவு துறையை கண்டித்து தெருமுனை கூட்டம்

மதுரை புறநகர் மாவட்டம் மேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெறும் கையூட்டு நடைமுறை களைக் கண்டித்து இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியினர் சார்பில் பேருந்து நிலையம் அருகே தெருமுனை கூட்டம் நடைபெற்றது. மேலூர் தாலுகா செயலர் பி.சுரேஷ் குமார் தலைமை வகித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் பா.காளிதாஸ், புறநகர் மாவட்ட செயலர் பி.முத்துவேல், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் க.மெய்யர் ஆகியோர் விளக்கிப் பேசினர். மேலூர் துணை செயலர் சந்திவீரன் நன்றி கூறினார். இதில் சார் பதிவாளரை இட மாற்றம் செய்ய வலியுறுத்தியும், கையூட்டு நடைமுறைகள் குறித்து சிறப்பு விசாரணை நடத்தக் கோரியும் முழக்கமிட்டனர்.

இக்கூட்டத்தில் பெண்கள் உள்பட 70 க்கும் மேற்பட் டோர் கலந்து கொண்டனர்.

### ஊரக உள்ளாட்சிகளில் பணியாற்றும்

## தூய்மைக் காவலர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டும்!

### ஏஐடியூசி தொழிலாளர் சங்கம் கோரிக்கை!

சத்தியமங்கலத்தில் ஊரக உள் ளாட்சிகளில் பணியாற்றும் தொழி லாளர்களின் நிர்வாகிகள் கூட் டம்,சங்கத்தின் தலைவரும், முன் னாள் சட்டமன்ற உறுப்பினருமான பி.எல்.சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் செயலாளர் கே.சக்தி வேல் தொழிலாளர்களின் கோரிக் கைகள் குறித்து விளக்கிப் பேசி னார். சிபிஐ மாவட்டச் செயலா ளர் சு.மோகன்குமார் சிறப்புரையாற் றினார்.

கூட்டத்தில் பின் வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

“தமிழ்நாடு முழுவதும் ஊரக உள் ளாட்சிகளில் 66 ஆயிரம் தூய்மைக் காவலர்கள் 2015 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறார்கள். அப்போது இவர்கள் வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வந்தனர்.

ஊரகப்பகுதிகளில் உள்ள வீடுகளில் சேகரித்து வைக்கப் படும் திடக்கழிவுகளை இவர்கள் சேகரித்து,அதற்கென்று ஒதுக் கப்பட்டுள்ள களத்திற்கு கொண்டு சென்று,மக்கும் மக்காத குப் பைகளென வகைபிரித்து,பின்னர் அவைகளை உள்ளாட்சி நிர்வாகம் செய்துள்ள ஏற்பாட்டின்படி மேலாண்மை பணிகளை செய்ய வேண்டும்.

2018 ஆம் ஆண்டு முதல் இவர்கள் வேலை உறுதியளிப்பு திட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு,மாதம் 2600/ ரூபாய் ஊதியத்தை மட்டும் பெற்று பணிபுரியும்படி செய்யப்பட்டார்கள். இதனால் ஏற்கனவே பெற்ற கூலிவை விட குறைவான கூலி யையே பெற முடிந்தது.

தொழிலாளர்கள் தொடர்ந்து முறையிட்டதன் பேரில் 2020 ஆம் ஆண்டு ஆயிரம் ரூபாய் கூலி உயர்வு மட்டும் கிடைத்தது.

கொரோனா காலத்தில் தயங்காமல் பணியாற்றிய இவர்களுக்கு அதற் கான ஊக்கத்தொகை ஏதும் வழங்கப்படவில்லை. நகர்புற உள் ளாட்சிகளில் இதே பணியை மேற் கொள்ளும் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் கூலியின் அள விலும் இவர்களுக்கு கூலி வழங்கப் படுவதில்லை.

அதிகரித்துவரும் விலையுயர்வை இவர்கள் பெறும் சொற்ப கூலியை கொண்டு சமாளிக்க முடியாமல் இத் தொழிலாளர்கள் திண்டாடி வரு கின்றனர்.

ஆகவே, ஊரக உள்ளாட்சிகளில் பணியாற்றும் தூய்மைக் காவலர்களை ‘அவுட்சோர்சிங்’ முறையில் இருந்து விடுவித்து,உள்ளாட்சி அமைப்புகளே நேரடியாக ஊதியம் வழங்க வேண் டும்..

உடனடியாக இத்தொழிலா ளர்களுக்கு மாத ஊதியத்தை பத்தா யிரமாக உயர்த்த வேண்டும் என்று அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

இக்கோரிக்கையினை வலியுறுத் தியும்,அரசின் கவனத்தை ஈர்க் கும் வகையிலும்,வரும் சட்டப் பேர வைக்கூட்டம் தொடங்கும் நாளி லிருந்து முடியும் நாள் வரை சத்தியமங்கலத்தில் காத்திருப்பு போராட்டத்தை நடத்துவது எனவும்,

கோரிக்கைகள் ஏற்கப்படாத பட்சத்தில், மாவட்ட ஆட்சியரிடம் அனைத்து தொழிலாளர்களும் பணி விலகல் கடிதத்தை கொடுப்பது என வும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

# 100 நாள் வேலைக்கு காலை 7 மணிக்கு வருகை பதிவேடு முறை

## ரத்து செய்யக் கோரி வி.தொ.ச. தீர்மானம்




விருதுநகர் மாவட்டம், சேத்தூரில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க இராஜபாளையம் வட்ட மாநாடு நடைபெற்றது. அமுல்ராஜ் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் வரதராஜன் கொடியை ஏற்றி வைத்தார். சிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஒன்றிய செயலாளர்கள் கணேசமூர்த்தி, இராமச்சந்திரன், தென்காசி தவிதொச முத்துசாமி, தவிச அய்யணன் ஆகியோர் பேசினர்.

தலைவராக அய்யணார், துணைத் தலைவர்களாக மாரிமுத்து, பிச்சைமுத்து, செயலாளராக அமுல்ராஜ், துணைச் செயலாளராக திருப்பதி, பொருளாளராக முத்துமாரி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

கிராமப்புற 100நாள் வேலை திட்டத்தை விவசாய வேலைகளுடன் இணைக்க வேண்டும், 100நாள் வேலைக்கு செல்பவர்களை காலை 7 மணிக்கு வரச்சொல்லி பதிவு என்ற பெயரால் இழுத்தடிப்பது பள்ளிக்கு அனுப்பும் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது, எனவே காலை 9மணிக்கு வருகை பதிவேடு எடுக்க வேண்டும்என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### அரசுத்துறை நிறுவனங்களில் மாவட்ட ஆட்சியர்

# நிர்ணயித்த குறைந்த பட்ச ஊதியத்தை அமலாக்குக!

ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கு, ஏஐடியுசி ஈரோடு மாவட்டக்குழுவின் சார்பில் மாவட்டத் தலைவர் எஸ்.சின்னசாமி அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணியாற்றும் நிரந்தரமற்ற தினக்கூலி பணியாளர்களுக்கு 2022–2023ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஊதியம் ஈரோடு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணைகள் மூலம் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குறைந்தபட்ச ஊதிய நிர்ணய செயல்முறை ஆணைகள் ஈரோடு மாவட்ட அரசிதழிலும் வெளியிடப் பட்டுள்ளது. அவற்றின்படி, தூய்மைப் பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு மாநகராட்சிகளில் ரூ.707, நகராட்சிகளில் ரூ.592, பேரூராட்சிகளில் ரூ.515, ஊராட்சிகளில் ரூ.438 குறைந்தபட்ச ஊதியமாக வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட அடிப்படையில் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் நிரந்தரமற்ற தினக்கூலி தூய்மைப் பணியாளர்களுக்கும், பாதுகாவலர்களுக்கும், பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

இதேபோல், ஓட்டுநர்கள், கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர்கள், டி.பி.சி. பணியாளர்கள் உள்ளிட்ட மற்றவர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஊதியத்தை வழங்க வேண்டும். ஆனால், மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஊதியம் நாளதுவரை ஈரோடு மாநகராட்சி, பவானி, கோபி, சத்தி, புளியம்பட்டி நகராட்சிகள், பெருந்துறை உள்ளிட்ட 42 பேரூராட்சிகள், 225 ஊராட்சிகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்ட, வட்ட அரசு மருத்துவ மனைகள் உள்ளிட்ட அரசுத்துறை நிறுவனங்களில் வழங்கப்படாமல் உள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஊதிய இழப்புக்கு ஆளாகி பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஆகவே, தாங்கள் உடனடியாகத் தலையிட்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும், அரசு மருத்துவமனைகளிலும் இதர அரசுத்துறை நிறுவனங்களிலும் 2022–2023 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஊதியத்தை 1.4.2022 முதல் முன்தேதியிட்டு வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

### புத்தாநத்தம் ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு

# பிரதி மாதம் 5ஆம் தேதி ஊதியம் வழங்குக

## ஏஐடியூசி ஊராட்சி தலைவரிடம் கோரிக்கை

மணப்பாறை ஒன்றியம், புத்தா நத்தம் ஊராட்சியில், திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர் ஏஐடியூசி சங்கம், புத்தாநத்தம் கிளை சார்பில், தூய்மை பணியாளர்களுக்கு பிரதி மாதம் 5 ஆம் தேதி ஊதியம் வழங் கவும், தமிழக அரசு அறிவித்துள்ள குறைந்த பட்ச ஊதியம் ரூ.6000 வழங்க நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தி ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்திடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

இம்மனுவை திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர் ஏஐடியூசி சங்க மாவட்ட பொறுப்பாளர் சுப்ரம ணியன், புத்தாநத்தம் கிளை தலை வர் ஜனசக்தி உசேன், சிபிஐ ஊராட்சி மன்ற உறுப்பினர் சிராஜ்தீன், மாவட்ட குழு உறுப்பினர் ஹக்கிம் சேட் ஒன்றியகுழு உறுப்பினர் மன்சூர், உள்ளாட்சி தொழிலாளர் ஏஐடியூசி சங்க புத்தாநத்தம் கிளை செயலாளர் பொம்மியம்மாள் உள்ளிட்ட ஏராள மானோர் கலந்து கொண்டனர்.

# சனாதன எதிர்ப்பு உறுதி ஏற்பு கூட்டம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் கள்ளக்குறிச்சி மாவட்டக்குழு சார்பில் சனாதன எதிர்ப்பு உறுதி ஏற்பு கூட்டம் உளுந்தூர்பேட்டை தாலுகா அலுவலகம் முன்பு நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு இயக் கத்தின் மாவட்ட செயலா ளர் எம்.வெங்கடேசன் தலைமை தாங்கினார். வட்ட செயலாளர் மீசை ஆறுமுகம் அனைவரையும் வரவேற்றார். மாநில செயலாளர் கே.எஸ். குமார் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். இதில் நிர்வாகிகள் செல்வம், நந்த கோபால கிருஷ்ணன், மாயகி ருஷ்ணன், அறிவழகன், நாரா யணன், ரவி, மணிகண்டன், இராதா கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக உழவர் சந்தை யிலிருந்து பெரியார் முழக் கத்துடன் அவருடைய படங்கள் ஏந்தி ஊர்வலமாக வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வந்து பின் பெரியார் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத் தினர்.

# மணப்பாறை, லால்குடி கல்வி மாவட்டமாக தொடர வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

திருச்சி மிளகுப்பாறை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் புறநகர் மாவட்டகுழு கூட்டம் உ.பக்கிரிசாமி தலைமையில் நடை பெற்றது. முன்னாள் மாவட்டச் செய லாளர் த.இந்திரஜித் அரசியல் உரை நிகழ்தினார்.

புதிய மாவட்ட நிர்வாகக் குழு உறுப் பினர்களாக த.இந்திரஜித், செ.ராஜ் குமார், ஆர்.பழனிச்சாமி, எஸ்.செல்வ ராஜ் உ.பக்கிரிசாமி, த.தங்க மணி, சி.தங்கராசு, ஜனசக்தி உசேன், எம்.சுப்பிரமணியன், ஜி.ஆர்.தினேஷ் குமார், எஸ்.சேகர், டி.முத்துகிருஷ் ணன், வி.ஆர்.மருதை மற்றும் தேர்வு உறுப்பினராக சி.வெள்ளக்கண்ணு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்ட துணைச் செயலாளர் களாக ஆர்.பழனிச்சாமி, த.தங்கமணி, பொருளாளராக உ.பக்கிரிசாமி ஆகி யோர் தேர்வு செய்யப்பட்டனர்.

திருச்சி மாவட்டத்தில் ஏற்கனவே இருந்தவாறு மணப்பாறை கல்வி மாவட்டம். லால்குடி கல்வி மாவட்டம் தொடர வேண்டும், துவாக்குடி முதல் பால்பண்ணை வரையிலான சர்வீஸ் சாலைக்கான பணியை அரசு உடனடியாக துவக்கி விரைந்து முடிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட நிர்வாகிகள் தேர்வு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டக் குழு கூட்டம் செப். 25 அன்று கோவை ஜீவா இல்லத்தில் வழக்கறிஞர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணை செயலாளர் என். பெரியசாமி, பொருளாளர் எம். ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். எம்.ஆறுமுகம், சி.சிவசாமி, கே. எம்.செல்வராஜ், வி.எஸ்.சுந்தரம், எஸ். ராதாகிருஷ்ணன், சி.தங்கவேல், பி மௌனசாமி, ஜே.ஜேம்ஸ், மு.வ.கல்யாணசுந்தரம், எஸ். மோகன், கே.ரவீந்திரன், ஆர். துரைசாமி, வி.ஆர்.பாண்டியன், சாந்தி சந்திரன், மௌ. குணசேகர் ஆகிய 15 பேர்கள் கொண்ட நிர்வாக குழு தேர்வு செய்ய ப்பட்டது. கட்சியின் மாவட்ட துணை செயலாளர்களாக ஜே.ஜேம்ஸ், மௌ.குணசேகர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட பொருளாளராக சி.தங்கவேல் தேர்வு செய்யப்பட்டனர். பி.ராஜப்பன் காரமடை மேற்கு, கே. ஜெகநாதன் பெரியநாயக்கன்பாளையம், வங்கிக்கு ஒருவர், எஸ். கோட்டியப்பன் கலை இலக்கிய பெருமன்றம் மற்றும் இஸ்கப், எஸ். சிவராஜ் ( பழங்குடி ) ஆனைமலை ஆகிய ஐந்து பேர் மாவட்ட குழு தேர்வு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

# வேதாரண்யம் பகுதியில் வடிகால் ஆறுகளில் வெங்காயத் தாமரை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகே முள்ளியாறு, மானங் கொண்டான் ஆறு ஆகிய முக்கிய வடிகால்களில் தண்ணீரை தடுக்கும் வெங்காயத் தாமரைச் செடிகளை அகற்றாததைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வேதாரணியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய துணைச் செயலாளர் அ.பாலகுரு,ஒன்றிய பொருளாளர் ப.முருகானந்தம்,விவசாய சங்க செயலாளர் எம்.ஏ. செங்குட்டுவன் ஆகியோர் தலைமை வகித்தனர். நாகை தொகுதி மக்களவை உறுப்பினர் எம்.செல்வராசு, இந்திய கம்யூனிஸட் கட்சியின் நாகை மாவட்டச் செயலாளர் சிவகுரு.பாண்டியன், துணைச் செயலாளர் த.நாராயணன், விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் கே.பாஸ்கர் உள்ளிட்டோர் பங்கேற்று கோரிக்கைகளை விலக்கிப் பேசினர். முள்ளியாறு, மனங்கொண்டான் ஆறு உள்ளிட்ட வடிகால் ஆறுகளில் முன்பு எப்போதும் இல்லாத அளவில் தேங்கி வளர்ந்துள்ள வெங்காயத் தாமரைச் செடிகளை அற்றாததைக் கண்டித்தும், நூறுநாள் வேலைத் திட்டத்திலாவது அகற்ற நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னதாக கட்சி அலுவலகத்திலிருந்து புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியே ஊர்வலமாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### வெங்காய சேமிப்பு கிடங்கை

# கிருஷ்ணன்கோவில் பகுதியில் அமைத்திடுக!

## த.வி.ச. வட்ட மாநாடு தீர்மானம்

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநாடு கிருஷ்ணன்கோவிலில் நடைபெற்றது. பாட்டகுளம் கடற்கரை தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ் செல்வன், கிருஷ்ணாபுரம் நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தவிச மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன், தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், வத்திராயிருப்பு வட்ட செயலாளர் கோவிந்தன், தென்னை விவசாயிகள் சங்க தலைவர் முத்தையா, வழக்கறிஞர் பால்ராஜ் ஆகியோர் பேசினர். வட்ட செயலாளர் பலவேசம் வேலை அறிக்கை தாக்கல் செய்து பேசினார்.

தலைவராக பாரதிதாசன், துணைத் தலைவர்களாக ரவிக்குமார், அய்யனார், செயலாளராக மம்சாபுரம் இராஜேந்திரசோழன், துணை செயலாளர்களாக செல்லையா, அய்யனார், பொருளாளராக தமிழ்செல்வன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். கிருஷ்ணன்கோவில் பகுதியில் வெங்காய விளைச்சல் அதிகமாக உள்ளதால் அரசு வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க வேண்டும், கண்மாய் கால்வாய் மராமத்து செய்து மழைநீரை தேக்கிடு, கூட்டுறவு பயிர்க்கடன் தங்க நகை இல்லாமல் வழங்கு, அனைத்து பயிர்களுக்கும் காப்பீடு முறையாக வழங்கு உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒன்றிய துணை செயலாளர் செல்வம் நன்றி கூறினார்.

# தமிழ்மொழியும் - அனுசரிப்பும்

உலகத்தின் மூத்த மொழிகளில் ஒன்றான செம்மொழித் தமிழ் குறித்தும், அதன் செழுமை குறித்தும். மூ வீரபாண்டியன் தமிழ் மொழியும் அனு சரிப்பும் என்கிற நூலை எழுதி இருக்கிறார். பெருமிதங்களிலோ அல்லது நம்பிக் கைகளிலோ தொன்மைகளை அணுகமுடியாது. அகழ்வாய்வுகள் நூல் ஆய்வு களை கொண்டே அணுக வேண்டும்.அதிலும் வரலாற்றை இயக்கவியல் பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் அணுகுவதே அறிவியலாகும். கீழடி ஆய்வுகளில் பல்வேறு பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்திலும், அரப்பா நாகரிகத்திலும் தமிழ் மொழி நிலவியது குறித்து பல்வேறு அறிஞர்கள் ஆராய்ந்து இருக்கிறார்கள் என தமிழின் தொன்மையை நிறுவியிருக்கிறார்.

இன்றைய உலகில் இந்தியா மட்டுமல்லாது கனடா, இலங்கை,பாகிஸ்தான், வங்கதேசம், ஆஸ்தி ரேலியா,கம்பூசியா,ஆப்கான், அமெரிக்கா, இங்கி லாந்து, மாலத் தீவு, அந்தமான், ஆப்பிரிக்கா என பல நாடுகளில் தமிழ் புழக்கத்தில் உள்ளது மட்டுமல்லாது சில நாடுகளில் தமிழ் ஆட்சி மொழி, நிர்வாக மொழி, தொடர்பு மொழி என வாழ்கிறது. இதன்மூலம் தமிழ் ஒரு வெகுமக்கள் மொழி என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. உலகத்தின் அனைத்து மொழிகளும் தங்கள் தூய்மை கெடுவதை ஏற்பதில்லை.ஒவ்வொன்றும் தம் தூய்மைக்காக போராடியே வந்துள்ளன. இருப்பினும் படையெடுப்பு, புலம்பெயர்தல்,வணிகம்,சுற்றுப்பயணம் என உலகம் தவிர்க்க இயலாத சூழலால், மானுட மொழிகள் ஒன்றோடொன்று கலக்கிறது ஒன்றை ஒன்று நிரப்பிக் கொள்கிறது. உழைப்புதான் விலங்கினை விலங்கு மனிதனாக உந்தியது, உழைப்பிலிருந்து தோன்றிய மொழி, பின்னர் உழைப்புத் திறனை செம்மைப்படுத்தியது அதனை வளர்த்தெடுத்தது. உழைப்பு மொழி, உற்பத்தி மொழி என சமூகம் படிமுறைகளைக் கண்டது.இதனோடு பண்பாடும் வளர்ந்தது.




சமுதாயம் இல்லாமல் உழைப்பு, மொழி இல்லை என்றாகியது. உழைப்பும், மொழியும் இல்லாமல் சமுதாயம் இல்லை என்றாகியது. மக்கள் வாழ்வோடு மூச்சோடு பின்னிப் பிணைந்தது மொழி. அனுசரிப்பு அநீதிகளை அனுசரித்துப் போவது அல்ல, மாறாக வேற்றுமைகளை மதிப்பது, பன்முகத்தை நாடுவது, ஒன்று, பிறிதொன்றுக்கு உதவி நிரப்பிக் கொள்வது. தன்னையும் பிறிதொன்றையும் செழுமைப்படுத்தும் கூட்டு இசைவு அது. இந்த பண்புக்கூறுகள் தமிழில் உண்டு. இதனால்தான் தமிழ் இன்றும் இளமையோடு வாழ முடிகிறது. மொழி மட்டுமல்ல மனிதர்களும் ஒருவரை ஒருவர் அனுசரித்து வாழ்வதே நல்லது என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும். **– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : மு.வீரபாண்டியன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–டி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 46 விலை: ரூ.35**


# நூல் நயம்

## தோழர் இரா.ஜவகர் நினைவுமலர்

மூத்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான மறைந்த தோழர் இரா. ஜவஹர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் தமிழகத்தின் தலைசிறந்த ஆளுமைகள் பலரின் கட்டுரைகளைக் கொண்ட நினைவு மலர் இயக்கமாய் மாறிய தோழர் என்கிற தலைப்பில் சிறந்த நினைவு மலரை தோழமைக் குடும்பத்தின் சார்பாக வெளியிட்டுள்ளனர்

“பொதுவாக கம்யூனிச கருத்துக்களை வலியுறுத்தும் புத்தகங்களை எளிய மக்கள் படிப்பது கடினம் என்று சொல்வார்கள்.அதை மாற்றி கம்யூனிசம் குறித்து, உலக கம்யூனிச இயக்கங்கள் குறித்து,இந்திய கம்யூனிச வளர்ச்சி குறித்து பாமரரும் தெரிந்து கொள்ளக்கூடிய, புரிந்து கொள்ளக்கூடிய வகையில் மிக எளிய நடையில் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றை மிக அற்புதமாக. அதாவது பிழையின்றி கூடுதல், குறைச்சல் இல்லாமல்.எதையும் மறைக்காமல் மிகைப்படுத்தாமல் உண்மையான வரலாற்றை சொல்லக்கூடிய வகையில் வாரந்தோறும் எழுதி வந்தது மிக சிறப்பானது” என இரா. ஜவகர் நக்கீரன் வார இதழில் வாரந்தோறும் எழுதி வந்த ‘கம்யூனிசம் நேற்று இன்று நாளை’ என்கிற தொடர் குறித்து தோழர் இரா. முத்தரசன் அற்புதமாக இந்நூலில் பதிவு செய்துள்ளார்

“எந்த நேரத்தில் ஒரு தகவல் தரவு வேண்டுமானாலும் அவரிடம் கேட்டுப் பெற முடியும். சான்றுகளைப் பெற முடியும். ஏன் ஆவணங்களை கூட பெற முடியும். ஒரு திறந்த நூலகம் போல் அவர் பணியாற்றினார் “ என அவரது அர்ப்பணிப்பு மிக்க வாழ்வியல் குறித்து தோழர் கே.பாலகிருஷ்ணன் சிலாகித்து எழுதியுள்ளார் .



“ கடவுள், கோயில், மறுபிறவி,சொர்க்கம், நரகம்,வைகுண்டம், கைலாசம், சாதி, மதம் போன்ற எந்த ஒரு கற்பிதத்திலும் எள் மூக்கு முனை அளவும் நம்பிக்கையற்ற ஒருவரின் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர் எங்கள் ஜவகர்.

அன்பு, பாசம், நட்பு,தோழமை போன்ற மனிதநேய விழுமியங்களுக்கு, ஒட்டுமொத்தமாக ஒரு வடிவம் கொடுக்க தூரிகையை கையில் எடுத்தால். அந்த தூரிகை தன்னிச்சையாக ஜவஹரின் உருவத்தைத் தான் தீட்டிக் காட்டும்“ என பேராசிரியர் சரஸ்வதி மிகச் சரியாகவே தோழர் ஜவகரின் பண்புகளை வரையறுத்துள்ளார்.

மார்க்சிய மனிதநேய பண்புகளில் பெட்டகமாகத் திகழ்ந்த தோழர் இரா. ஜவஹர் அவர்களைப் பற்றி இந்த மலர் அற்புதமாக பேசுகிறது. இம் மலரை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம் **– சமரன்**

**நூலாசிரியர் : டாக்டர் எஸ். வர்கீஸ் ஜெயராஜ் தமிழில்: யூசுப் ராஜா**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 16, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை14**
**பக்கங்கள் : 270 விலை: ரூ.220**

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

சுழலும் உலகம் — செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

# மக்கள் போராட்டமே

# இரத்தவெறி கொண்ட போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும்!

## கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டிமிட்ரி குத்சும்பாஸ் முழக்கம்






கிரீஸ் நாட்டின் கம்யூனிஸ்டு இளைஞர்களின் 48வது திருவிழா பல்வேறுபட்ட அரசியல் மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளுடன் சிறப்புற நடைபெற்றது. தெசலோனிக்கியில் நடைபெற்ற அத்தகைய நிகழ்ச்சி ஒன்றில் கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டிமிட்ரி குத்சும்பாஸ் உரையாற்றினார். சர்வதேச சமூக அரசியல் வளர்ச்சிப் போக்குகள், அவை பற்றிய கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் மதிப்பீடுகள் ஆகியவை குறித்து அவர் விரிவாகப் பேசினார். அதன் சுருக்கம் பின்வருமாறு:

நமது கட்சி, குறிப்பாக, கடந்த ஆறு மாத காலமாக, ஏகாதிபத்திய போருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. போருக்கான ஆயுதங்களை நமது நாட்டின் மூலமாக அனுப்புவது, நமது நாட்டைப் போருக்கான ஓர் இராணுவ தளமாக மாற்றுவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை கட்சி மேற்கொண்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

நமது இந்தச் செயல்பாட்டிற்கு, யூகோஸ்லாவியா மீது வெடிகுண்டுகள் வீசி தாக்குதல் நடத்திய நேட்டோ அமைப்புக்கு எதிராக 23 ஆண்டுகளுக்கு முன் இதே தெசலோனிக்கியில் நாம் மேற்கொண்ட போராட்டங்களே, இன்று நமக்கு உத்வேகம் அளித்துள்ளன. எனவே தான், உக்ரைனில் நடைபெற்று வரும் போருக்கான உண்மையான காரணங்களை நமது கட்சி முன்னிலைப்படுத்துகிறது.

அமெரிக்காநேட்டோஐரோப்பிய ஒன்றியம் கூறு வதைப் போல, இந்தப் போர் ஜனநாயகம் அல்லது சுதந்திரத் துக்காகத் தொடுக்கப்பட்ட போர் அல்ல; இன்றைய முதலாளித்துவ ரஷ்ய தலைமை கூறுவது போல், டான் பாஸ் பிரதேசத்தில் நீண்ட காலமாகத் துன்புற்று வரும் மக்களுக்காகவோ அல்லது பாசிசத்துக்கு எதிரான போராட்டம் என்ற நோக்கில் தொடுக்கப்பட்ட போர் அல்ல.

ஜனநாயகம், பாசிச எதிர்ப்பு எனும் புரட்டுகளுக்குப் பின்னால் மூலப்பொருட்கள், மின்சக்தி உள்ளிட்ட ஆற்றல், பொருட்களின் வர்த்தகத்துக்கான வழித்தடங்கள் மற்றும் சந்தைகள் மீதான ஏகபோக சக்திகளின் வர்க்க நலன்களே உள்ளன.

ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று, இலட்சக் கணக்கான மக்களை இடம்பெயரச் செய்த இந்தப் போர் நியாயமற்றது; கொள்ளையர்களுக்கு இடையேயான போர், இலாபத்திற்காக மனிதர்களை விழுங்கும் முதலா ளிகளுக்கு இடையிலான போர் !

1991ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் சிதைவுற்று, சோஷலிசம் தகர்க்கப்பட்டது தான், தற்போது மக்கள் இரத்தம் சிந்துவதற்கு அடித்தளமான காரணிகளைக் கட்டமைத்தது. ரஷ்யா, அதன் செல்வாக்குமிக்க பகுதிகள் என்று கருதிய பிரதேசங்களில் நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட அமைப்புகள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளன. சோஷலிசம் கோலோச்சிய காலத்தில் ஒற்றுமை உணர்வுடன் வாழ்ந்து வந்த உக்ரைன் மற்றும் ரஷ்ய மக்கள், தற்போது ஒருவரை ஒருவர் மாய்த்து வருகிறார்கள்.

கடந்த 30 ஆண்டுகளில், யூகோஸ்லேவியா, ஆப்க னிஸ்தான், லிபியா, சிரியா மற்றும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் நடைபெற்ற போர்கள் மற்றும் ஏகாதிபத்திய தலையீடுகளுடன் ஒப்பிடுகையில், உக்ரைனில் நடை பெற்று வரும் இந்தப் போர் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தனித்தன்மை கொண்டதாக இருக்கிறது. அணுமின் நிலையங்கள் மற்றும் கட்டமைப்புகளைக் கொண்ட ஒரு நாட்டின் பிரதேசத்தில் இந்தப் போர் நடைபெற்று வருகிறது. அணு ஆயுதங்கள் பயன்படுத்தப் படவில்லை என்றாலும் கூட, பேரிடர் ஏற்படக்கூடும்.

மேலும், இப்போரானது, ஒருபுறத்தில் அமெரிக்கா தலைமையிலான ஐரோப்பிய ஒன்றியம் ஞீ நேட்டோ அணி, மற்றொரு புறத்தில் சீனா தலைமையில் உருவாகி வரும் ஐரோப்பிய, ஆசிய நாடுகளின் அணி ஆகிய இரண்டிற்கும் இடையிலான ஒரு பொதுவான மோதலைக் குறிக்கிறது. உலகளாவிய முதலாளித்துவ அமைப்பின் தலைமைப்பீடத்துக்கான மோதலைப் பற்றித் தான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்; நவீன ஏகாதிபத்திய உலகில் அதிகாரத்துக்கான போட்டி பற்றித் தான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். அமெரிக்காநேட்டோ அணிக்கு உக்ரைனும், சீனாவுக்கு ரஷ்யாவும் உதவிகரமாக உள்ளன. முதலாளித்துவ சக்திகளுக்கு இடையிலான இந்த மோதலில் இவ்விரு நாடுகளின் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இவர்கள் மட்டுமின்றி, இம்மாபெரும் மோதல் ஏற்படுத்தியுள்ள பொருளாதார சீரழிவிற்கு ஐரோப்பிய கண்டம் முழுவதிலும் உள்ள மக்களும் பலியாகி வருகின்றனர்.

உக்ரைன்ரஷ்யப் போரின் தொடக்கத்திலிருந்தே ஐரோப்பிய ஒன்றியம் ஒரு தீவிரமான பங்கு வகித்து வருகிறது. 2014ம் ஆண்டில் உக்ரைனில் நடைபெற்ற, அரசியல் அமைப்புச் சட்ட நடைமுறைக்கு எதிரான அரசியல் நிகழ்வுகளில் ஐரோப்பிய ஒன்றியம் முக்கிய பங்காற்றியது. அத்தகைய அரசியல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேற பாசிச சக்திகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவளித்தது.

போர் நடவடிக்கைகளில் தீவிரமாக இயங்கி வரும் ஐரோப்பிய ஒன்றியம், மக்கள் நலனுக்கு எதிராக இயங்கி வரும் ஓர் அமைப்பாகும். ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளுக்குள் ஊடுறுவி தத்தம் இலாபத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்பும் ஏகபோக சக்திகளின் வர்க்க நலனைப் பாதுகாக்க முடியும் என்ற மதிப்பீட்டை ஐரோப்பிய ஒன்றிய அமைப்பு மேற்கொண்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள மக்கள் விரோத அரசாங்கங்கள், அவற்றின் இராணுவமயமாக்கத்தையும், உழைக்கும் மக்களின் இயக்கங்களுக்கு எதிரான முறைமைகளையும் மேலும் வலுப்படுத்திக் கொள்ள இப்போரானது வித்திடுகிறது.

போர் நடவடிக்கைகளில் கிரீஸ் நாட்டின் பங்கேற் பிற்கும், ஏகாதிபத்திய சக்திகளின் ஏவுதளமாகவும், இராணுவ துருப்புகளின் தளமாகவும் கிரீஸ் நாட்டைச் சீர் குலைத்ததற்கும் நேட்டோ ஆதரவு சக்திகளும் அரசாங் கமும் தான் பொறுப்பாகும்.

ஏகாதிபத்திய அணி மற்றும் அதன் சூழ்ச்சிகளில் இருந்து நமது நாட்டை உடனடியாகப் பாதுகாத்திட வேண்டும். அயல்நாட்டு இராணுவ தளங்கள் மூடப்பட வேண்டும். தேச எல்லைக்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ள இராணுவ வீரர்களைத் திரும்பப் பெற வேண்டும். உக்ரைன் போர் கிரீஸ் ஞீ துருக்கி இடையிலான உறவு மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யா மீதான தடைகள் ஐரோப்பிய மக்கள் மீது புதிய பொருளாதார சுமைகளை ஏற்றி உள்ளது. எனவே, அவைகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

கிரீஸ், துருக்கி மற்றும் நமது அண்டை நாடுகளில் உள்ள மக்களின் பிரச்சனைக்கு, மக்கள் போராட்டமே தீர்வு ஆகும். ஏகாதிபத்திய அணிகள் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களில் இருந்து மக்கள் தங்களை விடுவித்துக் கொண்டு, அவற்றின் சூழ்ச்சிகளுக்கு எதிராக மக்கள் முன்னெடுக்கும் போராட்டமே தீர்வாகும்.

மக்கள் போராட்டமே இரத்தவெறி கொண்ட போருக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் !

இவ்வாறு கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் உரையாற்றினார்.



# திருமூலர் பார்வையில் ஞானவாபி மசூதி...!

- நீ.சு.பெருமாள்



**உத்திரப்பிரதேச மாநிலம், பிரதமர் மோடியின் நாடாளுமன்றத் தொகுதியான வாரணாசியில் காசிவிஸ்வநாதர் கோயில் உள்ளது. இந்தக் கோயிலுக்கு அருகில் ஞானவாபி மசூதி உள்ளது. 1669 ஆம் ஆண்டில் அவுரங்கசீப் ஆட்சிக் காலத்தில் அங்கிருந்த ஒரு கோயில் அகற்றப்பட்டு இந்த ஞானவாபி மசூதி கட்டப்பட்டதாகக் கூறி தற்போது சர்ச்சை எழுந்துள்ளது.**

பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளது. மசூதியின் வெளிப்புறச் சுவரில் சிங்கார கவுரி அம்மன் சிலை இருப்பதாகவும் இந்த சிலைக்கு தினமும் வழிபாடு நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்று கடந்த ஏப்ரல் மாதத்தில் ஐந்து பெண்கள் வாரணாசி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை ஏற்ற நீதிமன்றம், மசூதியில் ஆய்வு நடத்தவும், வீடியோ பதிவு செய்யவும் வாரணாசி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. பலத்த பாதுகாப்புடன் ஞானவாபி மசூதியில் நடத்தப்பட்ட ஆய்வில் மசூதியில் சிவலிங்கம் இருப்பதாகக் கூறப்பட்டது. அது சிவலிங்கம் இல்லை. நீரூற்று என்று மசூதி நிர்வாகம் தெரிவித்துள்ளது. இப்போது அந்தப் பகுதிக்கு யாரும் செல்லமுடியாதபடி நீதிமன்ற உத்தரவின்படி சீல் வைக்கப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு வழிபாட்டுத் தலங்கள் சட்டப்படி ராமர் கோயில் பாபர் மசூதி வழக்கைத் தவிர எதிர்காலத்தில் எந்த ஒரு கோயிலோ அல்லது மசூதியோ பிற மதங்களின் வழிபாட்டுத் தலங்களையோ தங்களுக்கே சொந்தம் என நீதிமன்றங்களில் வழக்கு தொடரக் கூடாது.

1947 ஆம் ஆண்டிற்கு முன்னால் எப்படி வழிபாட்டுத் தலங்கள் இருந்ததோ அவை அனைத்தும் அவ்வாறே இருக்க வேண்டும். எந்த ஒரு பிரிவினரும் வழிபாட்டுத் தலங்கள் தங்கள் மதத்திற்குச் சொந்தமானது என பிரச்சனை செய்யக்கூடாது நீதிமன்றம் செல்லக் கூடாது என்றெல்லாம் அந்த வழிபாட்டுத் தலங்கள் சட்டம் சொல்கிறது.

நாங்கள் ஞானவாபி மசூதியை கேட்கவில்லை. வழிபாட்டு உரிமைதான் வேண்டும் எனக் கேட்பதால் இந்த 1991 வழிபாட்டுத் தலங்கள் குறித்த சட்டம் பொருந்தாது என்கிற புதிய விளக்கம் வழக்கு தொடுத்தோர் சார்பில் வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் ஒரு ராமர்கோயில் பாபர் மசூதி வழக்கு மாதிரி துவக்குவதற்கு தயாராகிவிட்டார்கள்.

நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான கோயில்களில் இருக்கும் சிவலிங்க சிலைகளின் வழிபாடு முடிந்துவிட்டது. இப்போது மசூதிக்குள் இருக்கும் சிவலிங்கத்தின் வழிபாடு தான் அவசியமாகிறது எனச் சொல்வது மத ரீதியான வெறுப்பு அரசியலையே உருவாக்கும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இந்த மாதிரி கருத்துகள் ஆன்மீகத்திற்கும் எதிரானது என்கிறார் திருமூலர். தமிழர்களின் ஆதி சைவ சமயத்திற்கு திருமந்திரம் எனும் தோத்திர நூலை வழங்கியவர் திருமூலர். “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” எனச் சொன்னவர். அவர் வாழ்ந்த காலத்திலும் இப்படி சமய உணர்வுகளை வைத்து மக்களைப் பிரித்து அதிகாரம் செலுத்தியிருக்கிறார்கள்.

இங்கேதான் கடவுள் இருக்கிறார். வேறெங்கும் கடவுள் இல்லை. எங்கள் வழிக்கு வாஞ் எங்கள் விதிகளைப் பின்பற்று; அப்போதுதான் இறையருள் பெறுவாய்! எனச் சொல்பவர்களைப் பார்த்து கழுதைகள் சப்தமிடுவதைப் போல கத்துகிறார்கள். கழுதைகள் மட்டுமே நினைக்குமாம் அந்த சப்தத்தை உலகம் இன்பமாக கேட்கிறது என்றுஞ்

தங்களுடைய குரலைக் கேட்டு உலகம் கடுப்பாவது கழுதைகளுக்குத் தெரியாது உலகத்தின் கருத்தை கவனத்தில் கொள்ளாது தம்பாட்டுக்கு இன்பமாகக் கத்திக் கொண்டிருக்கும் அவை. அந்த கழுதைகளைப் போலவே காள் காள் என்று கத்துகிறார்கள் மூதேவிகள் (கலதிகள்) என்று கடுமையாகச் சாடுகிறார் கடவுளின் பெயரால் சண்டை போடுபவர்களை பார்த்துஞ்

எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ள கடவுளை ஒரு குறிப்பிட்ட இடத்திலே குறிப்பிட்ட ஒரு குழுவினர் சுட்டும் திசையில் மட்டுமே இருக்கிறது எனச் சொல்வோரை திருமூலர் இவ்வாறு கழுதைகளுடன் ஒப்பிட்டு கண்டனம் செய்கிறார்

**“கத்தும் கழுதைகள் போலும் கலதிகள்**
**சுத்த சிவன்எங்கும் தோய்வுஉற்று நிற்கின்றான்**
**குத்தந் தெரியார் குணம்கொண்டு கோதாட்டார்;**
**பித்துஏறி நாளும் பிறந்துஇறப் பாரே”**

(திருமந்திரம்1538)

**ஞனாவாபி மசூதிக்குள் இருப்பதே கடவுள். அந்த மசூதி அவற்றில் இருக்கும் கவுரி அம்மனை வணங்கினால் மட்டுமே மோட்சம் கிடைக்கும் என்கிற வகையில் நீதிமன்றக் கதவுகளைத் தட்டுவோரை ஆன்மிகத் தளத்தில் இருக்கும் திருமூலர் கழுதைகள் என்கிறார்!**

திருமூலர் வேறொரு இடத்தில் மதமும் மதுவும் ஒன்று என்கிறார். இரண்டுமே அறிவைக் கெடுப்பவை என எச்சரிக்கை செய்கிறார். தம் சொந்த வாழ்க்கையில் வருகின்ற துன்பங்களை உரிய முறையில் எதிர்கொள்ள முடியாமல் சிலர் மதுவை உண்டு, தன்நிலை மறந்து செயற்கையான முறையில் தற்காலிகமாக இன்பம் காணுகிறார்கள். மது வெறியால் உலகத்தை மறக்கிறார்கள்.

வேறு சிலரோ உலகத்தை மறப்பதற்கு மதம் உதவும் என்று கருதி மதவெறி கொண்டு மயங்குகிறார்கள். தமக்கு ஏற்படுகின்ற துன்பங்களை எதிர்கொள்வதற்கு மதுவை நம்புபவர்கள் முட்டாள்கள் என்றால், மதத்தை நம்புபவர்கள் அடிமுட்டாள்கள் எனச் சாடுகிறார் திருமூலர்.

துன்பங்களை வெல்வதற்கு அறிவை விழிப்பாக கூர்தீட்டி வைக்க வேண்டும். காலில் காயம் ஏற்பட்டு வலி உண்டாகிறது எனில், காயத்தை ஆற்றுவதற்கான மருந்துதான் தீர்வே தவிர வலி நிவாரணி மட்டுமே தீர்வாக இருக்கமுடியாது. ஒருவனின் அறிவை விழிப்படைய வைக்காமல் மதம் பாதுகாக்கிறது எனில் அது மதம் அல்ல.. மலம்! என்று வன்மையாகக் கண்டிக்கிறார் திருமூலர்!

**“மயக்கும் சமய மலமன்னும் மூடர்**
**மயக்கும் மதுஉண்ணும் மாமூடர், தேரார்**
**மயக்குஉறு மாமாயை மாயையின் வீடு**
**மயக்கில் தெளியின் மயக்குஉறும் அன்றே”**

(திருமந்திரம் 329)

இன்றைய நிகழ்கால இந்திய அரசியலில் மத மயக்கம், மது மயக்கம் இரண்டுமே தலைவிரித்து ஆடுகிறது. ஆகவேதான் இந்த மயக்கத்தில் இருப்போரை ஆட்சியாளர்கள் வெகு சுலபத்தில் ஏமாற்றிவிடுகிறார்கள். ஏமாற்றிக் கொண்டும் இருக்கிறார்கள்.

வரலாறு காணாத வகையில் விலைவாசி உயர்வு, அதற்கு அடித்தளமாக அமைவது பெட்ரோல் டீசல் விலை உயர்வு, கோடிக்கணக்கான குடும்பங்கள் அன்றாடம் பயன் படுத்தும் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு, கோடிக் கணக்கான இளைஞர்கள் படித்து பட்டம் பெற்ற பின்னும் வேலையில்லா திண்டாட்டத்தில் சிக்கிச் சீரழிகின்றனர்.

உயர்கல்வி பெறுவதற்காக வங்கியில் பெற்ற கல்விக் கடனை அடைக்க முடியாமல் திணறுகின்ற இளைஞர்கள் ஒருபக்கம்ஞ் விரல்விட்டு எண்ணக் கூடிய தொழில் அதிபர்களுக்கு கடந்த ஏழு ஆண்டுகளில் மட்டும் பத்து லட்சம் கோடி ரூபாய் வரிச்சலுகை என இதே சமகாலத்தில் நிகழும் அவலம் இன்னொரு பக்கம் என இப்படி இந்த தேசத்தை ஆட்டுவிக்கின்ற பிரச்சனைகள் ஏராளம் இருக்கையில், இங்கு தான் என் கடவுள் இருக்கிறார். இங்கே தான் நான் போய் வழிபட வேண்டும் என்று ஒரு குழுவினர் நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள் என்றால் இவர்களை என்னவென்று சொல்வது...

அண்மையில் கோவா சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் 8 பேர் கடவுளின் பெயரால் கட்சிமாறி பாஜகவுக்கு சென்றுவிட்டதாக அறிவித்தனர். இந்த அறிவிப்பு அனைவரின் புருவங்களையும் உயர்த்தியது. கட்சி மாறுவதற்கு கோடிகள் துணை என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் கடவுளை ஏன் துணைக்கு அழைக்கிறார்கள்? அதற்கும் காரணம் உண்டு.

தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் சட்டமன்ற வேட்பாளர்களாக போட்டியிட்டபோது, கோயில், மசூதி, தேவாலயம் என அந்தந்த வேட்பாளர் நம்பும் வழிபாட்டுத் தலத்திற்குச் சென்று நாங்கள் சட்டமன்ற உறுப்பினராக தேர்வானால் ஒருபோதும் கட்சி மாறமாட்டோம் என சத்தியம் செய்ய வைத்திருக்கிறது காங்கிரஸ் கட்சி!

ஏனெனில் கடந்த கோவா சட்டமன்றத்தில் காங்கிரசுக்கு 17 உறுப்பினர்கள் இருந்தனர். இதில் 15 பேர் பாஜகவுக்குச் சென்றுவிட்டனர். எனவே கடவுளுக்காவது பயப்படட்டும் என்பதற்காக தற்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சத்தியம் வாங்கியது காங்கிரஸ்கட்சி.

இந்த நிலையில் தற்போது சத்தியம் செய்தவர்கள் கட்சி மாறி பாஜகவுக்குச் சென்றுவிட்டார்கள். கோயில், மசூதி, தேவாலயத்தில் தேர்தலின்போது கட்சி மாறமாட்டோம் என சத்தியம் செய்தீர்களே என்ன ஆயிற்று என பத்திரிக் கையாளர்கள் கேட்க, நாம் சத்தியம் செய்த கடவுளிடம் மீண்டும் கேட்டோம்; பாஜகவுக்குச் செல்வதே சிறந்தது என கடவுள் சொல்லிவிட்டதாக கட்சிமாறிகள் பதில் சொல்ல தலை சுற்றி நின்றனர் பத்திரிகையாளர்கள்..!

அதாவது கடவுளே கட்சிமாறச் சொன்னாராம். இந்த நிகழ்வைப் பார்த்த, கேட்ட எந்த பக்தர்களும் பொங்கவில்லை. எங்கள் மனம் புண்பட்டுவிட்டது என யாரும் புலம்பவில்லை. தேவையில்லாமல் கடவுளை இழுத்து கேவலப் படுத்துகிறார்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. இப்போது புரிகிறது கழுதைகளின் கத்துதல் கழுதைகளுக்கே இன்பமானது எனச் சொன்ன திருமூலரின் வாசகம்.

தொடர்புக்கு: **94426 78721**



## தோழர்கள் டி.எஸ்.ரவீந்திரதாஸ்-&சசிகலாதேவி இல்ல திருமண விழா

ஜனசக்தி இதழில் பணிபுரிந்த டி.எஸ்.ரவீந்திர தாஸ், சசிகலாதேவி ஆகியோரின் மகன், தமிழ்நாடு பத்திரிக்கையாளர்களின் சங்க மாநில தலைவர் டி.எஸ்.ஆர்.சுபாஷ் இல்ல திருமண வரவேற்பு விழா சென்னையில் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு, தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன், முன்னாள் தமிழக அமைச்சர் ஹெச்.வி.ஹண்டே, இந்திய குடியரசு கட்சியின் தலைவர் செ.கு.தமிழரசன் ஆகியோர் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## கண்ணம்பாளையத்தில் தியாகிகள் பட கல்வெட்டு

கோவையை அடுத்த கண்ணம்பாளையத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகமான பாலன் இல்லத்தில் சுதந்திர போராட்ட தியாகிகள் பட கல்வெட்டு திறப்பு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கலந்துகொண்டு கல்வெட்டை திறந்து வைத்தார்.

இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் கோவைக்கு முக்கிய பங்கு உண்டு அதிலும் சூலூர் விமான நிலைய எரிப்பு போராட்டம் மற்றும் ரயில் கவிப்பு போராட்டம் முக்கியமானதாகும்.

இந்தப் போராட்டங்களில் சூலூர் பள்ளபாளையம், கண்ணம்பாளையம், இருகூர் போன்ற கிராமங்களின் மக்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

சூலூர் விமான நிலைய எரிப்பு போராட்டத்தில் கண்ணம்பாளையத்தை சேர்ந்த தியாகி கே. வி. ராமசாமி தலைமையேற்று நடத்தினார். சிங்காநல்லூர் ரயில் கவிழ்ப்பு போராட்டத்தில் கண்ணம்பாளையத்தை சேர்ந்த ஸ்டாலின் சின்னையன், கே.வி.கூத்தண்ணன், கே.வி.பழனியப்பன், கே.கே. பழனி கவுண்டர், கே.ஆர். ராமசாமி உள்ளிட்ட தோழர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

இவர்களது உருவப்படம் பொறித்த கல்வெட்டு இரா. முத்தரசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### இரா.முத்தரசன் திறந்து வைத்தார்




பின்னர் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரிசளிப்பு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிகளுக்கு முன்னால் பேரூராட்சி தலைவர் பெ.மௌனசாமி தலைமை தாங்கினார். பி சுப்பிரமணியம், இர. மாலதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வே வசந்தகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி, மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் மௌ. குணசேகர் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023 WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 01.10.2022 at Egmore RMS 1 / Patrika Channel. Registered with Registrar of Newspapers for India, Under Regd No: 1222/57

# ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடுகள்













**தஞ்சாவூர் :** ஏஐடியூசி கட்டுமான தொழிலாளர் சங்க தஞ்சை மாவட்ட 8–வது மாநாடு ஒரத்தநாட்டில் செப்.25 அன்று நடைபெற்றது. மாநாட்டை மாநில பொதுச்செயலாளர் கே.ரவி தொடங்கி வைத்து பேசினார். மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாவட்ட பொருளாளர் சௌந்தர்ராஜன் வரவு செலவு அறிக்கை வாசித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் முத்து உத்தரா பதி, ஏஐடியூசி மாவட்ட தலைவர் சேவையா, விவசாயிகள் சங்க கிருஷ்ணன், விவசாய தொழிலாளர் சங்க சின்னத்தம்பி, சுமைதூக்கும் தொழிலாளர் சங்க முருகேசன், நுகர்வோர் வாணிபக் கழக தியாகராஜன், தெரு வியாபாரிகள் சங்க முத்துக்குமரன், பண்ணை சங்க பகத் சிங், சிபிஐ ஒன்றிய செயலாளர் வாசு இளையராஜா மற்றும் கட்டுமான சங்க நிர்வாகிகள் சி.சுகுமாரன், சேகர், ராமையன், சிகப்பி அம்மாள், செல்வராஜ், பாலசுப்ரமணியன், மணி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக ஒரத்தநாடு அண்ணா சிலையில் இருந்து பேரணியை அரசு பண்ணை சங்க மாநிலத் துணைத் தலைவர் திருநாவுக்கரசு தொடக்கி வைத்தார். ஒரத்தநாடு தலைவர் செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார். பாலகிருஷ்ணன் நன்றி உரை ஆற்றினார். புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

**திருச்சி :** தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்க திருச்சி மாவட்ட 6வது மாநாடு பேரணி கொடியேற்று விழாவுடன் செப். 25 அன்று தொடங்கியது. இனாம்குளத்தூர் ஒத்தக்கடையில் இருந்து தலைமை குழு தோழர்கள் பி.வீராசாமி, எம். மருதம்பாள், கே.எஸ். சங்கரதாஸ் ஆகியோர் தலைமையில், மாநாட்டின் கொடியை மாவட்ட தலைவர் க. சுரேஷ் எம்.சி. ஏற்றி வைத்து உரையாற்றினார் மாநாட்டு பேரணியை மாவட்ட செயலாளர் சி.செல்வகுமார் கொடியசைத்து துவக்கி வைத்து உரையாற்றினார். மாநாட்டில் மணிகண்டம் ஒன்றிய பொருளாளர் எஸ்.முத்தழகு வரவேற்புரை ஆற்றினார். அஞ்சலி தீர்மானத்தை பி.துரைராஜ் முன் வைத்தார். மாநிலச் செயலாளர் ஆர்.துரைசாமி மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். மாநாட்டை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, அரசு போக்குவரத்து கழக மாவட்ட செயலாளர் எம்.சுப்பிரமணி, சிபிஐ மணிகண்டம் ஒன்றிய பொருளாளர் கே.என்.ஜெகநாதன், பெண்கள் சங்க மாநில குழு உறுப்பினர் டி.நிர்மலா ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி உரை நிகழ்த்தினர்.

மாநாட்டில் கௌரவத் தலைவராக க. சுரேஷ் எம்.சி., தலைவராக எம்.ஆர்.முருகன், செயலாளராக சி.செல்வகுமார், பொருளாளராக பி.பழனியப்பன், துணைத் தலைவர்களாக எஸ்.முத்தழகு, எஸ்.முத்து லெச்சுமி, பி.பாலசுப்பிரமணி, பி.துரைராஜ், துணைச் செயலாளர்களாக எம்.மருதம்பாள், பி.வீராசாமி, கே.எஸ. இருதயசாமி, எம்.சுமதி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகளை வாழ்த்தி தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற திருச்சி மாநகர் மாவட்ட தலைவர் எம்.செல்வராஜ் உரையாற்றினார்.

மணிகண்டம் ஒன்றியத்தில் 128 தொழிலாளர்களுக்கு இலவச இடமும் இலவச பட்டாவும் வழங்கி அதன் அனைத்து வேலைகளையும் முழுமையாக முடித்த அதிகாரிகளுக்கு நன்றி கூறியும், இன்னும் நிலுவையில் உள்ள 123 பயனாளிகளுக்கும் உடனே இலவச பட்டாவும் இலவச வீட்டு மனை வழங்க வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இனாம்குளத்தூர் ரயில்வே கேட்டிற்கு மேம்பாலம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இனாம் குளத் தூர் ஊராட்சி மன்ற 4வது வார்டு உறுப்பினர் பி. கலைச்செல்வன் நன்றி கூறினார்.

**தென்காசி:** தென்காசி மாவட்ட கட்டட தொழிலாளர் சங்க மாநாடு செப். 25 அன்று ஏஐடியூசி மாவட்டத் தலைவர் சி.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத் தலைவராக பி.சக்திவேல், மாவட்ட செயலாளராக எஸ்.ஆழ்வார், மாவட்ட பொருளாளராக எல்.கிருஷ்ணராஜ், துணைத் தலைவர்களாக திருமலையம்மாள், இருதய செல்வராஜ், துணைச் செயலாளர்களாக சரஸ்வதி, லிங்கத்துரை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டை வாழ்த்தி சிபிஐ தென்காசி மாவட்ட செயலாளர் தி.இசக்கித்துரை, ஏஐடியூசி தென்காசி மாவட்ட பொதுச்செயலாளர் டி.சுப்பையா, ஏஐடியூசி மாவட்ட கௌரவ தலைவர் ஏ.சாமி, எஸ். மாரியப்பன், நாகையா, கே.பழனிச்சாமி, எஸ்.சுந்தர் ஆகியோர் பேசினர்.

**குமரி:** தமிழ்நாடு ஏஐடியூசி குமரி மாவட்ட கட்டட தொழிலாளர் சங்கத்தின் அமைப்புநிலை மாநாடு செப்.25 அன்று மார்த்தாண்டத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் மாவட்டதலைவர் கே.சி.துரைராஜ் தலைமை தாங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் வி.அருள்குமார் வரவேற்றார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் அமைப்பு நிலை மாநாட்டை தொடங்கி வைத்தார்.ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஜி.சுரேஷ்மேசியதாஸ் செயல் அறிக்கையை வாசித்தார்.

சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர், ஆர்.கே.சிரிகுமார், நாராயணசுவாமி, கல்யாணசுந்தரம், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் சஜேஷ், பூதப்பாண்டி பேரூராட்சி துணை தலைவர் அனில்குமார் ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி பேசினர்.

மாநிலக்குழு சார்பில் எஸ்.சேது வாழ்த்தி பேசினார். இறுதியில் ஏஐடியூசி பெண்கள் அமைப்பு செயலாளர் செல்வராணி நன்றி கூறினார்.மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**திருவண்ணாமலை:** தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் திருவண்ணாமலை மாவட்ட அமைப்பு நிலை மாநாடு கீழ்பென்னாத்தூர் சகுந்தலா திருமண மண்டபம் சந்திரன் அரங்கத்தில் க.பெரமன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டில் ஏஐடியூசி கொடியை வே.முத்தையன் ஏற்றினார். பி. சரவணன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். பெ. கனகராணி வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளர் ஆர்.துரைசாமி மாநாட்டினை துவக்கி வைத்து சங்கத்தின் வரலாறு பற்றியும், எதிர்கால சங்க கடமைகள் குறித்து விளக்கமாக பேசினார். சிபிஐ மாவட்ட செயலாளர் ஆர்.தங்கராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் த.ராசேந்திரன், எம்.ஞானவேல், தவிச. எஸ். ராஜா, ஏஐஒய்எப் எஸ். சர்தார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். எம். எஸ். மாதேஸ்வரன் செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தார். வரவு செலவு அறிக்கை பி. சங்கர் கொண்டு வந்தார்.

மாவட்ட கௌரவ தலைவராக வே.முத்தையன், மாவட்ட தலைவராக கி.ஜீவானந்தம், மாவட்ட பொதுச் செயலாளராக எம்.எஸ்.மாதேஸ்வரன், மாவட்ட துணைப் பொதுச் செயலாளராக சி. பன்னீர்செல்வம், மாவட்ட துணைத் தலைவராக ஆர்.செல்வராஜ், எஸ். மலர், மாவட்ட செயலாளர்களாக பெ.கனகராணி, க.ஜோதி, மாவட்ட பொருளாளராக பி.சங்கர் மற்றும் மாவட்ட நிர்வாகிகளாக 15 பேர் தேர்வு செய்யப்பட்டார்கள். முடிவில் திருமூர்த்தி நன்றி கூறினார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.